பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 22 ஏப்ரல் 2017 | விதி : 45




மூளுமா
3ஆம் உலகப் போர்?



குப்பைமேட்டு
கொலைகள்



இயேசுநாதரும்
பிரேமானந்தாவும்



தாஸ் எரிந்த
சிதையிலேயே எரிக்கப்பட்ட
சிறிசபாரத்தினம்

# ஆனையிறவு:
## வியூகங்களை வென்ற வேங்கைகள்



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்கதை 44

# ஆறாவடு

■ சயந்தன்

"ஒரு பிரச்சினையும் இல்லை. எல்லாம் அதற்கு ஏற்ப நடக்கும். ஆனா, அமுதன் ஒரு பணிக்குப் போன இடத்தில அந்த நேரத்தை எடுத்து இப்படி நடந்து கொள்ளுறது சரியானதில்லை" என்று அவர் சொன்னார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு நிமிட நேரம் கூடச் செலவு செய்யாமல் காதல் என்ன இரவோடிரவாக வந்து என்னோடு படுத்துக்கொள்ளுமா என்று கேட்க வேண்டும் போலிருந்தது. இப்படியெல்லாம் யோசித்துக் கொள்வதே புதுமையான அனுபவமாயிருந்தது.

இப்போதெல்லாம் இன்றைய காக்கை வன்னியனும் அன்றைய பண்டார வன்னியனும் என்றைக்கோ சொல்லியிருந்த " போர் என்றால் புலிக்குணம் பொங்கும் இன்பக் காதல் என்றால் பூமணம்" என்ற வார்த்தைகள் நினைவுகளில் வந்து போயின. அப்போது வெட்கப் புன்னகையும் தோன்றிற்று. " என்ன அமுதன், தனியச் சிரிக்கிறாய்" என்று நண்பர்கள் கேலி செய்தார்கள்.

அகிலா காதலை வீட்டில் தெரியப்படுத்தியிருந்தாள். அவள் இரண்டு தடவை கிளிநொச்சிக்கு வந்து சந்தித்தாள். இரண்டாவது தடவை அவளது அப்பாவும் கூடவே வந்தார். அவர் சொல்லிக் கொள்கிற மாதிரி எதுவும் பேசினார் இல்லை. பொத்தம் பொதுவாக "எல்லா அப்பாமார்களும் தங்கடை பிள்ளை நல்லதொரு வாழ்க்கை வாழ வேணும் என்றது தான் விருப்பம்" என்று சொன்னார். அப்பொழுது நானும் அதனை ஆமோதிப்பது போலத் தலையாட்டினேன்.

" அகிலா ஒரேயொரு மகள். அவவின்ரை ஆசைகளுக்கு குறுக்கை நிக்க எங்களுக்கு விருப்பமில்லை. நாங்கள் சிலதை விட்டுக்கொடுக்கிற மாதிரி அவையும் சிலவற்றை புரிஞ்சு நடக்க வேணும்."

அவரைப் புரிந்து கொள்வது சிரமமாக இருந்தது. அகிலா அவரைப் பொருட்படுத்திய மாதிரி தெரியவில்லை. அவள் அடிக்கடி நேரத்தைப் பார்த்த வண்ணம் பேசியபடியிருந்தாள். நாங்கள் மூவரும் வட்டக் கொட்டிலொன்றில் உட்கார்ந்திருந்தோம். அருகாகப் போன போராளிகள் சற்றுத் தலையைத் தாழ்த்தி எங்களைப் பார்த்துச் சென்றனர். அது ஒரு மாதிரியான இயல்புக்கு மாறான சூழலாக எனக்குத் தோன்றிற்று.

"அகிலா, இப்படி அடிக்கடி இங்கை வர வேண்டாம்."

"நீங்கள் யாழ்ப்பாணம் வர மாட்டீங்களா?" அகிலா என் கண்களைப் பார்த்தபடி கேட்டாள். தலையைத் தாழ்த்திக் கொண்டு "இப்போதைக்கு கஷ்டம்" என்றேன்.

அவர்கள் புறப்பட்ட போது வீதி வரை வந்து அனுப்பினேன். அப்பொழுது அகிலாவின் அப்பா அருகில் வந்து நின்றார். நான் சப்பாத்து அணிந்திருக்கவில்லையாதலால் செயற்கை கால் பாதம் வெளித்தெரிந்தது. சற்று நேரத்திற்கு அதனையே கூர்ந்து பார்த்தபடி நின்றார். பின்னர் சுற்றும் முற்றும் பார்த்து யாரும் அருகில் இல்லையென்று உறுதிப்படுத்திக் கொண்டார். தாழ்த்திய மெலிதான குரலில் "இயக்கத்தில ஐந்து வருசம் இருந்தால், விலத்தி வரலாம் என்று சொல்லுகினம் உண்மையோ, நீர் எத்தினை வருசமா இருக்கிறீர்" என்று கேட்டார். நான் பதிலேதும் சொல்லவில்லை. "சரி, போயிட்டு வாங்கோ" என்றேன்.

நான் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய இயக்கத் தேவையெதுவும் இருக்கவில்லை. எனது அடையாள அட்டையைத் திரும்பப் பெற்றிருந்தார்கள். புலிச்சின்னமிட்ட அவ் அட்டையில் பெயரும் உறுப்பினர் இலக்கமும் எழுதப்பட்டிருந்தது. அது எனக்கான பனிஸ்மெண்டின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்று அன்று இரவு தோன்றிற்று. அன்றைக்குத் தூக்கம் வரவில்லை. காதல் ஒரு தனிமனிதனின் சுதந்திரமில்லையா என்ற யோசனை அன்றைக்குத்தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும்.

முன்பொருநாள் நேரு ஐயா. சொல்லியிருந்தார். " நீங்கள் இனத்தின்ர சுதந்திரத்துக்காக என்று சொல்லிக்கொண்டு, தனி மனிதரின்ரை சுதந்திரங்களில தலையிட்டுத் தடுக்கிறீங்கள். அது சரியில்லை."

அவர் எதைக் குறித்துச் சொன்னார் என்று சரியாக நினைவில்லை. வன்னியில் சினிமாப் படங்களைத் தடைசெய்தபோது அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். நான் பதிலுக்கு "அண்ணைக்கு எல்லாம் தெரியும்" என்று சொல்லியிருக்கக்கூடும். நேரு ஐயாவின் நிறையக் கேள்விகளை நான் எப்பொழுதும் அப்படித்தான் எதிர்கொண்டேன்.

"அண்ணைக்கு எல்லாம் தெரியுமா" என்றொரு கேள்வி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றுவது ஆச்சரியமாயிருந்தது. அப்பொழுது மனதும் உடலும் ஒருங்கே பதற்றமடைவதாய்த் தோன்றிற்று. ஆனால் நேரு ஐயா சொல்லியுள்ளார். " கேள்வி கேட்கவேணும். அது ஒரு மனிதன்ர உரிமை, அதே மாதிரி ஆகக் குறைஞ்சது கேள்வி கேட்கிறதை நீங்கள் அனுமதிக்க வேணும். அது உங்கடை கடமையும் கூட..."

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னான நேரு ஐயாவின் ஒவ்வொரு வார்த்தைகளையும் நான் நினைவுபடுத்த முயன்றேன். " நீங்கள் முதலில் சனத்தின்ரை மனநிலையை புரிந்துகொள்ள வேணும். நீங்கள் எடுக்கிற முடிவுகளை அவர்களில திணிக்க முடியாது. ஒரு உதாரணத்திற்கு... பேச்சு வார்த்தை நடக்குது. அதில இருந்து நீங்கள் விலகப் போறதென்றால் உங்கடை பாட்டிற்கு விலக முடியாது. சனம் எதை விரும்புகினம் என்றதை அறிய வேணும். அதன்படிதான் உங்கடை முடிவு இருக்கவேணும்."

நான் நேரு ஐயாவை நினைவுகளில் கொண்டுவர முயற்சித்தேன். வெறும் மேலுடனும் வெண்ணிறத் தாடியுடனும் ஈஸி செயரில் சாய்ந்தபடி நெஞ்சு மயிர்களைக் கைகளால் வருடியபடி நேரு ஐயா எனக்குள் பேசினார்.

"நீங்கள் முதலில அமுதன்ரையும் அகிலாவின்ரையும் மனநிலையைப் புரிந்துகொள்ள வேணும். நீங்கள் எடுக்கிற முடிவுகளை அவர்களில் திணிக்க முடியாது. ஒரு உதாரணத்திற்கு அமுதன் அகிலாவைச் சந்திக்க விரும்புறார். உங்கடை பாட்டிற்கு இல்லையென்று தடுக்க முடியாது. அவர்கள் எதை விரும்புகினம் என்பதை அறிய வேணும். அதன்படிதான் உங்கடை முடிவு இருக்க வேணும்."

கண்ணயருகிற நேரம், அகிலாவின் அப்பாவின் குரல் காதுகளில் இரைந்தது. இயக்கத்தை விட்டு விலகுவதைப் பற்றி நான் நினைத்தும் பார்த்திருக்கவில்லை. அகிலாவை அன்றைக்கும் கேட்ட போது நான் இயக்கத்தில் தொடர்ந்தும் இருப்பதே தனக்கும் பெருமையென்றே அவள் சொல்லியிருந்தாள். இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது என்று எனக்கு ஏன் தோன்றுகிறது.

விலகுவதற்கான துண்டைக் கொடுத்தால் பங்கர் காலத்தையும் உள்ளிட்டு எப்படியும் மூன்று வருடங்களுக்காவது பனிஸ்மென்ட் கிடைக்கும். அப்படியொன்றை நினைத்துப் பார்க்க விசர் பிடிக்குமாற்போல இருந்தது. முன்னர் சண்டைகளில் அறிமுகமான நண்பனொருவன் திருமணத்தின் பின் விலகுதற் பொருட்டு இப்பொழுது தண்டனை அனுபவித்தபடியிருந்தான். தொடக்கத்தில் அவனை ஆறு மாதங்கள் பங்கரில் போட்டார்கள். உடல் இளைத்து கண்கள் உட்சென்று அடையாளம் தெரியாதபடிக்கு அவன் உருமாறியிருந்தான். ஒருநாள் நடு மதியத்தில் எதேச்சையாக அவனைச் சந்தித்தேன்.

முகாம் ஒன்றில் இரு நூறு பேர் அமரக்கூடிய புதிய கொட்டகையொன்றின் நிலத்தை தனியொருவனாய் நின்று அவன் செப்பனிட்டபடியிருந்தான். கொட்டகையின் கூரை மட்டும் வேயப்பட்டிருந்தது. அவன் காணியின் ஓரத்தில் வெட்டிய குழியில் இருந்து மண்ணைக் கடகத்தில் ஏந்தித் தோள்களில் சுமந்து வந்து நிலத்தில் கொட்டினான். பத்துப்பதினைந்து கடக மணலை நிறைத்த பிறகு தட்டிப் பரவினான். பின்னர் மொங்கானால் ஓங்கிக் குத்தி அழுத்தினான். வெற்றுடல் வியர்வையில் குளித்தபடியிருந்தது.

அருகில் சென்று " மச்சான், எப்படியிருக்கிறாய்" என்று கேட்டேன். அவன் திரும்பி நெற்றியை அழுத்தித் துடைத்தபடி மௌனமாக நின்றான். அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. யாழ்தேவி சண்டையில் அவன் அறிமுகமாயிருந்தான். அப்பொழுது கிளாலியில் வைத்து டாங்கியொன்றை தகர்த்திருந்தோம். அதன் சங்கிலிகள் சிதறிப் பறந்து, நெருப்பு மூண்டெழுந்து டாங்கியை மூடியபோது அவன் துப்பாக்கியை உயர்த்திப் பிடித்துக் கூவியபடி குதித்தது இப்பொழுதும் நினைவில் நிற்கிறது.

அவனது தோள்களை வருடி "சரி மச்சான், சந்திப்பம்" என்று திரும்பியபோது " காதலிச்சது பிழையாடா மச்சான்" என்று அவன் கேட்டான்.

அப்பொழுது நான் அகிலாவை சந்தித்திருக்கவில்லை. "நீ காதலிச்சது பிழையில்லை. அது வழமையா நடக்கிறதுதானே, ஆனா இயக்கத்தில இருந்து விலக வேணும் என்று நினைச்சாய் பார், அது தான் பிழை. அண்ணையும் காதலித்து தான் செய்தவர். ஆனா அவர் உன்னை மாதிரி நினைக்கவில்லை. அன்றைக்கு அவர் அப்பிடி நினைச்சிருந்தால் இன்றைக்கு இயக்கமே இல்லை " என்று அவனுக்குச் சொன்னேன்.

(வலிகள் இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவு: வியூகங்களை வென்ற வேங்கைகள்



■ தமிழரசன்

"அமெரிக்க இராணுவமே வந்தாலும் ஆனையிறவு பெருந் தளத்தை அசைக்க முடியாது". அமெரிக்க இராணுவத்தின் விசேட படைப் பிரிவான கிறீன் பரட் நிபுணர் குழு இவ்வாறு கூறிச் சென்று ஒரு மாதம்கூட நிறைவுறவில்லை. ஆனையிறவுக்குள் புலிகள் புகுந்தனர். ஆனையிறவு புலிகள் வசமானது என்ற தகவல் உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அமெரிக்க இராணுவத்தாலேயே கைப்பற்ற முடியாது என அந்த நாட்டின் இராணுவ நிபுணராலேயே புகழப்பட்ட தளத்தை, போராட்ட அமைப்பு ஒன்று இலகுவாக வீழ்த்தியது என்பதை அறிந்த பின் யார்தான் அதிர்ச்சி அடைய மாட்டார்கள்.

ஆனையிறவு வீழ்த்தப்பட்டது என்ற அதிர்ச்சியைவிட, அதைத் தொடர்ந்து எழுப்பப்பட்ட கேள்விகள் மேலும் மேலும் ஆச்சரியங்களை ஏற்படுத்தின. ஆனையிறவுத் தளத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான படைகளை நேரடியாகவும், இந்தப் படைகளுக்கு ஆதரவு வழங்கக்கூடிய நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் இதர பகுதிகளில் நிலைகொண்டிருந்த சுமார் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தையும் எதிர்கொண்டு வெறுமனே ஆயிரத்து 500 புலிகளால் எவ்வாறு வெற்றி கொண்டனர்?

அமெரிக்காவிடம் பயிற்சி பெற்ற 53ஆவது படைப்பிரிவு புலிகளிடம் தோல்விகண்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை இழந்தும், பல ஆயிரம் பேர் காயமடைந்து களத்தில் இருந்தும் அகற்றப்பட்டதையும் தொடர்ந்து அப்படைப் பிரிவே இலங்கை இராணுவத்தில் இருந்து நீக்கப்பட, வெறும் ஆயிரத்து 500 போராளிகளால் எப்படி சாத்தியமானது என்ற கேள்விகள் மேலும் மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

### தாக்குதலுக்கு தயாராதல்

ஆனையிறவு தாக்குதல் திட்டம் முல்லைத்தீவு தளம் புலிகளால் கைப்பற்றப்பட்ட காலப்பகுதியிலேயே தொடங்கப்பட்டுவிட்டது. திட்டத்தை தலைவர் பிரபாகரனே நேரடியாகத் தீட்டியிருந்தார். இதற்கான வேவு தகவலை சேகரிக்கும் பொறுப்பை தனது மிக நம்பிக்கையான தாக்குதல் தளபதியான பால்ராஜிடம் ஒப்படைத்து இருந்தார். கடலும் சதுப்புநிலமுமான குடாரப்பு, வத்திராயன், செம்பியன் பற்று, வெற்றிலைக்கேணி, ஆனையிறவு, இத்தாவில் என அனைத்துப் பகுதிகளிலும் பால்ராஜின் கீழ்,வேவு அணிகளால் தகவல்கள் திரட்டப்பட்டன. சுமார் 3 வருடங்களாக வேவுத் தகவல்கள் திரட்டப்பட்ட பின்னர் ஆனையிறவை நேரடியாகத் தாக்காது அதனை விழவைக்கும் தந்திரத்தை தலைவர் பிரபாகரன் தனது தளபதிகளுக்கு விளக்கினார்.

தாக்குதல் திட்டம் இதுதான். சூசை தலைமையிலான கடற்புலிகள் அணி ஆயிரத்து 200 போராளிகளை குடாரப்பில் இறக்கிவிடும். குடாரப்பு ஊடாக முன்னேறும் புலிகள் அணி ஆனையிறவுக்கான அனைத்து விநியோகங்களையும் தடைசெய்யும். பின்னர் இயக்கச்சியை கைப்பற்றி நிலைகொள்ளவேண்டும்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டை கைப்பற்றும் தீபன் தலைமையிலான அணி, பரந்தன் ஊடாக முன்னேறி ஆனையிறவை கைப்பற்றி இயக்கச்சியில் நிலைகொண்டிருக்கும் பால்ராஜுடன் இணையும். இந்த இரு பிரதான சண்டையிடும் அணிகளையும் பிடிபட்ட இடங்களை தக்க வைக்கும் அணிகளையும் கேணல் பானு ஒருசேர வழிநடத்துவார்.

### குடாரப்பு தரையிறக்கம்

2000 மார்ச் 26 ஆம் நாள் இரவு 8.30 மணியளவில் குடாரப்பு தரையிறக்கத்துக்கு புலிகள் தயாராகினர். சுமார் ஆயிரத்து 200 புலி வீரர்களை படகுகளில் ஏற்றியவாறு கடற்புலிகள் அணி புறப்பட்டது. இந்தத் தரையிறக்கத்தை முறியடிக்க கடற்படை பல தடைகளை ஏற்படுத்திய போதும், கடற்கரும்புலிகள் அவற்றை தகர்த்தெறிந்தனர். வெற்றிகரமாக அனைத்துப் போராளிகளும் தரையிறக்கப்பட்டனர். இந்தத் தரையிறக்கமே கடந்த 60 ஆண்டுகளில் ஆசியக் கண்டத்தில் நடத்தப்பட்ட மிகப்பெரிய இராணுவத் தரையிறக்கமாகும். அத்துடன் இதனை இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகள் பிரான்ஸின் நடத்திய நோர்மண்டிக் தரையிறக்கத்துடன் ஒப்பிடுவர்.

(தரையிறக்கப்பட்ட புலிகளுக்கு ஓரிரு வாரங்களே தாக்குப்பிடிக்கக்கூடியளவு ஆயுதம், உணவே வழங்கப்பட்டது. தாக்குதல் திட்டம் தோல்வியில் முடிந்தால் அனைத்து போராளிகளும் உயிரிழக்க வேண்டியிருக்கும் என்பதுடன், தாக்குதல் நாள் நீடித்தால் அவர்களுக்கான ஆயுதத்தையோ உணவையோ கடற்புலிகளால் மீண்டும் வழங்கமுடியாத நிலை இருந்தது என்பது கவனத்தில் [illegible])

### வத்திராயன் 'பொக்ஸ்' சமர்

குடாரப்பில் புலிகள் தரையிறங்கிய அதேவேளை பளை, இயக்கச்சி, ஆனையிறவு ஆட்லறித் தளங்களில் இருந்து நடத்தப்படும் தாக்குதல்களை முறியடிக்க கரும்புலித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பளை, இயக்கச்சி முகாம்களில் இருந்த 11 ஆட்லறிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. ஆனால் ஆனையிறவு தாக்குதல் திட்டம் இலக்கை எட்டவில்லை. இந்நிலையில் குடாரப்பில் இறங்கிய பால்ராஜ் தலைமையிலான அணி சதுப்பு நிலமான குடாரப்பை கைப்பற்றி, பொட்டல் வெளிப் பிரதேசமான வத்திராயனைக் கைப்பற்றியது. எதுவித மறைப்புமற்ற இந்தப் பகுதியில் "ப" "L" வடிவிலான ஒரு கிலோ மீற்றர் நீள குழிகளை வெட்டி அதற்குள் இருந்து சண்டை பிடித்தனர். இந்தச் சண்டையே வத்திராயன் பொக்ஸ் சண்டை எனப் புகழ்பெற்றது.

### விநியோகம் தடை

சண்டை தொடங்கிய நான்கைந்து நாள்களிலேயே உடுத்துறை, இத்தாவில் வழி ஊடாக ஆனையிறவில் நிலைகொண்ட படைகளுக்கு வழங்கப்பட்ட உணவு, குடிதண்ணீர், ஆயுத விநியோகங்கள் அனைத்தும் தடுக்கப்பட்டன. இதேகாலப்பகுதியில் தீபன் தலைமையிலான அணி செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டில் நிலை கொண்டிருந்த இராணுவத்தை விரட்டியடித்து முன்னேறியது. இத்தாவிலில் நிலை கொண்ட பால்ராஜ் அணி 34 நாள்கள் அந்த இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

### 'வீழ்ந்தது ஆனையிறவு பறந்தது புலிக் கொடி'

இக்காலத்தில் அவரின் வியூகத்தை உடைக்க 53ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி 8 தடவைகள் முயற்சி செய்து, அனைத்திலும் மண்கௌவினார். அப்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தையிடம் ஆனையிறவில் இருந்து பளை வரை பின்வாங்கி பின்னர் தாக்குதல் நடத்த அனுமதி கேட்டார். அவர் மறுத்து விட்ட நிலையில் ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்களை இழந்து பல ஆயிரம் பேர் காயப்பட்டு களத்தில் இருந்து [illegible]பட்டு ஆனையிறவில் இருந்து [illegible]லி ஊடாகத் தப்பியோடியது. பெரும் தியாகங்கள் - நெருக்கடிகளுக்கு மத்தியில் இத்தாவிலில் நிலைகொண்டிருந்த பால்ராஜின் படையணியும், பரந்தன் ஊடாக சண்டையிட்டு முன்னேறிய தீபனின் அணியும் இணைந்தன.

"ஆகாய கடல் வெளி" சமரின் போது சுமார் 640 இற்கும் மேற்பட்ட போராளிகள் உயிர்த் தியாகம் செய்தும் தோல்வியில் முடிந்த சமர் வெறுமனே 34 வீரர்களின் மரணத்துடன் (ஆனையிறவில் மட்டும்) புலிகள் வசமானது. தாக்குதலை ஒருங்கிணைந்து வழிநடத்திய தளபதி பானு சுமார் 300 ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர் ஆதிக்கத்துக்குள் கட்டுண்டு கிடந்த நிலத்தில் புலிக்கொடியை ஏற்றினார்.

### கலைக்கப்பட்டது 53 ஆவது படைப்பிரிவு

சமரின் முடிவில் ஆனையிறவில் நிலைகொண்டிருந்த அமெரிக்க பயிற்சி பெற்ற 53ஆவது படைப் பிரிவு - பெரும்பாலும் ஒட்டுமொத்தமாக சிதைக்கப்பட்ட படைப்பிரிவு - இராணுவத்தின் பிரிவில் இருந்து கலைக்கப்பட்டது. அதன் கட்டளைத் தளபதியாக இருந்த காமினி ஹெட்டியாராச்சிக்கும் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. இதன் பின்னர் ஆனையிறவை கைப்பற்றுவதற்காக தீச்சுவாலை நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டபோதும் அது தோல்வியில் முடிந்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக புலிகள் தொடுத்த போரில் வெற்றி நோக்கி முன்னேறிய புலிகள் 2002 இல் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து போரை கைவிட்டனர்.

### தமிழர் போரின் மகுடம்

இந்தப் போரின் முடிவில்தான் தமிழரின் வீரமும் தலைவர் பிரபாகரனின் போரியல் தந்திரமும் தளபதி பால்ராஜின் வீரமும் உலகம் வியக்கும் ஆற்றலும் வெளிப் பெற்றன. மேலும் இந்தச் சமரின் முடிவில் "என்னை விஞ்சிய போராளி" என தலைவர் பிரபாகரனால் பால்ராஜ் புகழ்ந்து பேசப்பட்டதும். எதிரியே வியந்து போற்றும் விதத்தில் தளபதி பால்ராஜ் உச்சம் பெற்றதும் இந்தப் போரில்தான். தமிழரின் போரியல் ஆற்றலுக்கு பல போர்கள் மகுடம் சூடக்கூடியதாக இருந்தாலும், தமிழரின் நவீன போரியலுக்கு மகுடம் சூட்டிய போர் என்றால் அது ஆனையிறவுப் பெருஞ்சமரே. ●

## ஆனையிறவுப் பெருந்தளம்

5 -10 கிலோமீற்றர் அகலமும் 23 கிலோமீற்றர் நீளமும் கொண்ட வெட்டை வெளிப் பிரதேசமே ஆனையிறவு. இதன் புவியியல் அமைவிடம் யாழ்ப்பாணத்தின் ஆதிக்கம் யார் வசம் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக இப்பகுதி விளங்குகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் ஆனையிறவின் முக்கியத்துவத்தை உணர்ந்து அங்கு கோட்டை ஒன்றை அமைத்தனர். பின்னர் வந்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் இந்தக் கோட்டையின் படைப் பலத்தை அதிகரித்தனர்.

ஈழப்போர் தொடங்கியதுமே ஆனையிறவுத் தளத்தில் பெரும் படையை குவித்த இராணுவம், இயக்கச்சி, பளையிலும் பெரும் பின்தளங்களையும் பாதுகாப்புக்காக அமைத்தது. அத்துடன் அமெரிக்காவிடம் பயிற்சி பெற்ற இராணுவத்தின் 53 ஆவது டிவிசனை நிலைநிறுத்தியது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்த சமயம் ஆனையிறவு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதனால் யாழ்ப்பாணம் மீது அரசாங்கம் பொருளாதாரத் தடையை விதித்தது. இதையடுத்து புலிகள் உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவித்து வளர்த்தனர்.

இதையடுத்து, ஆனையிறவை கைப்பற்றும் நோக்கில் 1991 ஆம் ஆண்டு "ஆகாய கடல்வெளி" சமரை விடுதலைப் புலிகள் முன்னெடுத்தனர். ஆனையிறவுத் தளம் மீது நேரடியாகத் தொடுக்கப்பட்ட இந்தச் சமர் தோல்வியில் முடிந்தது. இதில் 640 பேர் மாவீரர்களாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 வாழ்த்துக்கள் கோலோச்சிய வாரம்



சமூகவலைத் தளங்களில் கடந்த வாரம் புதுவருட, ஈஸ்டர் பெருநாள் வாழ்த்துக்களும் இவை சார்ந்த பதிவுகள் தான் கோலோச்சியிருந்தன.

சமூகவலைத்தளங்களில் உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை பதிவிட்டவர்கள். தவறாது புத்தாடை அணிந்து, குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டாடும் தங்களின் படங்களையும் பதிவிட்டனர்.

இதனிடையே சிலர் “நித்திரையிலிருக்கும் தமிழா உனக்கு சித்திரையல்ல புத்தாண்டு” என்ற பாரதிதாசனின் கவிதையையும் பதிவேற்றி சித்திரைப் புத்தாண்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அவர்களில் பலர் மறுநாள் புத்தாடைகளுடன் தங்கள் வீட்டுக் கொண்டாட்டப் படங்களைப் பதிவிடத் தவறவில்லை.


கிறிஸ்தவர்களின் புனித வெள்ளி, ஈஸ்ரர் பெருநாளும் கடந்த வாரமே என்பதால் அது சார்ந்த பதிவுகளும் சமூகவலைத்தளங்களை நிறைத்திருந்தன. கூடவே பண்பாட்டு தடம் மாறிப் போன ஈஸ்ரர் கொண்டாட்டத்தையும் சிலர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

## 2 விக்கித்துப் போகவைத்த விக்னேஸ்வரன்


இயேசு நாதரையும் சாமியார் பிறேமானந்தாவையும் ஒரே தராசில் வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஒப்பிட்டமை பலருக்கு அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது.

மக்களுக்கு நல்வழி காட்டி சர்வாதிகார அரசால் கொலைத் தீர்ப்பு வழங்கப்பட்டு, மரணமடைந்து பின்னர் உயிர்த்தெழுந்த இயேசுநாதரையும் பாலியல் குற்றத்துக்காக சிறைவாசம் இருந்து பின் விடுதலையாகி மரணமான பிறேமானந்தாவையும் ஒரே தராசில் வைத்து இருவரும் குற்றவாளிகளே என்று பார்க்க முதலமைச்சரால் எப்படி முடிந்தது எனப் பலரும் கேள்வி எழுப்பினர்.

கிறிஸ்தவ - இந்து மத பேதமின்றிப் பலரும் முதலமைச்சரின் இந்தக் கருத்துக் குறித்து கடும் கண்டனக் கருத்துக்களை பதிவு செய்திருந்தனர்.



## 3 சரிந்த குப்பையும் எழுந்த கண்டனங்களும்



மீதொட்டமுல்லவில் குப்பை மேடு சரிந்து 23 பேர் உயிரிழந்ததும், சுமார் 100 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதும் அனைவரும் அறிந்தே.

மக்கள் குறித்து சற்றேனும் சிந்திக்காது தொடர்ச்சியாக கொட்டப்பட்ட குப்பைகளும், குப்பைகளை சரியான விதத்தில் கையாளமையுமே இந்த அனர்த்தத்துக்குக் காரணம் எனப் பலரும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

மீதொட்டமுல்ல அனர்த்தத்துக்கு யார் காரணம் என ஒருவரை ஒருவர் சாடி வரும் நிலையில், சமூக வலைத்தளப் பதிவர்களும் ஒவ்வொருவரை குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

உலகின் முன் இலங்கைக்கு மற்றுமொரு அவமானத்தை மீதொட்டமுல்ல ஏற்படுத்தியிருப்பதையும் பல பதிவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## சுவரில் கொய்தவை

நாலைந்து நாள்களாயினும் ஓய்வாய் கொண்டாடி குதூகலித்து மகிழ்ந்து அனுபவித்து பின் மீள இயந்திரத் தனமான வேலைகளுக்குள் நுழைதல் என்பது அவ்வளவு இலகுவானதல்ல

---

மனிதர் தின்று போடும் கழிவுகள் மீண்டும் மனிதரையே தின்று போடுகின்றன...

---

KillerMen Rathan

மண்ணில் பிறந்த அனைவரும் மானிடரா?
யார் சொன்னது?
மனிதன் மனிதனாய் வாழும் வரை!!

---

Annas Thushyan

எதுக்கும் அட்வான்ஸா இப்பவோ ஒரு Happy Easter அ போட்டு வைப்பம் எவனாச்சு வேதக்காற பயபுள்ளைங்க பார்த்தா பார்ட்டி வைக்கணும்னு தோனும்ல சண்டே வேற

---

**Sarvananthan Arumugam**

ஒரு தேங்காய் 100 ரூபாய்
ஒரு GB டேட்டா 99 ரூபாய்.

இயல்பு வாழ்க்கை போய் இப்போ இணைய வாழ்க்கை

## இந்தவார மீம் (Meme)

புத்தாண்டு வாழ்த்துகள்



தெய்வமே...சித்திரையிலாவது சித்திரவதைகள் இல்லாமல் போகட்டும்...தெய்வமே!







குடும்பம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## இயேசுவும் பிரேமானந்தாவும்

வடக்கு முதலமைச்சர் சில விடயங்களில் பின்விளைவுகளையும், மக்களின் எதிர்பார்ப்பையும் புரிந்து கொள்ளாது பிடிவாதத்தனமாக செயற்படுபவர்தான். இருப்பினும் மனதில் பட்டதை அப்படியே சொல்பவர். அரசியல் நெளிவு சுழிவுகளுக்கு உட்படாதவர். என்றாலும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு சென்று, ஆசிரமம் அமைத்து, பின்னர் பாலியல் வழக்கில் சிக்கிய பிரேமானந்தாவை இன்னமும் தன் முழுமுதற் குருவாக வகுத்துக் கொண்டவர் வடக்கு முதலமைச்சர். இது மக்கள் மத்தியில் முதலமைச்சர் மீதுள்ள நல்ல அபிப்பிராயத்தில் சிறிது பங்கத்தை ஏற்படுத்தவே செய்கின்றது. முதலமைச்சர் என்பவர் மக்களுக்கு முன்மாதிரியானவராக இருக்க வேண்டும் என்பதே பொதுவான கருதுகோளாக இருக்கையில், பாலியல் குற்றத்துக்காக - அதுவும் சிறுமிகளை வன்புணர்வு செய்தமைக்காக - சிறைத்தண்டனையை அனுபவித்த சாமியார் ஒருவரை இன்னமும் தன்னுடைய முழுமுதற் குருவாகக் கொள்வதும், தனது உரைகளின் போதும், அறிக்கைகளிலும் பிரேமானந்தாவை மேற்கோள் காட்டுவதும் மக்களுக்கு உவப்பானதாக இருக்கவில்லை.

இந்த நிலையில் அண்மையில் ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் 'பாலியல் குற்றவாளி ஒருவரை குருவாக ஏற்று அவரை நீங்கள் வணங்கி வருவது சிறுபிள்ளைத்தனமானதல்லவா?" என்று கேட்கப்பட்டபோது, " 2000 வருடங்களுக்கு முன்னர் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளியான இயேசுநாதரை இன்னும் கிறிஸ்தவர்கள் வணங்கவில்லையா. அதேபோல் தான் நானும் பிரேமானந்தாவை வணங்குகிறேன்" என்று சொன்னதுதான் தாமதம், வெடித்தது சர்ச்சை. இதில் முதலமைச்சருக்கு இன்னும் சிக்கலை ஏற்படுத்திய விடயம் என்னவென்றால், முதலமைச்சரின் குறித்த நேர்காணல் வெளியானது, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த 'உயிர்த்த ஞாயிறு' காலத்தில். இதனால் கிறிஸ்தவ மக்களிடையே முதலமைச்சருக்கு எதிரான கருத்துக்கள் எழுந்தன. கிறிஸ்தவர்கள் அல்லாதோரும் சமூக வலைத்தளங்களில் முதலமைச்சரைப் போட்டு, வறுத்தெடுத்துவிட்டார்கள். இணையங்களும் இந்தச் செய்தியை பெரிதுபடுத்த, "வடக்கு மாகாண முதலமைச்சர் சிறுபிள்ளைத்தனமாக, தனது பொறுப்பு வாய்ந்த பதவியை மறந்து, கிறிஸ்தவ மதத்தை இழிவுபடுத்திவிட்டார்" என்ற கருத்து காட்டுத்தீயாகப் பரவி விட்டது. அதன் பின்னர் "கிறிஸ்தவர்க்ளின் மனம் புண்படும்படியாக நான் எதையும் சொல்லவில்லை. அதையும் மீறி அவர்களை வேதனைப்படுத்தும் விடயங்கள் அந்த நேர்காணலில் இடம்பெற்றிருந்தால் வருந்துகிறேன்" என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் மன்னிப்புக் கேட்ட பின்னர்தான் பிரச்சினை ஒருவாறு அடங்கியது.

வழமையாக எதையும் எழுதி வாசிக்கும் பழக்கமுள்ளவர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். இப்படி மாட்டிக் கொள்ளுமளவுக்கு எப்படிப் பொறுப்பற்றவராக நடந்து கொண்டார் என்று தான் தெரியவில்லை. வழமையாக பள்ளிக் கூடப்படியையே எட்டாத அரசியல்வாதிகள் கூட இப்படியான கேள்விகளுக்கு பதிலாக மௌனத்தைக் கொடுப்பர் அல்லது சிரித்துச் சமாளிப்பர். ஏனெனில் பல்வகை மதச்சார்பான மக்கள் வாழும் நாடு என்பது ஒரு புறமிருக்க, மதச்சார்புடைய கேள்விகளுக்கு வரும் பதில்கள் எப்படியாவது அரசியலாக்கப்படும் என்பது ஒரு தெட்டத் தெளிவான விடயம். அதையும் மீறி பதிலளித்தே ஆகவேண்டும் என்றல் பிரேமானந்தாவை வேறு யாரும் இந்துக் கடவுள்களோடு ஒப்பிட்டிருக்கலாம். அப்படியல்லாமல் இன்னொரு மதத்தின் உச்சக் கடவுளர் ஒருவரோடு பிரேமானந்தாவை ஒப்பிட்டமையே அதையொரு மதரீதியான கொச்சைப்படுத்தலாக எண்ணவைத்தது.

உண்மையில் முதலமைச்சர் கூற வந்தது புனிதரான இயேசு மீது ஒருசாரரால் பொய்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. ஆனால் காலம் அவரது களங்கத்தை போக்கடித்து உண்மை எதுவென்று உணரச் செய்தது. அதேபோன்றே பிரேமானந்தா மீதும் சுமத்தப்பட்ட பொய்க்குற்றச்சாட்டுக்களில் இருந்து காலம் அவரை விடுவிக்கும், உண்மையை உணரவைக்கும்" என்பதைத்தான். ஆனால் வார்த்தைகள் தவறாகிவிட, தேவையற்ற சர்ச்சையில் அவர் சிக்கவேண்டியதாகிவிட்டது. வாயில் இருந்து புறப்பட்ட சொற்களை நாம் கட்டுப்படுத்த முடியாது. எனவே சொற்களை வெளிவிட முன்னர் ஆழ,அகலம் பார்க்க வேண்டிய கட்டாயம் சாதாரணர்களை விடவும், பொறுப்பு வாய்ந்த பதவியில் இருப்பவர்களுக்கே அதிக பொருத்தமானது. இதை முதலமைச்சர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!



# கானல்நீரா காணிவிடுவிப்பு?

**வர்சி**

காணிகள் விடுவிப்பது தொடர்பாகத் தமிழ்க் கூட்டமைப்பு பாதுகாப்புச் செயலர் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தியது. அந்தப் பேச்சுவார்த்தை எந்தவிதத் தீர்வும் எட்டப்படாது முடிவடைந்திருக்கிறது. காணிக்ளைப் பிடித்து வைத்திருப்பதல்ல தமது நோக்கம் எனவும், ஜனாதிபதி உத்தரவிட்டால் உடனடியாகத் தாம் காணிகளிலிருந்து வெளியேறத் தயாராக இருப்பதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிறார். மக்களது காணிகளை அரச அனுமதியில்லாமல் அத்துமீறிப்பிடிப்பதற்கு எப்படித் தமக்கு அதிகாரமில்லையோ, அதேபோல ஏற்கனவே நிலை கொண்டுள்ள இராணுவ நிலைகளிலிருந்து விடுபடவும் அரச அனுமதி தேவை என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

எனவே அரசு உத்தரவிடுமானால் உடனடியாக அந்தந்த நிலைகளிலிருந்து வெளியேறிச் செல்லத் தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அப்படி உத்தரவு கிட்டும் பட்சத்தில் தாம் உடனடியாக வெளியேறுவது சிரமமாக இருக்குமென்றும், சிறிய கால அவகாசம் தேவைப்படலாம் என்றும் அத்துடன் அரசு தாம் புதிதாக அமைக்கப் போகும் முகாம்களுக்குரிய கட்டுமானச் செலவைத் தந்துதவ வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். அவரது பேச்சில் வெளிப்படை தெரிகிறது. அவர் ஓர் அதிகாரியாகத் தனது அதிகார வரம்புக்குட்பட்டுச் செயற்படுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், இந்தப் பேச்சு வார்த்தை நடைபெறுவதற்கு சிலநாள்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இது தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது காணி விடுவிப்புத் தொடர்பாகத் தான் உரிய தரப்புக்கு அறிவித்தும் இன்னமும் தனது உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்ததாகவும் தனது உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தற்போது காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்.

இராணுவத் தளபதியின் மேற் சொன்ன கூற்றுப்படி பொதுமக்களின் காணிகளைவிடுவிப்பதற்கு அவர் ஜனதிபதியிடமிருந்து உத்தரவை பெறக்காத்திருக்கிறார். ஆனால் ஜனாதிபதியோ தான் இட்ட உத்தரவை இராணுவம் நடைமுறைப்படுத்துவதற்காகக் காத்திருக்கிறார். இதில் ஏதாவது ஒன்று மெய்யாகவும், மற்றொன்று பொய்யாகவும் இருப்பதற்கு சாத்தியங்கள் உண்டு.

ஆனால் இந்த இடத்தில் சுன்னாகப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையத்தில் நடந்த சம்பவத்தை நினைவில் கொள்ள விரும்புகிறேன். கடந்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மேற்படி நலன்புரி நிலையத்துக்கும் சென்றிருந்தார். வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களை அங்கு சந்தித்தார். அவர்களுடன் கலந்துரையாடும்போது அன்றிலிருந்து வரும் ஆறுமாதங்களுக்குள் அவர்கள் தங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குப் போக வழிவகுப்பதாகச் சொல்லியிருந்தார். ஆனால் இன்றுவரை அந்த வாக்கு நிறைவேற்றப்படவில்லை.

இது பெரும் குழப்பத்தை உண்டாக்குகின்ற செயற்பாடாகத் தெரிகிறது. ஒரு நாட்டின் தலைவரின் உத்தரவுக்குக் கீழ்படிய இராணுவம் மறுக்கிறதா? அல்லது காணி விடுவிப்புத் தொடர்பாக தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்குத் தான் பொறுப்பல்ல, அத்தகைய சம்பவங்களுக்கு இராணுவமே தடையாக உள்ளதாகச் சொல்லிப் பழியை இணுவத்தின் தலையில் போட்டுவிட்டுத் தப்பிக்க முயல்கிறாரா ஜனாதிபதி? அப்படியானால், போர்க்குற்றம் நடைபெற்றிருந்தாலும் நாம் அதற்காக இராணுவத்தைத் தண்டிக்கப் போவதில்லை என்று இராணுவ நலனில் மிகுந்த அக்கறையுள்ள ஜனாதிபதி இப்படிச் சொல்லலாமா? இராணுவத்தின்மீது அவதூறை ஏற்படுத்தக் கூடியவாறு இவ்வாறு பேசலாமா?

மீண்டும் அரச தரப்புக்கு வரலாம். கேப்பாப்பிலவுக் காணிகள் இரண்டு நாள்களில் விடப்படும் என்று அமைச்சர் சுவாமிநாதன் சொல்லி மாதம் கடந்துவிட்ட பின்னர், அங்கிருந்து வெளியேற 5மில்லியன் தேவைப்படுவதாக இராணுவம் சொல்கிறது. அந்தத் தொகையை நிதியமைச்சு இராணுவத்துக்கு வழங்கிவிட்டால் இரணுவம் வெளியேறிவிடும் என்றும் அமைச்சர் சொல்லுகிறார்.

ஜனாதிபதியோ, அமைச்சர்களோ, அதிகாரிகளோ, அனைவரும் பொறுப்புமிக்கவர்கள். அவர்கள் மீது நம்பிக்கையும், மரியாதையும் வைத்திருக்கின்றனர் மக்கள். இவர்கள் இது போன்று முன்னுக்குப்பின் முரணானபடி பேசுவது எதற்காக. ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? மக்களின் வாழ்க்கையுடன் விளையாடலாமா? அரசியலை இப்படியா செய்வது? அவர்கள் தங்களுக்கு முறைப்படி கிடைத்த காணிகளில் வாழ்ந்தவர்கள். தங்களின் வாழ்விடங்களுக்கு போர் அனர்த்தங்களினால் விட்டுச்சென்ற இடங்களுக்குத் திரும்ப வந்திருக்கிறார்கள். அவர்கள் காணிகளை அவர்களுக்கு விட்டுக் கொடுப்பதற்கே இத்தனை கெடுபிடிகளும், இத்தனை அரசியலும் இருக்குமாயின் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது கானல் நீர் தானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் தின்ற கால்கள்





■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

அந்த மதியப் பொழுதில் சூரியன் என் தலையில் இறங்கியது. சூரியனில் உள்ள அத்தனை வெப்பத்தையும் என் மூளை தாங்க முடியாமல் தாங்கியது. என் முன்னே அவன் நின்றான். இரண்டு கால்களும் அவனுக்கில்லை. இரண்டு கால்களும் இல்லாதவன் எப்படி நிற்க முடியும்? ஆனால் நின்றான்.

அல்லிப்பளை - அறத்திநகரில் அவனைக்கண்டேன். 25 வயதிருக்கலாம். மெலிந்து ஒடுங்கிய உடல். சிவந்த நிறம். தாடியடர்ந்த முகம். இரண்டு கால்களும் இல்லாமலே நடந்து வந்திருந்தான். நம்ப முடியவில்லையா? நீங்கள் நம்பாதிருக்கலாம். ஆனால், அவன் நடந்தே வந்திருந்தான். குச்சிகளைப் போன்ற இரண்டு ஊன்றுகோல்களின் உதவியோடு அவன் அந்த மணல் நிலமெங்கும் திரிகிறான். ஒரு மாற்றுக்கால் கிடைத்திருக்கிறது. மற்றக்கால் சரியாகப் பொருந்தவில்லை. 'பொருந்தாத காலைப் பொருத்தி துன்பப்படுவதை விட காலே இல்லாமல் இருப்பது மேல்' என்றான்.

சிரிப்புக்கும் பம்பலுக்கும் பஞ்சமில்லை. கால் இல்லாத கவலைக்குப் பதிலாக இப்படிப் பகிடியும் சிரிப்புமா?

கால்கள் இல்லாமல் ஓய்ந்திருக்கவில்லை அவன். ஒரு சின்னஞ்சிறிய ஒலியமைப்புச் சாதனத்தை வாங்கி வைத்திருக்கிறான். கால்கள் இல்லாதவர்களுக்கு என்று கொடுக்கப்பட்ட உதவிப் பணத்தில் அதை வாங்கியிருக்கிறான். அதை வைத்தே அவனுடைய வாழ்க்கை ஓடுகிறது - காலமும்தான். என்றாலும் அவனால் அதை எல்லா இடங்களுக்கும் எடுத்துப்போக முடியவில்லை. அதிலும் அந்த மணல்வெளியில் ஓரடி வைத்து நடப்பதற்கே பெரும்பாடாய் இருக்கும். கால்களே புதையக்கூடிய மணலில் ஊன்று தடிகளின் நிலை எப்படியிருக்கும்? இந்த நிலையில் ஒலியமைப்புச் சாதனத்தையும் தூக்கிக் கொண்டு போவதெப்படி? தள்ளுவண்டி ஒன்று உண்டு. அதை அந்த மணல் ஒழுங்கையில் தள்ளிச்செல்ல முடியாது. ஆகவே அதைத் தெருவோரத்தில் விட்டு விட்டு, மணல்வழியே ஊன்றுகோலில் தாவிச் செல்கிறான். வாழ்க்கை இப்படி விதிக்கப்பட்டிருக்கிறது அவனுக்கு.

எனினும் இதையெல்லாம் எப்படியோ வென்றே அவனுடைய பொழுதுகள் ஒவ்வொரு நாளும் கழிகின்றன. அவன் பாடினான் 'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ...' அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் உலகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

☹ ☹ ☹

பரந்தனில்தான் அவரைச் சந்தித்தேன். 'வாங்கோ' என்று வரவேற்றார். 'நான்தான் முருகேசு' என்றார். 'வயலிலே விளைஞ்சவனைப் பாருங்கோ. இப்ப ஒரு காலடி நிலத்தில வைக்க முடியாமல் இருக்கிறன். இரவும் பகலும் காடு மேடெல்லாம் நடந்து திரிஞ்சவன் கட்டையில ஏறி இருக்கிறன்' - என்றார்.

பெருமூச்சு வந்தது. கண்கள் கலங்கின. ஒரு கணம்தான். சுதாகரித்துக்கொண்டு சொன்னார். 'எண்டாலும் சாக முடியுமா? என்னை நம்பி இந்த நாலு சீவன்களும் இருக்கு' என்று மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் காட்டினார். அப்பொழுது என்னுடைய கண்கள் கலங்கின. அப்படியே நாங்கள் பலதையும் பேசினோம். அவர் நடந்த கதைகளை எல்லாம் சொன்னார். எல்லாம் முடிந்து விடைபெற்று வரும்போது எழுந்திருக்க முயன்றார்.

எழும்போது அவருடைய இடுப்பிலிருந்து உடை வழுவியது. அவசரமாக அதைப் பிடிக்க முயன்றார், முடியவில்லை. ஒரு கையினால் ஊன்றிக்கொண்டு பாதியில்லாத குறைநிலையில் இருந்த துண்டுக் கையினால் உடையை அணைக்க முயன்றவரை விட்டு கீழே விலகியது அது. அந்தக்கணத்திலேயே நிலைகுலைந்து தடுமாறி வீழ்ந்தார்.

அப்போதுதான் பார்த்தேன் அவருக்கு இரண்டு கால்களுமே இல்லை என்பதை.

☹ ☹ ☹

போர் எத்தனை கால்களைத் தின்றிருக்கும்? ஒன்றல்ல, இரண்டல்ல. ஆயிரக்கணக்கில். குருதியொழுக ஒழுக அறுத்தெறியப்பட்ட ஆயிரக்கணக்கான கால்களை என் கண்களால் பார்த்திருக்கிறேன். இப்படியும் ஒரு விதியா என்று என்னை நானே நொந்த கணங்கள் அவை. எந்தக் கிரியைகளும் இல்லாமல், அந்தக் கால்கள் எங்கோ புதைக்கப்பட்டன.

சின்னக் கால்கள், மண்ணில் ஊன்றப்படாமலே பிஞ்சாக, பாற்குங்கும நிறத்தில் துண்டிக்கப்பட்ட கால்கள், முதிய கால்கள், உறுதியான கால்கள், தளர்ந்த கால்கள், மெல்லிய கால்கள், நீண்டு பெருத்த கால்கள், குறுகிய கால்கள், குண்டாக உருண்டு திரண்ட கால்கள், இன்னும் எவ்வளவு தூரமானாலும் நடப்பேன் என்று சொல்லும் கால்கள், எவ்வளவு பாரத்தையும் சுமப்பேன் என்ற கால்கள்... விடுதலைப் பாதையில் நடந்த கால்கள், கடற்கரையின் உவர்ப்பில் ஊறிய கால்கள், வயலில் நின்று நீரோடு விளைந்த கால்கள், மணலில், காட்டில் என எங்கும் நடந்த கால்கள் என பலவகையான கால்கள் குருதியொழுக ஒழுக அறுத்தெறியப்பட்டன. போர் எல்லாவற்றையும் துண்டித்தது. இனி எந்தச் சுவடும் இல்லை என்பதான வன்மத்தோடு அந்தக் கால்களை அது நிராகரித்தது.

ஒரு சமூகத்தை முடக்கும் உபாயம் அது. வன்முறையின் மறைவில் சமூக முடக்கத்துக்கான பொறிகளே அதிகம் பெருகியிருக்கின்றன. அந்தப் பொறிகளே ஆயிரக்கணக்கான கால்களையும் தின்றன. இழக்கப்பட்ட அத்தனை கால்களும் பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை, பிறருடைய தயவைக் கோர வேண்டிய ஒரு நிலையை, கால்கள் இல்லாத ஒவ்வொருவருக்கும் உருவாக்கியுள்ளன.

விடுதலைக்காக, சுயாதீனத்துக்காக, தனித்துவத்துக்காக என்று போராட உருவாகிய சூழலின் இறுதி விளைவு தந்த யதார்த்தம். இது எதிர்பாராததும் எதிர்பார்த்ததுமான ஒரு நிலையே. கால்களில்லாதவர்களின் உலகம் எப்படியிருக்கும்? இதற்கு ஒரு எளிய விளக்கத்தை அல்லது புரிதலை மனுஷ்யபுத்திரனின் 'கால்களின் அல்பம்' என்ற கவிதை சொல்லும். பல சந்தர்ப்பங்களிலும் பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை அல்லது அவலம். தாங்கமுடியாத துயரம் கால்களில்லாதவர்களுடையது. ஒரு தபாலை அனுப்புவதற்கும், ஒரு கிண்ணம் தண்ணீரை எடுப்பதற்கும்கூட பிறரின் தயவு தேவை.

அதிலும் சிறிய வயதில், குழந்தைப் பருவத்தில் கால்களை இழந்த பிள்ளைகளின் உலகம் இன்னும் கொடியது. 'ஓடி விளையாட முடியாது தாத்தா...ஆனாலும் நான் ஓய்ந்திருக்க முடியாது தாத்தா...' என்று ஒரு பிள்ளை தன்னுடைய தாத்தாவைப் பார்த்துப் பாடியதை ஒரு நாள் பார்த்தேன். அந்தப் பிள்ளையின் இழந்த கால் எல்லாவற்றுக்கும் ஒரு தடையே. அந்தத் தடையை மீறத்துடிக்கும் மன வேகம் அந்தப் பிள்ளையிடம் இருக்கிறது என்பதே அந்தத் துயரத்திலும் [illegible] கால்கள் இல்லாமையால் இழக்கப்படும் உலகம் பெரியது. தவறிப்போகும் வாய்ப்புகள். செய்ய முடியாமற் போகும் காரியங்கள் ஏராளம் ஏராளம். ஒரு சுதா சந்திரன் வெற்றிகரமாக நடனமாடியிருக்கலாம். இன்னொருவர் அதைப்போல வேறொரு சாதனையை நிகழ்த்தியிருக்கலாம். ஆனால், பொது நிலை அப்படியல்ல. அது அடிவாரங்களைச் சுற்றிச்சுற்றித் தவழ்ந்து கொண்டிருக்கும் மலையேற்றமே.

இப்படி அடிவாரங்களைச் சுற்றி வரும் பல மலையேறிகளை நாம் எப்போதும் சந்திக்கிறோம். எங்கும் சந்திக்கிறோம். காலம் அளித்த தண்டனையை சிலுவையாகக் காவிக் கொண்டு இந்த மனிதர்கள் காலவீதியில் ஊர்ந்து கொண்டிருக்கிறார்கள். சிலருக்கு ஒருகால் இல்லை. சிலருக்கு இரண்டு கால்களும் இல்லை. அவர்களுக்கும் இந்த உலகமே வாழ்வதற்கான இடம். அவர்களும் இந்த உலகத்தின் பங்காளிகளே. அவர்கள் எங்களின் முன்னே வாழ்ந்து கொண்டிக்கிறார்கள். நாங்களும் அவர்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தந்தையும் பிள்ளையுமாக, கணவனும் மனைவியுமாக, அண்ணனும் தங்கையுமாக, தம்பியும் அண்ணனுமாக, நண்பர்களாக, அயலவர்களாக என்று - அவர்கள் வேறு, நாங்கள் வேறில்லை. என்றாலும் அவர்களுடைய வாழ்க்கை எப்படியானது என்பதுதான் பிரச்சினையே.

கால்களில்லாதவர்களின் துயரம் வேறு. அது முடிவில்லாமல் நீண்டு செல்வது. எண்ணற்ற வகையில் ப்ல்லாயிரம் துயரிழைகள் கொண்டது. நெருப்பாய் வேர் விடுவது. போர்க்களத்தில் இழக்கப்பட்ட கால்கள், கண்ணிவெடி, மிதிவெடிகளால் இழக்கப்பட்ட கால்கள், எறிகணைகள் பசியாறிய கால்கள், குண்டு வீச்சு விமானங்கள் தின்ற கால்கள் என எல்லாவற்றுக்கும் தங்கள் கால்களை இழந்து விட்டு, இப்போது துயரோடு தெருக்களில் அலைவோர் கடந்த காலத்தைப் பெருஞ்சுமையாகக் காவிக் கொண்டு திரிகின்றனர். நீக்கவே முடியாத கடந்தகாலம் அது.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீமைக்கருவேல மரங்கள் ஆபத்தானவையா?

■ வி.மணிகண்டன்

'சீமைக்கருவேல மரத்தை ஒழிக்க வேண்டியதில்லை' என்று சில கட்டுரைகளை சமீபத்தில் வாசிக்க நேர்ந்தது. கீற்று இணையத்தளத்தில் ஒரு கட்டுரை வெளியானது. பிறகு விகடன் இணையத் தளத்தில். இந்தக் கட்டுரைகள் பிரதியெடுக்கப்பட்டு வட்ஸ் அப், ஃபேஸ்புக் வழியாக பல லட்சக்கணக்கானவர்களை அடைந்து பல்லாயிரக்கணக்கானவர்களின் மனதை மாற்றியிருக்கக் கூடும். சீமைக்கருவேல ஒழிப்புக்கு ஆதரவான மனநிலையில் இருக்கிற காரணத்தினாலேயே உடனடியாக பதில் எழுத வேண்டியதில்லை எனத் தோன்றியது. அவர்கள் சொல்வதிலும் கூட் உண்மை இருக்கலாம் அல்லவா?

அறிவியல் பூர்வமாக சில தகவல்களைத் திரட்டுவதற்கு முன்பாக அனுபவரீதியிலான கருத்துக்களையும் திரட்ட வேண்டியிருந்தது. கடந்த சில நாள்களாகவே விவசாயிகளிடமும் பெரியவர்களிடமும் இது குறித்துப் பேசுவதற்கு நிறைய இருந்தது.

எங்கள் அம்மத்தாவுக்கு எண்பது வயது இருக்கக் கூடும். அவருடைய திருமணம் வரைக்கும் சீமைக்கருவேல மரத்தை பார்த்ததேயில்லை - என்றார். அப்பொழுது பவானிசாகரிலிருந்து விதைகளை வாங்கி வருவார்களாம். எங்கேயிருந்து வாங்கி வருவார்கள் என்று அவருக்குச் சரியாகத் தெரியவில்லை. அநேகமாக ஏதேனுமொரு வேளாண்மை அலுவலகம் அங்கே இருந்திருக்கக் கூடும். அம்மத்தாவுக்கு இருபது வயதில் திருமணம் ஆகியிருக்கலாம் என்று கணக்கிட்டால் இன்றிலிருந்து அறுபது வருடங்களுக்கு முன்பாக சீமைக்கருவேல மரம் பரவத் தொடங்கியிருக்கிறது. அம்மத்தா அதை 'சீமை வன்னி மரம்' - என்றார். இதை வேலி முள் என்பவர்களும் உண்டு. டெல்லி முள் என்பவர்களும் உண்டு.

வேலி ஓரமாக விதையிட்டு அவை வளர்ந்த பிறகு விதைகளை ஆடு மாடுகள் தின்று எச்சம் கழிக்கும் இடங்களில் எல்லாம் பரவத் தொடங்கின. வேலிக்கு வந்த மரம் விறகாகப் பயன்படத் தொடங்கிய காரணத்தால் எல்லோருக்கும் விருப்பமான மரமாகியிருக்கிறது. இந்தக் காலகட்டத்துக்குப் பிறகுதானே சாண எரிவாயு, மண்ணெண்ணெய் ஸ்டவ் முதலியன வந்து சேர்ந்தன? மரம், வறட்டி ஆகியவற்றை வைத்து அடுப்பு எரிந்த காலத்தில் கடும் வறட்சியின் போதெல்லாம் வேலி மரம்தான் ஆபத்பாந்தவன். எவ்வளவு வறட்சியிலும் தம் கட்டி நிற்கு. வெட்டிக் கொள்ளலாம். அதே போல கடும் வெப்ப காலத்திலும் கால்நடைகளுக்கு நிழல் தருவதற்கு ஏற்றதாக இருந்ததால் யாருக்குமே இந்த மரத்தை எதிரியாகப் பார்க்கத் தோன்றவில்லை.

ஆரம்பத்தில் நண்பனாகத் தெரிந்த மரம்தான் கடந்த அறுபதாண்டு காலமாக இந்த மரம் புதரைப் போல பரவத் தொடங்கிவிட்டது. குளம் குட்டைகளில் பெரும் ஆக்கிரமிப்பு இந்த மரங்கள்தான். பள்ளங்கள், கால்வாய்கள் என நீர் வரத்துப் பாதைகளை முழுமையாக மறித்து நிற்கின்ற மரங்களும் இவைதான். 'புதராக வளரக் கூடிய எந்த மரமும் வேளாண்மைக்கு உகந்ததல்ல' என்பதுதான் அனுபவம் வாய்ந்த உழவர்களின் வாதம். நிலத்தடி நீரை உறிஞ்சுவது ஒரு பக்கம் இருக்கட்டும் - குளம் குட்டைகளுக்கு நீர் வரத்தை பெருமளவு மட்டுப்படுத்துகின்றன.

குட்டைகளிலும் ஏரிகளிலும் புதராகப் பெருகி நின்று நீர்த் தேக்கத்தை கடுமையாகக் குறைக்கின்றன. நீர் நிலைகளை மேம்படுத்த வேண்டுமானால் சீமைக்கருவேல மரங்களை அழிக்க வேண்டியிருக்கிறது. ஒன்றிரண்டு மரங்கள் தப்பினாலும் விதை விழுந்து அவை மீண்டும் நீர் நிலைகளைச் சீரழித்துவிடும்.

இன்னொரு கூற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

'ஓட்டாத காடு செழிக்கும்' என்ற பழமொழியே உண்டு. உதாரணமாக, தற்சமயம் வறட்சியின் காரணமாக பயிர் செய்யாமல் நிலத்தை வைத்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நீர் பெருகி விவசாயம் செய்யத் தொடங்கும்போது, விளைச்சல் அமோகமாக இருக்கும். எளிமையான காரணம்தான். மண்ணுக்கு ஓய்வு தரும் போது நுண்ணுயிரிகள் மண்ணை வளமூட்டிச் செறிவு படுத்துகின்றன. உழவர்களிடம் பேசினால் ஒரு விதிவிலக்கைச் சொல்கிறார்கள். 'வேலி முள் முளைக்காமல் இருந்தால்தான் விளைச்சல் இருக்கும்' என்கிறார்கள். ஒருவேளை இந்த வறட்சிக் காலத்தில் வேலிக்காகத்தான்(சீமைக்கருவேலம்) முளைத்து பெருகியிருந்தால் அந்த பூமியில் மீண்டும் விவசாயம் செழிக்க சில ஆண்டுகளாவது தேவைப்படும். சீமைக்கருவேல மரத்துக்கு ஆதரவாகக் குரல் எழுப்புகிறவர்கள் இந்தக் கோணத்தில் விசாரித்துப் பார்க்கலாம். ஏதோவொரு வகையில் மண்ணின் வளத்தையும் அதன் உயிர்த்தன்மையையும் இம்மரங்கள் அகற்றுகின்றன.

இதே கூற்றோடு இணைத்துச் சொல்ல இன்னுமொரு தரவும் உண்டு. ஒரு நிலத்தில் சீமைக்கருவேல மரமிருந்தால் அது பிற அனைத்துச் செடிகளையும் அழித்துவிடும். நிலத்தில் இருக்கும் வளத்தையும் ஈரத்தையும் இந்த மரங்களே முழுமையாக எடுத்துக் கொள்கின்றன என்பது முக்கியமான காரணமாக இருக்கலாம். சீமைக்கருவேல மரங்கள் பரவியிருக்கும் பகுதிகளில் பயணித்துப் பார்த்தால் இதைக் கண்கூடாகவே பார்க்க முடியும். சீமைக்கருவேல மரங்கள் மட்டுமே செழித்திருக்க பிற மரங்கள் கருகி கருவாடாகிக் கிடக்கின்றன.

சீமைக்கருவேல மரங்கள் பிற தாவரங்களைத் தப்பிக்கவிடாமல் செய்வதற்கான இன்னொரு முக்கியக் காரணம் அம்மரத்திலிருந்து வெளிப்படும் வெம்மை. அடிக்கடி சூடு பிடித்துக் கொள்ளும் குழந்தையை சீமைக்கருவேல மர நிழலுக்கு அனுமதிக்காத பழக்கம் எங்கள் ஊர்ப்பக்கத்தில் உண்டு. 'வேலி மரத்துக்கிட்டயே ஆடினால் சூடு பிடிக்காமல் என்ன பண்ணும்' என்று கேட்பார்கள். இதையும் கூட கிராமப் பெண்கள் அனுபவ ரீதியாகவே கண்டறிந்து வைத்திருக்கிறார்கள்.

சீமைக்கருவேல மரங்களை ஆதரிக்கிற எந்தக் கட்டுரையும் அறிவியல் ரீதியிலான தரவுகளை முன் வைக்கவில்லை. அதே போலவே சீமைக்கருவேல மரங்களுக்கு எதிரான கட்டுரைகளும் அறிவியல் ரீதியிலான விவாதத்தை மேற்கொள்ளவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் சீமைக்கருவேலத்தை ஒழிக்காமல் நீர் நிலைகளை மேம்படுத்துதலும், வறட்சியை ஒழிக்கும் நடவடிக்கைகளும் எந்தவிதத்திலும் சாத்தியமில்லை என்பதை அனுபவபூர்வமாகச் சொல்ல முடியும். வறட்சி பாதித்திருக்கும் அத்தனை கிராமங்களிலும் இம்மரம் பூதத்தைப் போல பரவியிருக்கிறது. இதை அழித்துச் சுத்தம் செய்யாமல் எந்தவொரு முன்னெடுப்புக்கும் வாய்ப்பில்லை.

விறகாகப் ப்யன்படுகிறது, ஒட்சிசனை வெளியிடுகிறது போன்ற மொன்னையான வாதங்களைத் தவிர்த்துவிட்டுப் பேசலாம். ஒட்சிசனை வெளியிடுகிறது என்பதெல்லாம் இரண்டாம்பட்சம். புதராக மண்டுகிறது என்பதுதான் முக்கிய பிரச்சினை.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்திக்கு தடைக்கல்லாக நிற்பது எது?

- அ.றொக்ஷன்




பலவிதமான போராட்டங்கள், சர்வதேச அழுத்தங்கள், இந்திய அரசின் தலையீடு எனத் தாங்கமுடியாத அரசியல் நெருக்கீடுகளினால் உந்தப்பட்ட சிங்கள அரசு, ஒருவிதமாக வட மாகாண சபைத் தேர்தலை நடத்த ஒத்துக் கொண்டது. வட மாகாணசபைத் தேர்தலில் ஒரு நடுநிலையாளர் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு எந்தவித அரசியல் நெடியுமற்ற, தலைமை நீதிபதியாகவிருந்த சி.வி.விக்னேஸ்வரன் இதற்குத் தகுதியானவர் என்று பல தரப்பினராலும் முன்மொழியப்பட்டு தேர்தல் நடைபெற்றது. விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவிக்கு முன் மொழிந்ததற்கு இன்னொரு காரணமும் இருந்தது. போருக்குப்பின் புதிதாக உருவாகப் போகும் மாகாணசபையானது பல வழிகளிலும் சட்டச் சிக்கல்களை எதிர் நோக்கலாம் என்றும் சட்டம் தெரிந்த ஒருவரால் அவற்றைச் சுமுகமாக எதிர்கொள்ள முடியும் என்று மக்களால் நம்பப்பட்டது.

வட மாகாண சபையிலே வெற்றியீட்டிய தமிழ்க் கூட்டமைப்பும் சி.வி. தலைமையிலே ஒரு அமைச்சரவையைத் தெரிவுசெய்தது. இந்த அமைச்சரவையில் பல படித்த ஆளுமைகள் உட்புகுத்தப்பட்டபோது சி.வி. மிகுந்த புத்திசாதுரியத்தோடு நடந்து கொள்வதாக மக்கள் மகிழ்சியடைந்தனர். படுவேகமாகச் செயற்படுகிறோம் என்று வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்ட அமைச்சர்கள் யாவரும் விரைவில் சுருண்டு படுத்துக் கொள்ளுவர் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. வட மாகாண சபை முடமாகிப் போனது. அபிவிருத்தியென்பது மருந்துக்குக் கூட இல்லை. வட மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட அத்தனை அரச நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற அத்தனைபேரும் தன்னிச்சையாகச் செயற்படுவதாக மக்கள் விசனப்படத் தொடங்கியிருக்கின்றனர். பெரும்பாலான திணைக்களங்களிலுள்ள மேலதிகாரிகள் பற்றி வருகின்ற செய்திகள் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன; துன்பத்தைத் தருகின்றன. ஒவ்வொருவரும் தனக்கு மேலுள்ளவர்களைத் திருப்திப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றனரே தவிர மக்கள் நலனைக் கவனிப்பதில்லை. இதற்காகவா இத்தனை நாள் காத்திருந்தோம்,போராடினோம்? என்று தம்மைத் தாமே கேள்வி கேட்கும் பைத்தியக்கார நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதுவே வட மாகாண சபையின் இன்றைய நிலவரம்.

வடமாகாண சபையிலுள்ள முதலமைச்சரோ அன்றி ஏனைய அமைச்சர்களோ தத்தம் அதிகார வரம்புக்கு உட்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்றிட்டங்களுக்கு ஜனாதிபதியினதும் மத்திய அரசாங்கத்திடமும் அனுமதி பெறவேண்டுமென்பதில்லை. பிரதேச செயலகங்களை நோக்கி தீர்வுக்காக வருகின்ற மக்களது அன்றாடப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாதபடி நிலைமைகளே தென்படுகின்றன. அப்படித் தீர்க்கப்பட்டிருந்தால் ஒரு பகுதி மக்களாவது சந்தோசமடைந்திருக்கக்கூடும் . ஆனால் அதற்கான வாய்ப்புகள் எதுவுமே இல்லாமல் செய்துவிட்டார்கள்.

வட மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் உருண்டோடிவிட்டன. இருந்தும் என்ன பயன்? மக்களுக்காக உருவாக்கப்பட்ட வடமாகாண சபை, வடக்கு மக்களுக்குரிய வாழ்வியல் சார்ந்த எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதை அது சார்ந்தவர்களே ஒத்துக் கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். வெள்ளை நிற கட்டடத்துக்குள் அமர்வுகள் மாத்திரம் நடந்து கொண்டே செல்கின்றன. அடிபிடிகளும், அமளியும், சண்டை சச்சரவுகளும் நடைபெறுகின்றன. ஒருவரை இன்னொருவர் காயப்படுத்தும் நடவடிக்கைகளும் நடந்திருக்கின்றன. ஊடகத்துக்குச் செய்தி தருவதற்காகவும், மேலிடங்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவுமே சபை கூட்டப்படுத்துகிறதா? வெறுமனவே தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்காகவும் கருத்துப் பகிர்வுக்காகவும் ஒரு சபை அவசியமா? என்று மக்கள் கேட்கத்தொடங்கியிருக்கின்றனர்.

26 வருடங்களின் பின்னர் வடக்குக்கென்று ஒரு மாகாணசபை 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தோற்றம் பெற்றது. இதனால் தமக்கான தீர்வுகள் எற்படுத்தப்பட்டு விடும் என்ற நம்பிக்கையும் மக்களிடத்தே மலரத்தொடங்கியது.

வடமாகாணசபையின் முதலாவது அமர்வு 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக நடைபெற்று அவைத்தலைவர், பிரதி அவைத் தலைவர், அமைச்சர்கள், நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து செயற்பட ஆரம்பித்த மாகாணசபை எந்தவிதமான ஆரோக்கியமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளாது இன்றுவரை செயலிழந்தே காணப்படுகின்றது. அமைச்சர்களும் கொடுக்கப்பட்ட அமைச்சுக்களில் வெறும் தலைமை தாங்குபவர்களாகவே செயற்பட்டுக் கொண்டு வருகின்றார்கள். இந்நிலையிலேயே தீர்மானங்களை நிறைவேற்றுவதுடன் அமர்வுகளையும் நடத்திக் கொண்டே மூன்றரை ஆண்டுகள் நிறைவடைந்தும் விட்டன.

ஒவ்வொரு அமர்வுக்கும் சுமார் நான்கரை இலட்சம் ரூபா செலவு செய்யப்படுகின்றது. அப்படியாயின் சபையின் முழு நிர்வாகச் செலவுமே வருடத்தில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் தாண்டும் என்று கணக்கிடலாம். கோடி ரூபா செலவு செய்து நடத்தப்படும் சபையினால் ஓர் ஆரோக்கியமான செயற்றிறன் மிக்க செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தப்பட முடியாவிட்டால், சபை நடத்துவதில் என்ன தேவை இருக்கிறது? சபையை மூடிவிட்டு அந்தச் செலவினத்தை மக்கள் நலனுக்காகச் செலவிடலாம் என்பது மக்கள் கருத்து.

இதேவேளை, கடந்த மூன்றரை ஆண்டுகளில் சபையின் மோசமான செயற்பாடுகளின் விளைவாக மக்கள் மத்தியில் அது செல்வாக்கை இழந்து கொண்டு வருவதாக உணரப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களினாலும் இது தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

வடமாகாண சபை நியதிச் சட்டங்கள் எதையுமே நிறைவேற்றவில்லை. "அத்தகைய நியதிச்சட்டங்களை நிறைவேற்றத் தடையாக அவைத் தலைவரே உள்ளார்" என அர்த்தப்படுத்தி அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு கூறிய கருத்தை ஆணித்தரமாக மறுத்திருக்கிறார் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம்.

"வடமாகாண சபை 355 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள துடன் அவை பொறுப்புவாய்ந்த தரப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" எனக் கடந்த 90ஆவது அமர்வின்போது கூறியிருக்கிறார் சபை முதல்வர்.

"இந்த விடயங்கள் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த முன்னேற்ற அறிக்கை மாகாணசபையில் உள்ளது. எனவே என்ன செய்கின்றீர்கள்? என்ன செய்துள்ளீர்கள்? என்று கேள்வி கேட்பவர்கள் முதலில் அந்த முன்னேற்ற அறிக்கையை பார்த்து விட்டு வந்து பேசவேண்டும். என்னுடைய கைகளில் ஆறு நியதி சட்டங்கள்தான் தற்போது உள்ளன. ஏனையவை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. இதிலும் ஐந்து நியதி சட்டங்கள் முதலாம் வாசிப்பும் முடிவுற்றுள்ளது. வடமாகாண சபையை சில்லறைக் கடையாக கருதி யாரும் கதைக்கவும், தெரியாத விடயங்களை பற்றிப் பேசவும் கூடாது. வடக்கு மாகாண சுற்றுலா, அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டம், வடக்கு மாகாண நகை அடகு பிடிப்போர் நியதிச்சட்டம், வடக்கு மாகாண கனியவள நியதிச்சட்டம், நீதிமன்ற தண்டப்பணம் கைமாற்றல் நியதிச்சட்டம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம், கூட்டுறவு அபிவிருத்தி நியதிச்சட்டம், ஆகிய நியதிச் சட்டங்களே தற்போது எனது கைகளில் உள்ளன.

இதனை விட எந்த நியதிச் சட்டங்களும் எனது கைகளில் இல்லை. நியதிச் சட்டம் உருவாக்குவது என்பது இலகுவான காரியமல்ல. நாடாளுமன்றத்துக்கு ஒப்பான விடயங்களையே மாகாண சபையும் கையாள்கின்றது. ஆகவே இந்த விடயத்தை முழுமையாக அறிந்துகொள்ளாமல் குற்றம் சாட்டுவதை நிறுத்த வேண்டும்" என்றும் அவைத்தலைவர் தெரிவித்திருந்தார். இது அந்த நேரத்தில் அமர்விலே உறுப்பினர்களை வாயடைக்கச் செய்தற்காக அவைத்தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயக் கருத்தாகும் என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

இது இவ்வாறிருக்கை யில், வடமாகாண முதலமைச்சர், "மத்திய அரசும்தான் வடக்குக்கு எந்தவிதமான அபிவிருத்தியையும் செய்யாமலும் செய்ய விடாமலும் இருக்கிறது. அத்துடன் நாங்கள் அபிவிருத்தியை மேற்கொள்ள மத்திய அரசும் எமக்கு அதிகாரத்தையும் தரவில்லை" என்று ஒரே மாதிரியான குற்றச்சாட்டை வடக்குக்கு வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் முன் வைத்துக் கொண்டே வருகின்றார். அத்தோடு அவர் வடமாகாணசபை சார்பாக பல அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டு வருகிறார் . அவ்வாறு அவரினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் ஊடகங்களிலே பெரிதும் பேசப்பட்டாலும் நடைமுறையில் வெறும் கருத்துக்களாகவே போய்விட்டன.

சட்டம் தெரிந்தவர் முதலமைச்சர். அவர் ஒரு நீதியரசரும் கூட. அப்படிப்பட்டவர் கடந்த மூன்றரை ஆண்டுகளில் தற்போது காணப்படுகின்ற நிலைமைக்கான மாற்று வழியை கண்டு பிடிக்காதது ஏன்? இப்படிப்பட்ட சிக்கல்கள் வருமென்றெண்ணித்தானே சட்டம் தெரிந்த ஒருவரை நியமித்தோம். இல்லாவிடில் ஒரு அரசியல்வாதி போதுமே. பள்ளிப் படிப்புகளைக் கூட எட்டாத பிரேமதாஸ, இந்த நாட்டில் பல விடயங்களைச் சாதித்துக் காட்டினார் என்பது ஊரறிந்த விடயம். வடமாகாணசபையின் அதிகாரங்களுக்கு உட்பட்டுச் செய்யக் கூடிய அபிவிருத்திகளைக் கூட செய்யாமல் எதற்கெடுத்தாலும் மத்திய அரசை ஏன் முதலமைச்சர் குற்றம்சாட்ட வேண்டும்?

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரப்பலன்

**மேடம்**
தொழில் கேடு. சுய சிந்தனை. பிறரால் நேசிக்கப்படல்.

**ரிஷபம்**
சமூகச் சிந்தனை. தொலைதூரப்பயணம். தொழில் மாற்றம்.

**மிதுனம்**
பண வரவு. காரியக்கேடு. கல்வி விருத்தி. மனமாற்றம்.

**கடகம்**
செலவுக்கேற்ற வரவின்மை. வேலையாள்கள் சகாயம்.

**சிம்மம்**
மன மகிழ்ச்சி, மனித நேயம். பொருட் செலவு. அச்சம்.

**கன்னி**
ஆலய தரிசனம் மனித நேயம் தொழில் விருத்தி

**துலாம்**
தர்ம சிந்தனை. உறவு விருத்தி பொருள் நஷ்டம்.

**விருச்சிகம்**
தெய்வ சிந்தனை. கனவு பலிதம். காரியக்கேடு. தொண்டு.

**தனுசு**
கோயில் தரிசனம். வேலையாள்கள் சகாயம். தர்மம்.

**மகரம்**
தார சுகக் குறைவு. அதிக செலவு. வீண் அலைச்சல்

**கும்பம்**
வீண் செலவு. மனை மாட்சி, கல்வி மேன்மை, பலம்.

**மீனம்**
சுகச் செலவு. பொருள் வரவு. மனச்சஞ்சலம். தயக்கம்






தேசிய கலை இலக்கியப் பேரவையின் 44ஆவது ஆண்டு விழா கடந்த 02.4.2017 அன்று கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதான மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற்றது.




இளங்கோ எழுதிய "பேயாய் உழலும் இச்சிறுமனமே" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் உரையாடலும் கடந்த 16.04.2017 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது...






தும்பளை மேற்கு சனசமூகநிலையம். 68ஆவது ஆண்டுவிழா கடந்த 16.04.2017 அன்று நடைபெற்றது.



சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாணவர் கௌரவிப்பும் சாதனையாளர் கௌரவிப்பும் நிகழ்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 17.04.2017 நடைபெற்றபோது...



வ/சண்முகானந்தா வித்தியாலயத்தில் தரம் 1 மற்றும் 2இல் கல்விகற்கும் வறிய மாணவர்களுக்கு 'வெளிச்சம்' அறக்கட்டளையால் ஒருதொகை கற்றல் உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுவும் ஒரு ஸ்மார்ட் மயம்..!

உலகமே ஸ்மார்ட் மயமாகி வருவது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் இப்போது ஸ்மார்ட் சீப்பு அறிமுகமாகியுள்ளது. அழகு சாதனங்கள் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் லோரியல் நிறுவனமே ஸ்மார்ட் சீப்பை உருவாக்கியுள்ளது.

இந்தச் சீப்பினால் தலை இழுக்கும்போது ஏற்படும் அதிர்வு, ஒலியை வைத்து தலைமயிரின் தன்மை மற்றும் பிற தகவல்கள் குறித்து தகவல் தந்துவிடும்

அதுமட்டுமல்ல நீங்கள் தலையை எப்படி இழுக்க விரும்புகிறீர்களோ அதற்கேற்ப அழுத்தம் கொடுத்து தலை வார்வதை இலகுபடுத்தும்.

# நடக்காமலே சுற்றிப் பார்க்கலாம்



சுற்றுலா என்றாலே பலருக்கும் ஏற்படும் பயம் நீண்ட தூரம் நடக்க வேண்டுமே என்பதே. சீனாவின் என்சி கன்யன் பள்ளத்தாக்கை பார்வையிடச் செல்பவர்களுக்கு இந்தப் பயம் தேவையே இல்லை.


ஏன் தெரியுமா? அங்கு செல்பவர்கள் படியில் ஏறி நிற்க வேண்டியது மட்டும்தான் வேலை. அது தானாகவே நகர்ந்து செல்லும். நீங்கள் நினைப்பது சரிதான்; விமான நிலையங்கள், மிகப்பெரிய வணிக மையங்கள் போன்றன நகரும் படிகள் தான். அது உங்களை நகர்த்திச் சென்று 18 நிமிடங்களிலேயே பள்ளத்தாக்கை முழுதாகப் பார்க்க வைத்துவிடும்.

688 மீற்றர் நீளமான இந்த நகரும் படிகள்தான் உலகிலேயே மிக நீளமான நகரும் படிகளாம்.

# ஒரிகாமி தெரியும்...! கிரிகாமி தெரியுமா..?

பேப்பரை மடிப்பதால் மட்டுமே உருவங்களை உருவாக்கும் கலை ஒரிகாமி எனப்படும். இதன்போது கத்தரிக்கோலோ அல்லது பசையோ பயன்படுத்தக்கூடாது.

மாறாக கிரிகாமியில் பேப்பரை மடித்து உருவங்களை உருவாக்கி, பின்னர் அதனை வெட்டிப் பிரித்தல் ஆகும். ஜப்பானிய மொழியில் கிரி என்றால் வெட்டு காமி என்றால் பேப்பரைக் குறிக்கும்.






# சுட்டி முயலும் குள்ளநரியும்

ஓர் அடர்ந்த காட்டில் முயல் கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. அதில் ஒரு முயல் படு சுட்டி. எப்போதும் தன் கூட்டத்தை விட்டு தனியே செல்ல முயற்சிக்கும்.



ஒருநாள் - அந்த சுட்டி முயல் தனியே சென்றபோது, ஒரு வண்ணத்துப்பூச்சியை கண்டு அதன்பின்னால் சென்றது. "ஏன் என் பின்னால் வருகிறாய்... உன் கூட்டத்துடன் செல்லவில்லையா?" என்று கேட்டது வண்ணத்துப் பூச்சி. "நான் உன்னுடன் நண்பனாய் இருக்க விரும்புகிறேன். என்னையும் சேர்த்துக் கொள்," என்றது முயல். "சரி!" என்று தலையசைத்தது வண்ணத்துப்பூச்சி.

"இந்தக் காட்டில் ஒரு தந்திரக்கார நரி இருக்கிறது. அது உன்னை சாப்பிட்டுவிடும். எனவே, தனியே வராதே. உன் கூட்டத்துடனே இரு. நான் அங்கு வந்து உன்னைத் தினமும் சந்திக்கிறேன்," என்றது வண்ணத்துப்பூச்சி. தினமும் அவர்கள் சந்திப்பதை தந்திரக்கார நரி ஒளிந்து நின்று கவனித்தது.

இந்த முயலை எப்படியாவது வேட்டையாட வேண்டும் என்று எண்ணியது. அவ்வாறு எண்ணியபோதே அதன் நாக்கில் எச்சில் ஊறியது.

முயல் தனியாக இருக்கும் சமயம் பார்த்து, "முயல் குட்டியே! என்னுடன் நண்பனாய் இருக்க விரும்புகிறாயா?" என்று கேட்டது. "நீ என்னைப் போன்ற சிறு விலங்குகளை ஏமாற்றி சாப்பிடுவாயாமே?" என்றது முயல்.

"யார் சொன்னது?" என்று கேட்டது நரி. "என் நண்பன்தான் அப்படிச் சொன்னான்," என்றது முயல். "உன் நண்பர் யார்?" என்றது நரி. "வண்ணத்துப் பூச்சிதான் என் நண்பன்!" என்றது முயல். "அவன் பொய் சொல்கிறான் நான் மிகவும் நல்லவன்!" என்றது நரி. நரியை நண்பனாக ஏற்றுக் கொண்டது முயல்.

மறுநாள் முயலை சந்திக்க வந்தது வண்ணத்துப்பூச்சி. "நீ என்னுடன் பேசாதே! நரி அண்ணன் மிகவும் நல்லவன். அவனைப் பற்றி ஏன் தவறாக என்னிடம் சொன்னாய்!" என்றது முயல்.

"நான் சொல்வது இப்போது உனக்குத் தவறாகத்தான் தோன்றும். பின்னர் நீ அனுபவிப்பாய்," என்று சொல்லி விட்டு பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி.

நரியுடன் புதிய நட்பை வளர்த்துக் கொண்டது முயல். ஒருநாள் - "நான் உனக்கு நிறைய கரட் தருகிறேன். என்னுடன் வா," என்று ஆசை வார்த்தை கூறி முயலை அழைத்தது நரி. அதன் பேச்சை நம்பி அதன்பின் சென்றது முயல். சிறிது நேரம் சென்றபின், "எங்கே கரட்... நாம் வெகு தூரம் வந்துவிட்டோமே," என்று கேட்டது முயல்.

"முட்டாள் முயலே, என்னிடம் நல்லா ஏமாந்துவிட்டாயா," என்றது நரி.

அப்போதுதான் நரியின் பயங்கரமான முகத்தை கண்டது முயல்.

"என்னைக் காப்பாற்றுங்கள்... என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கத்தியது முயல். அந்த இடத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்த வண்ணத்துப் பூச்சி, முயல் கூட்டத்திடம் விரைந்து சென்று விடயத்தைச் சொன்னது. உடனே, தாய் முயல், பெருங்கூட்டத்தை கூட்டி வந்து நரியை விரட்டி, அதன் பிடியிலிருந்து காப்பாற்றியது.

தன் தவறை உணர்ந்து, வண்ணத்துப் பூச்சியிடம் மன்னிப்புக் கேட்டது முயல்.

அதன்பின், வண்ணத்துப் பூச்சியின் நெருங்கிய நண்பனாகிவிட்டது முயல்.

# 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# விடுகதைகள்


1. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். அது என்ன?
3. காக்கைப் போலக் கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?
4. தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?
5. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது. அது என்ன?
6. காற்றிலே பறக்கும் கண்ணாடிக் குண்டு, தொட்டுவிட்டால் பார்க்க முடியாது அது என்ன?
7. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு. அது என்ன?
8. ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான். அவன் யார்?
9. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

**விடைகள்**

1. வாழைப்பூ 2. பேனா 3. நாவல்பழம்
4. தேங்காய் 5. காய்ந்த மிளகாய்
6. நீர்க்குமிழி 7. விரல்கள் 8. பம்பரம்
9. கிளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாஸ் எரிந்த சிதையிலேயே எரிக்கப்பட்ட சிறிசபாரத்தினம்!





**கூட்டமைப்பும் புலிகளும் 5**

- தயாளன்

கடவுளுக்குத் தெரியாத இடமே இல்லை. அவர் கைதாகி விட்டதால் யாருக்கு என்னென்ன பிரச்சினை வரப்போகிறதோ என சிலர் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கையில் சைக்கிளில் அவர் வந்து கொண்டிருந்தார். ஓடோடென்று ஓடிப்போய் அவரது சைக்கிளை வாங்கிக்கொண்டு அவரைத் தரதரவென இழுக்காத குறையாக அந்தக் கோயிலுக்கு கொண்டு வந்தனர் மக்கள். அவல் குழைத்து மணியடித்து பூசை செய்தனர். நெற்றி நிறைய விபூதி பூசினர். பிறப்பால் கிறிஸ்தவரான அவர் ஆரையம்பதி மக்களின் அன்பில் நெகிழ்ந்து நின்றார்.

அம்பாளாந்துறைப் பகுதியில் ஒரு நாள் பசீரை சைக்கிளில் வைத்து மிதித்துச் சென்றார் இவர். கடவுளை மிதிக்க வைத்து ஒருவர் சுகமாக இருந்து போவதாக ஒருவருக்குப்பட்டது. சைக்கிளை மறித்த அவர் பசீரைப் பார்த்து " இறங்கு! எங்கட ஐயாவை உழக்க வைத்து நீ சொகுசாப் போகிறியோ? உன்னால அவரை வைச்சி உழக்க முடியாதா" எனத் திட்டினார். பசிருக்கு சந்தோசமாக இருந்தது. கடவுள் அந்த மக்கள் மனதில் எப்படியான இடத்தைப் பிடித்துள்ளார் என்பதைப் பின்னர் கடவுளுக்கு அவர் சுட்டிக் காட்டினார்.

நகைச்சுவையாகப் பேசுவதில் வல்லவர் அவர். கிரானில் வைத்து இவரிடம் புலிகளுக்குச் செல்வாக்கு இல்லை என்றும் சில கிராமங்களைச் சுட்டிக்காட்டி இவையெல்லாம் தமது கோட்டையெனவும் இறுமாப்புடன் கூறினர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர். அவர்கள் சொல்லி முடித்ததும் "தோழர் ஒண்டை மறந்திட்டீங்கள். பூசாவும் உங்கட கோட்டைதானே" என்று கேட்டார் கடவுள். சைனட்டை நிராகரித்து ஒருவர் பிடிபட சங்கிலித் தொடராக மற்றவர்களையும் கைதாக வைக்கும் அவர்களின் போக்கையே கடவுள் இவ்வாறு கிண்டலடித்தார்.

அன்ரன் பாலசிங்கத்தின் அன்பைப் பெற்ற போராளிகளில் இவரும் ஒருவர்.

மட்டக்களப்பில் முதன்முதலாக குண்டுவீச்சு விமானங்களின் துணையுடன் வெல்லாவெளியில் இருந்து மணல்பிட்டி சந்தியை நோக்கி ஒரு நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர் விசேட அதிரடிப் படையினர். இந் நடவடிக்கையை தமது உக்கிர எதிர்த்த தாக்குதல் மூலம் முறியடித்தனர் புலிகள். இந்தச் சமரில் கடவுள் தீரமுடன் செயற்பட்ட விதம் குறித்து நினைவு கூர்ந்தார் அத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய பொட்டம்மான். அத்துடன் கடவுளின் விலகல் துரதிர்ஷ்ட வசமானது எனவும் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் சிறி சபாரத்தினத்தின் நினைவு நாளை யொட்டி யாழ். சட்டநாதர் கோயிலடியில் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வேளை அருணன் என்பவர் இணையத்தளத்தில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார். அதன்தலைப்பு "அப்பாத்தோழரை ஏன் மறந்தனர் ?" அக்கட்டுரையின் - சில பகுதிகள் -

"இறந்தவர்களை நினைவு கூருவது மரபு. அந்த வகையில் ரெலோ தலைவர் சிறி சபாரத்தினத்தை நினைவு கூர எதிர்வரும் 8ஆம் திகதி யாழ். சட்டநாதர் கோயிலடியில் ஒரு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் சகோதரப் படுகொலைகள் பற்றிக் கட்டாயம் வருத்தம் தெரிவிக்கப்படும். இது இயல்பானதே. சிறிலங்கா சோஷலிஸக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய உட்பட பரந்துபட்டளவில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பில் டக்ளஸ் தேவானந்தா ஏன் விடுபட்டார் என்பது புரியாத புதிராக உள்ளது.

06.05.1986 இருபாலையில் உள்ள ஒரு மயானத்தில் சிறீசபாரத்தினத்தின் சடலம் கட்டைகள் மீது அடுக்கப் பட்டிருந்தது. அங்கே வந்த ஒருவர் " இதே இடத்திலதான் தாஸின்ர சடலமும் கட்டை அடுக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டது." என்று கூறினார் .

குறுகிய காலத்துக்கு முன்னால்தான் தாஸூம் அவரது நண்பர்களும் யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். வடமராட்சியைச் சேர்ந்த தாஸின் உறவினர்களும் நண்பர்களும் இறந்தவர்களின் சடலங்களைத் தம்மிடம் கையளிக்க வேண்டுமெனத் தீவிரமான போராட்டங்களை நடத்தினர். யாழ்.பல்கலைக்கழகமே இந்தப் போராட்டங்களின் மையமாக விளங்கியது. அங்கு கலந்துகொண்ட பலரும் சடலங்களைக் கோர ஒரு குழுவை உருவாக்கினர். இந்த விடயங்கள் அனைவருக்கும் தெரிந்தவைதான்.

"இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கிய டக்ளஸ் சிறியரிட்ட "மக்களின்ர போராட்டங்களுக்கு மதிப்பளிச்சு அந்த சடலங்களைத் தாங்கோ" எனக் கேட்டார். கையத் திருப்பி மணிக்கூட்டப் பார்த்த சிறியர் "இந்த நேரம் எல்லாம் சாம்பலாப் போயிருக்கும்" எண்டார். இன்னும் கொஞ்ச நாளில தானும் இதே இடத்தில எரிவனெண்டு கொஞ்சமும் நினைச்சுப் பார்த்திருக்கமாட்டார்." என அவர் மேலும் சொன்னார். கொள்ளி வைக்க போனவரோ தமிழகத்தில் நிகழ்ந்த முன்னாள் ரெலோ உறுப்பினர் ரமேசின் (சாரதி) மரணத்தையும் நினைவு கூர்ந்தார். ஒன்று மட்டும் உண்மை தாஸ் சிறியரோடு இருந்திருந்தால் அவரின் உயிர் போன பின்பே சிறியரின் உயிர் போயிருக்கும்.

மாவை, கஜேந்திரகுமார் என தமிழ் அரசியலில் எதிரும் புதிருமாக இருப்போரை அழைத்தவர்கள் டக்ளஸை அழைத்தால் ஒரு வேளை அவர் இந்தச் சம்பவங்களை நினைவு கூரக் கூடும் என நினைத்துத் தான் அதைத் தவிர்த்திருக்கிறார்கள் போல இருக்கிறது. இதுதான் காரணம் என்றால் மிகப் பெரும் தவறு. ஏனெனில்



கோவிந்தன் கருணாகரம் (ஜனா)

தாஸூக்கு ரெலோ இயக்கம் பத்திரிகைகளில் அஞ்சலி செலுத்துகிறது. அது மனப் பூர்வமாகச் செய்யப் படுகிறதென்றால் நினைவு கூரும்போது சிறி சபாரத்தினத்தின் படத்துடன் தாஸின் படத்தையும் வைக்க வேண்டும். அதுபோல் டக்ளஸையும் உரையாற்ற அழைக்க வேண்டும். ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் ஈ .பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் (P.L.A.) தளபதி அவர். ஈ.பி.ஆர்.எல். எவ்வின் வழிமுறைகளுக்கும், சிறி சபாரத்தினத்தின் நிலைப்பாட்டுக்கும் பெரும் ஒற்றுமை இருந்தது.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை மிகவும் மோசமான நிலை இருந்தது. புலிகளுக்கு எதிராகக் கடுமையாகச் செயற்படுவது யார் என்பதில் ரெலோவுக்கும், ஈ.பி.ஆர். எல்.எவ்வுக்கும் இடையில் போட்டி யிருந்தது. இந்திய இராணுவ காலத்திலும் பின்னர் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த பின்னரும் ரெலோவின் மட்டக்களப்புப் பொறுப்பாளராக விளங்கியவர் ஜனா. இவரைப்பற்றிக் கடந்தவருடம் 20.08.2016 அன்று மட்டுநேசன் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையொன்று இணையத்தில் வெளியாகியது. "மன்னிக்கவும் மாட்டோம் மறக்கவும் மாட்டோம்" என்ற தலைப்பில் வெளியான இந்தக் கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:-

"இன்றல்ல என்றைக்கும் மன்னிக்கவும் மாட்டோம் - மறக்கவும் மாட்டோம் என மட்டக்களப்பு மக்கள் குறிப்பாக ஆரையம்பதி வாசிகள் கூறும் சம்பவங்கள் அங்கு நிறைய இடம்பெற்றுள்ளன. 1988 - 1992 காலப்பகுதிகளில் அவர்களுக்கு இடி அமீனாகக் காட்சியளித்தார் ஜனா என்கிற கோவிந்தன் கருணாகரம். மட்டக்களப்புப் பிராந்தியத்தின் ரெலோ இயக்கப் பொறுப்பாளராக இருந்த இவர் தற்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர், கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மண் கவ்வியவர், இவர் வாக்குச் சேகரிக்க ஆரையம்பதிக்குச் சென்ற போது மாவீரர் 2ஆம் லெப்.கலாவின் (பொன்னம்பலம் சதானந்தரத்தினம்) மருமகனும் அவரது உறவினர்களும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். 19.04.1988 அன்று செட்டிபாளையத்தில் கலாவை சம்மட்டியால் தாக்கியத்துடன் வெட்டியும் கொலை செய்தவர் ஜனா. அன்றைய காலத்தில் ஜனாவின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாக அருமை, ராபட், ராம், அன்வர்,சரத் முதலானோர் இருந்தனர். இவர்களில் ஜனாவும் ராமும் மட்டுமே உயிருடன் இருக்கின்றனர். "இவ்வளவு அராஜகங்களையும் புரிந்து விட்டு எந்த முகத்துடன் வாக்குக் கேட்க வருகிறாய்" என ஜனாவை நேரடியாகவே கேட்டனர் மக்கள்.

ஜனாவுக்குப் பிரச்சினையாக இருந்த இடத்துக்குப் பக்கத்தில் தான் வணிகரான இளையதம்பி தம்பிராஜா வாழ்ந்து வந்தார். இன்று அவரது 25ஆவது ஆண்டு நினைவு நாளாகும். 1991இல் இதே நாளில்தான் அவர் ஜனாவின் ஆணைப்படி கோடரியால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார்.

ஏற்கெனவே 1990 ஒக்ரோபர் ஐந்தாம் நாள் வங்கி ஊழியரான இவரது மகன் குருகுலசிங்கம் இதே ரெலோ குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். மகனை இழந்த துயரில் ஆழ்ந்திருந்த தம்பிராஜாவையும் பிரிந்த துயரில் ஆழ்ந்தது அவரது குடும்பம். பட்ட காலில் படும் என்பது போல தம்பிராஜாவின் மகளான திருமதி மலர் நாகேந்திரத்தைச் சுட்டுக் கொன்றது ரெலோ. அப்போது அவர் கர்ப்பிணி. வயித்துக்க என்ன புலிக்குட்டியா இருக்கு?" என்று கேட்டு விட்டே சுட்டனர் ராம், அன்வர், சரத், ராபட். ஒரு கர்ப்பிணிப் பெண்ணை

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பாகுபலி 2 படம் வரும் 28 ஆம் திகதி வெளியாக வுள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி மொழிகளில் ஒரே சமயத்தில் வெளியாகும் இப் படம் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற் படுத்தியிருப்பது அறிந்ததே.

இந்நிலையில் இந்தப் படத்தின் காட்சி நேரம் 2 மணி 50 நிமிடங்கள் என அதன் இயக்குநர் ராஜமௌலி கூறியுள்ளார். இதனால் தியேட்டர்களில் காட்சிகளை அதிகரிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.



முருகதாஸ் இயக்கத்தில் மகேஷ் பாபு நடிக்கும் படத்துக்கு ஸ்பைடர் எனப் பெயரிடப் பட்டுள்ளது. தமிழ், தெலுங்கில் வெளியாகவுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது.

உளவாளியைக் குறிக்கும் விதத்திலேயே "ஸ்பை"டர் எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதன் மோஷன் போஸ்டரில் கையில் துப்பாக்கியுடன் ஒரு பக்கமாகத் திரும்பி போஸ் கொடுத்துள்ளார் மகேஷ் பாபு.




ஹிந்தி படவுலகில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் ரவீனா தண்டன். இவர் தமிழில் கமலின் ஆளவந்தான் படத்தில் நடித்திருந்தார்.

திருமணத்தின் பின்னர், சில ஆண்டுகள் சினிமாவில் நடிக்காமல் ஒதுங்கியிருந்த அவர் மாத்தர் படத்தின் மூலம் மீண்டும் ஹிந்திப் படங்களில் நடிக்கத் தொடங்கியுள்ளார்.

எனது வாழ்வில் ஒரு பகுதிதான் இந்தப் படவுலகம். எனக்கென்று ஒரு குடும்பம் உள்ளது. சில கடமைகள் உள்ளன. ஹிந்தி படங்களில்தான் நடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.



தமிழில் 10இற்கும் மேற்பட்ட படங்களை கையில் வைத்திருக்கிறார் சாந்தினி தமிழரசன்.

இதில் ராஜா ரங்குஸ்கி படத்தில் சாந்தினி துணிச்சல் மிக்க எழுத்தாளராக நடித்து வருகிறார்.

இப்படத்தில் ஷிரிஷ் நாயகனாக நடிக்கிறார். இவர் மெட்ரோ படத்தில் அறிமுகமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.



சிம்பு, தனுஷ் பாணியைப் பின்பற்றி பிரபுதேவாவும் தான் நடிக்கும் படத்தில் பாடல் ஒன்றை எழுதியிருக்கிறார்.

பிரபுதேவா இப்போது "எங் மங் சங்" படத்தில் நடித்து வருகிறார். அம்ரீஸ் இசையமைக்கும் இந்தப் படத்துக்கு "ஐயனாரு வந்தாட்டாங்க இங்க பாரு" எனத் தொடங்கும் பாடலை எழுதியிருக்கிறார்.

சங்கர் மகாதேவனின் குரலில் பாடப்பட்ட இப்பாடலை, கும்பகோணத்தில் 150 நடனக் கலைஞர்களுடன் பிரபுதேவா நடனமாட படமாக்கப்பட்டுள்ளது. இப்பாடலுக்கு ஸ்ரீதர் நடனம் அமைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு விஷால் நடிக்கும் புதிய படத்துக்கு சிவகார்த்திகேயனின் வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தில் பயன்படுத்தப்பட்ட வசனமான "சிலுக்குவார்பட்டி சிங்கம்" எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.

இப்படத்தில் ரெஜினா, ஓவியா நாயகிகளாக நடிக்கின்றனர். முழுக்க முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள இப்படத்தில் யோகி பாபு, ஆனந்தராஜ், மன்சூர் அலிகான், கருணாகரன், லிவிங்டன், சிங்கமுத்து ஆகியோர் நடிக்கின்றனர்.






விஜயசாந்தி போல் அதிரடியான படங்களில் நடித்துப் பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசை த்ரிஷாவுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

'கர்ஜனை' படத்தில் இளம் பெண்களைக் கடத்தி, பாலியல் படம் எடுத்து விற்பனை செய்யும் கும்பலை பிடிக்கும் அதிரடி நாயகியாக த்ரிஷா நடித்துள்ளார்.

இந்தப் படத்துக்காக முறைப்படி சண்டைப் பயிற்சி பெற்ற அவர், அபாயகரமான காட்சிகளில்கூட டூப் போடாமல் நடித்து சபாஷ் வாங்கினார். இதைத் தொடர்ந்தே விஜயசாந்திபோல் அதிரடிப் படங்களில் நடிக்க அவருக்கு ஆசை ஏற்பட்டுள்ளது.



குட்டைப் பாவாடையுடன் காதல் காட்சிகளில் நெருக்கமாக நடிக்கவும், முத்தக் காட்சிகளில் நடிக்கவும் வெட்கமாக இருக்கிறது எனக் கூறியிருக்கிறார் காஜல் அகர்வால்.

இந்தக் காட்சிகளில் நடிக்கும்போது இயக்குநர் சரியாக நடிக்கிறோமா என உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பார். அவர் தவிர தொழில்நுட்பக் கலைஞர்கள் பலரும் நிற்பர். சில நேரம் ரசிகர்களும் நிற்பர். இவ்வளவு பேருக்கு முன்பாக அப்படி நடிக்க மிகவும் கஷ்டப்படுகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

நான் சினிமாவுக்கு வந்து 10 வருடங்கள் தாண்டி விட்டன. அனைத்து முன்னணி நடிகர்களுடனும் நடித்து விட்டேன். இனி கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களிலேயே நடிப்பேன் - என்றார்.



கீர்த்தி சுரேஷ் தமிழில் 2 கோடியையும், தெலுங்கில் 1.5 கோடி இந்திய ரூபாவையும் சம்பளமாகப் பெறுகிறார். நடிகை சாவித்திரி வாழ்க்கை வரலாறு படத்தில் கீர்த்தி சுரேஷ் சாவித்திரியாக நடித்து வருகிறார். தெலுங்கில் தயாராகும் இப்படம் தமிழிலும் ஒரே சமயத்தில் வெளிவரவுள்ளது.

இரு மொழிகளிலும் படம் வெளியாவதால் தனக்கு சம்பளமாக 3 கோடி தரவேண்டும் என்றாராம் கீர்த்தி. தயாரிப்பாளரும் சம்மதித்து விட, இதையே காரணம் காட்டி இப்போது சம்பளத்தை 3 கோடி ரூபாவாக உயர்த்தி விட்டாராம் கீர்த்தி சுரேஷ்.

அவரின் இந்த சாமர்த்தியம் மற்ற நடிகைகளையும் யோசிக்க வைத்திருக்கிறதாம்.



விஜய் சேதுபதி, கௌதம் கார்த்திக் இணைந்து நடிக்கும் படத்துக்கு "ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்" என்று பெயரிட்டுள்ளனர்.

ஆறுமுககுமார் இயக்கும் இந்தப் படத்தின் 40 வீதமான படப்பிடிப்பு முடிந்வடைந்து விட்டது. நகைச்சுவை, அதிரடி கலந்த வழமையான கதையே இப்படம் என்றாலும், கதை நடக்கும் களம் புதுமையாக இருக்கும் என்கிறார் இயக்குநர்.

மேலும் தலைப்பு படத்தின் முக்கியமான இடத்திலேயே வருமாம். தற்போது அடர் காட்டில் படப்பிடிப்பு இடம்பெற்று வருகிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாம்பவான்கள் நிறைந்த மட்டு. தொகுதியில் தோற்ற கூட்டணி

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொன்ற சாதனை நாளாக 1992 பெப்ரவரி 8 ஆம் திகதியைப் பதிந்து கொண்டார் ஜனா.

கொடூரமான குற்றவாளியாக இருந்தாலும், கர்ப்பிணியாக இருக்கும் பெண்ணுக்கு மரண தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவது உலக இயல்பு. தம்பிராஜா - குருகுலசிங்கம் - மலர் அப்படி என்னதான் குற்றம் செய்தார்கள்? மலரின் கணவரும் போராளி இல்லை, அப்படியிருக்க வயித்துக்கு என்ன புலிக்குட்டியா ? என ஏன் கேட்டனர். எல்லாம் ஜானாவுக்குத்தான் வெளிச்சம். தேசிய விடுதலைக்கு தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கினார்கள் என்ற ஒரு காரணத்தைக் தவிர வேறு எதனையும் ஜனாவால் கூறமுடியாது.

அதுமட்டுமல்ல விஜி என்கிற உயர்தர வகுப்பு மாணவியை கூட்டுப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கிவிட்டுக் கொன்று ஆற்றில் வீசியவர்கள் இவரது தலைமையிலான குழுவினரே. நாட்டுப்பற்றாளரும் பிரதீஸ் என்ற மாவீரரின் தாயாருமான திருமதி பூரணலட்சுமி சின்னத்துரை போன்றோரைச் சுட்டுக் கொன்றதும் இவர்களே. இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டோர் புலிகளினால் சாவொறுப்புக்குள்ளானார்கள். தப்பித் பிழைத்த ராமும் ஜனாவும் கொழும்பை வதிவிடமாகக் கொண்டவர்கள். பந்தியில் பாயசம் வரும்வரை காத்திருப்பதைப்போல் நாடாளுமன்ற உறுப்பினரின் பதவிக்காலம் முடியும் வரை அனைத்தையும் அனுபவித்து விட்டு இங்கிலாந்துக்குத் தப்பியோடினார் ஜனா. புலிகள் தோற்கடிக்கப்படும்வரை நாட்டுக்குத் திரும்புவது பற்றி அவர் கனவிலும் நினைக்கவில்லை."

● ● ●

**ஜனா தேசிய வாதி - இராஜதுரை துரோகி - சிவாஜிலிங்கம்**

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட ஜனா தற்போது ரெலோவினால் தமிழ்த் தேசியவாதியாக முன்னிலைப் படுத்தப்படுகிறார். இதேவேளை, ரெலோ பிரமுகரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவாஜிலிங்கம் முன்னாள் மட்டக்களப்புத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரையை "மட்டக்களப்புத் துரோகி" எனக் குறிப்பிடுகிறார். தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு இராஜதுரை அஞ்சலி செலுத்த வந்த சமயமே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிழக்கில் தமிழ்த் தேசிய உணர்வை வளர்த்ததில் செ.இராஜதுரைக்கு முக்கிய பங்குண்டு. வடக்கிலும் கூட தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அவரது உரையைக் கேட்கவென்றே பெரியளவில் ஆதரவாளர்கள் திரள்வர். 1977 தேர்தல் சமயம் அவரைக் கடுப்பேற்றும் விதமாகவும் அரசியல் அரங்கிலிருந்து அகற்றவும் நடந்த முயற்சிகளின் மத்தியிலும் அவர் வெற்றி பெற்றார். கட்சியிலிருந்து தானாக வெளியேற வைக்கத்தக்க நிகழ்வுகள் நடைபெற்றன. அவர் கட்சி மாறி ஜே.ஆர். ஆட்சியில் அமைச்சரானார். பின்னர் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவரானார் .

ஆனால் அவர் யாருடைய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக



இருக்கவில்லை. கொலை, பாலியல் வன்முறை, அடாவடி, அராஜகம் போன்ற சம்பவங்களுக்கு பொறுப்பானவரை விட்டு விட்டு இராஜதுரையை மட்டக்களப்பு துரோகி எனக் குறிப்பிட்டமை தவறாகும். சத்துருக்கொண்டான் - 184 பேர் படுகொலைகள், கிழக்குப் பல்கலைக்கழக முகாமில் புகலிடம் கோரிய தமிழர்கள் 154 பேர் கைது செய்யப்பட்டு, காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களில் படையினருடன் இணைந்து ரெலோவினர் செயற்பட்ட விதத்தைக்கூட மறந்தா இராஜதுரையை துரோகி என்கிறார் சிவாஜிலிங்கம் .

செங்கலடியில், வேட்டொவும், மட்டக்களப்பில் றொபேட்டும், ஆரையம்பதியில் வரதனும் புரிந்த அராஜகங்களைப் பட்டியலிட்டால் அது மிக நீண்டதாக இருக்கும். ஆரையம்பதியில் காப்புறுதி நிறுவன ஊழியர் பரமேஸ்வரன், காளி கோயில் பூசகர் எஸ். நவரத்தினம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை மறக்கக்கூடியனவா ?

**கூண்டோடு காலியான தமிழர் கூட்டணி !**

இந்திய இராணுவ காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் ஆயுதக்குழுக்களான ரெலோ.ஈ.பி.ஆர். எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ்.என்பவற்றை 1989 நாடாளுமன்றத் தேர்தலில் களத்தில் இறக்கியது இந்திய அரசு. தமக்குள் என்ன குத்து வெட்டு இருந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் எவரும் வெற்றியடைந்து விடக்கூடாது என்பதில் மூன்று ஆயுதக்குழுக்களும் தெளிவாக இருந்தன. போட்டியிட்ட ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் கூட்டணியின் ஒரு உறுப்பினர் கூடத் தெரிவாகவில்லை. ரெலோவிலிருந்து அம்பாறையில் திவ்வியநாதன் 17,880 விருப்புவாக்குகள் பெற்றுத் தெரிவானார். மட்டக்களப்பில் ஜனாவும் (கோவிந்தன் கருணாகரம் - 25,651) மற்றும் வன்னியில் குகனேஸ்வரனும் (6,226) தெரிவாகினர்.

இந்தத் தேர்தலில் வடகிழக்கில் அம்பாறை தவிர்ந்த ஏனைய நான்கு தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்ட ஈரோஸ் 2,29,871 வாக்குகளைப் பெற்றது. யாழ்ப்பாணத்தில் எண்மரும்,திருமலையில் இருவரும் வன்னி, மட்டக்களப்பில் தலா ஒருவரும் என 13 பேர் தேர்தல் அரசியலுக்குப் புதிதான இக்குழுவிலிருந்து தெரிவாகினர்.

தொகுதி வாரியாக யாழ். மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகள் உட்பட 13 தொகுதிகளில் இக்குழு வெற்றி பெற்றது. பாரம்பரிய அரசியல்

வாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையிலான தமிழ்க் குழுக்கள் 1,88,594 வாக்குகளையே பெற முடிந்தது. யாழ்ப்பாணத்தில் மூவரும், வன்னியில் இருவரும், மட்டக்களப்பில் மூவரும், அம்பாறையில் ஒருவரும், தேசியப் பட்டியல் மூலம் ஒருவருமென 10 பேர் உறுப்பினர்களாகினர். இவர்கள் தொகுதிவாரியாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, பட்டிருப்பு ஆகிய நாலு தொகுதிகளிலேயே வெல்ல முடிந்தது.

**தேசியப் பட்டியல் பரசூட்டில் குதித்த அமிர்!**

அரசியல் வரலாறு ஆரம்பித்த பின்னர் - மட்டக்களப்பு, திருமலைத் தொகுதிகளில் தோல்வி கண்டது பிரதான அரசியல் கட்சி. மட்டக்களப்பு தொகுதியில் அரசியல் ஜாம்பவான்களான முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், பிரசைகள் குழு பிரமுகர் சாம். தம்பிமுத்து, மெதடிஸ் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் பிறின்ஸ் காசிநாதர், மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் முதலானோர் போட்டியிட்டிருந்தும் ஈரோசிடம் தோல்வியைத் தழுவியது இக்கட்சி. ஈரோஸ் 21,445 வாக்குகளைப் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வாக்குகள் 17,194. திருமலையில் ஈரோஸ் 25. 239. வாக்குகளைப் பெற்றது. கூட்டணி 12,755 வாக்குகள் பெற்றது. சம்பந்தன் ஐயா உட்பட எவரும் தெரிவாகவில்லை. கட்சியின் செயலர் அமிர்தலிங்கம் தேசியப் பட்டியல் என்ற பரசூட் மூலமே நாடாளுமன்றத்துக்குள் குதிக்க முடிந்தது. அவரது மரணத்தின் பின் தேசியப்பட்டியல் உறுப்புரிமை மாவை சேனாதிராசாவுக்குக் கிடைத்தது.

இந்தத் தேர்தல் மூலம் சூடு கண்ட கூட்டணி, இனி ஆயுதக்குழுக்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுத்தது.

1994 ஒகஸ்ட் 16ஆம் திகதி நடைபெற்ற 10 ஆவது நடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ், மற்றும் புளொட் ஆகிய இயக்கங்களுடன் இணைந்து புளொட்டின் சின்னத்தில் போட்டியிட்டது ரெலோ. மூன்று ஆசனங்களைப் பெற்றாலும் விருப்புவாக்கின் அடிப்படையில் த.சித்தார்த்தன் (6376) எஸ். சண்முகநாதன் (5858 ) வை.பாலச்சந்திரன் (4515 ) ஆகிய புளொட் உறுப்பினர்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாகினர்.

1998 ஜூலை 15 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சண்முகநாதன் படுகொலை செய்யப்பட்டதும்,

விருப்புவாக்கில் நான்காவது இடத்தில் இருந்த செல்வம் அடைக்கலநாதன் முதன் முதலாக நாடாளுமன்றம் சென்றார். புலிகளின் உதவியதால் நாடாளுமன்றம் சென்றவர்களில் ஜோசப் பரராஜசிங்கம் (சாம். தம்பிமுத்து கொலையுண்டதால்), ஸ்ரீகாந்தா, ( யோகசங்கரி கொலைசெய்யப்பட்ட தால்) ஆகியோரும் அடங்குவர். 1997 ஜூலை 5இல் அ.தங்கத்துரை படுகொலை செய்யப்பட்டதால் விருப்புவாக்கில் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த சம்பந்தன் ஐயா இரண்டாவது தடவை நாடாளுமன்ற உறுப்பினராக வரமுடிந்தது. இதேபோல் படையினர் மேற்கொண்ட படுகொலைகளால் ஸ்ரீகாந்தா (ரவிராஜின் மரணம்) இரண்டாவது முறையும், சொலமன்சூ சிறில் (சிவநேசனின் சாவு) முதல் தடவையும் நாடாளுமன்றம் செல்ல முடிந்தது.

● ● ●

**சிவராம்- ரொமேஷ் சந்திப்பு**

1996 டிசெம்பர் பாரிஸ் சென்ற சிவராம் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பிரதிநிதியாக இருந்த



ரொமேசைச் சந்தித்தார். ஏற்கெனவே சிறந்த உதைபந்தாட்ட வீரராக மட்டக்களப்பில் சிவராமுக்கு அறிமுகமாகி இருந்தவர் ரொமேஷ். புளியந்தீவைச் சேர்ந்த இவர் உயர் கல்விக்காக இந்தியா சென்றிருந்த சமயம் புலிகளுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. பின்னாளில் கல்முனையில் 12.03.1986 இடம்பெற்ற முற்றுகையின்போது சுந்தர் (நல்லதம்பி சுந்தரலிங்கம்) என்ற போராளியுடன் ஒரே சயனைட்டைப் பகிர்ந்து கொண்ட உமாராம், (முத்துக்குமாரு சந்திரகுமார்) மூலமே இவர் புலிகளில் இணைந்து கொண்டார் ( உமாராம், சுந்தர் இருவரும் அந்தச் சம்பவத்தில் உயிர் நீத்திருந்தனர்).

இவருக்கிருந்த ஆங்கில அறிவு மற்றும் தேடலில் இருந்த ஆர்வம் என்பனவற்றை அவதானித்த தலைவர் வே.பிரபாகரன் ஆயுதப் பயிற்சியின் முடிவில் இராணுவ விஞ்ஞானப் பிரிவில் இவரை இணைத்து அதில் ஆற்றமிக்கவராக உருவாக வழிசமைத்தார். பின்னர் மட்டக்களப்பில் பல்வேறு நடவடிக்கைகளிலும் பங்கேற்றார் ரொமேஷ். இந்திய அரசின் முயற்சியால் அமைய விருந்த இடைக்கால நிர்வாக அரசில் தமது பிரதிநிதிகளில் ஒருவராக இவரது பெயரைக் குறிப்பிட்டனர் புலிகள்.

இயக்கங்களின் ஒன்றிணைக்கும் தமது முயற்சி பற்றி இவருடன் சிவராம் கலந்துரையாடினார். சில வழிமுறைகள் குறித்து இருவரும் முடிவெடுத்தனர். மீண்டும் 1997 சுவிஸ் சந்திப்பில் தமது முயற்சியின் முன்னேற்றம் குறித்து சிவராம் விளக்கினார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிவரும் மணமகள் இயந்திரமா?

புனிதப்பூங்கா
ராஜேஸ்மையாளன்

அசுர வேகத்தில் மாற்றங்கள் இடம்பெறுகின்றன. கணினி மயமாகி வியப்பூட்டும் மாற்றங்கள் நம்மைச்சுற்றி இடம்பெற, எல்லாமே அதிவேகம் என்ற நிலைக்கு ஆட்பட்டு விட்டன. மனித வேலைகள் பல இன்றைய யுகத்தில் ரோபோக்களால் செய்யப்பட்டு வரும் நிலையில் ஆண்களுக்கான மணமகளும் இனி ஒரு ரோபோவாக மாறப் போகின்றது என்று எச்சரிக்கின்றார்கள்.

இதற்கான ஆரம்பம் அண்மையில் செங் சியாசியா என்பவரால் நடத்தப்பட்டுள்ளது. 31வயதான பொறியியலாளரான இவர், தனக்கு ஒரு பெண் தேடிக் களைத்து இறுதியில் ரோபோ ஒன்றை தன் மனைவியாக்கி இருக்கிறார். பாரம்பரிய மணமகளுக்கான உடைகளை அணிவித்து இந்த ரோபோ பெண்ணை தன் தாயார் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்துள்ளார்.

இது எமக்கு விநோதமான ஒரு நிகழ்வாகத் தெரிந்தாலும் காலப்போக்கில் இதுவே நடைமுறையில் இருக்கப் போகின்றது என்கிறார்கள் அவதானிகள். ஓர் ஆய்வாளரின் கருத்துப்படி அடுத்த 35வருடங்களுக்குள் இதுவே யதார்த்தம் என்கிறார்.

மனித படைப்பாக இருக்கும் இந்த ரோபோக்கள் மிக அழகானவையாகவும், செயற்கையான புத்திக் கூர்மை உள்ளனவாகவும் ஆண்களுக்கு நல்ல உடல் உறவை வழங்கக் கூடியனவாகவும் இருக்கும் என்கிறார் லண்டன் வாழ் மருத்துவர் ஒருவர். இந்தத் திருமணங்கள் 2050இற்கு மேல் வழமையான ஒன்றாகி விடும் என்றும் இவர் அபிப்பிராயப்படுகிறார்.

ஆனால் களைப்பே அடையாத இந்த இயந்திரப் பெண்கள் ஆண்களை ஒரு கட்டத்தில் பதற்றமான நிலைக்கு தள்ளி விடலாம் என்றும் எச்சரிக்கின்றார்கள் அவதானிகள். ஒரு தொகை ஆண்களிடம் நீங்கள் இப்படியான ரோபோவைத் தேடுவீர்களா என்று கேட்டதற்கு 48வீதமானவர்கள் ஆம் என்றே பதிலளித்துள்ளார்கள்.

உலகம் எதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது? படைத்தவனுக்குத்தான் வெளிச்சம்.







# மகளிரும் மரதன் ஓட்டமும்

கெடுபிடிகளுக்கு பெயர்பெற்ற நாடு ஈரான் என்பது உங்களில் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும். பாரசீகம் என்று முன்னாளில் அறியப்பட்ட ஈரானில் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் இன்னும் அதிகம்.

இந்த மாதம் 7ஆம் திகதி முதற்றடவையாக அகில உலகரீதியான மரதன் ஓட்டப்போட்டி ஈரானில் இடம்பெற்றது. இங்கே புதினம் என்னவென்றால் பெண்களும் இந்தப் போட்டியில் பங்கு பற்றியதுதான். ஆனால் இங்கேயும் கட்டுப்பாடுதான். தெருக்களில் பங்குபற்றும் பெண் போட்டியாளர்கள் நிற்க அனுமதிக்கப்படவில்லை. டேஹெரானில் உள்ள அஸாடி என்ற விளையாட்டு அரங்கினுள் 10 கிலோமீற்றர் தூரம் மாத்திரமே ஓட இவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். இவர்கள் ஓடுவதைப் பார்க்க எந்த ஆண்களுக்கும் அங்கு அனுமதி கிடைக்கவில்லை. இந்த ஏற்பாடு பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தி இருக்கின்றது. காரணம் இங்கு பொது இடங்களிலும் பூங்காக்களிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஓடிப் பயிற்சி எடுப்பது அன்றாட நிகழ்வில் ஒன்றாக இருக்கின்றது.

"இந்த ஓட்டத்தில் பங்குபற்ற என் பெயரைப் பதிவு செய்திருந்தேன். ஆனால் இவர்கள் ஏற்பாடு எனக்குப் பிடிக்காததால் நான் செலுத்திய அனுமதிக் கட்டணத்தை (15டொலர்) மீள பெற்று விட்டேன்" என்கிறார் 30வயதைத் தொட்ட ஒரு கட்டடக் கலைஞராகப் பணியாற்றும்பெண்மணி ஒருவர். "உலகெ தெருக்களில்தான் மரதன் போட்டிகள் இடம்பெறுகின்றன. எங்களை இப்படி அ வைப்பது எங்களை பெரிதும் அவமானப் விடயம்" என்று கொதிக்கிறார் இவர்.

இருபாலாரையும் பிரிப்பது என்பது கை நேர முடிவு என்பதை அடியோடு மறுக்கிறா ஈரான் நாட்டு விளையாட்டு அமைச்சர். இரு பாலாரும் கலந்து ஓடுவது என்பதற்கு ஆரம்பம் தொட்டே எந்த வாய்ப்பும் இல்லை என பத்திரிகைப் பேட்டி ஒன்றில் அமைச்சர் கூறியுள்ளார்.

40 நாடுகளில் இருந்து வெளிநாட்டவர்கள் வந்து இந்தப் போட்டிகளில் பங்குபற்றி உள்ளார்கள். ஈரானில் பொதுவாக பெண்கள் தொழில் ரீதியான விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவதில்லை. கால்பந்து விளையாட்டுப் போட்டிகளை பார்த்து ரசிக்க அரங்குகளிலும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், இந்த மரதன் ஓட்டத்தை பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் கோலம் இனிவரும் காலங்களில் மாறுவோம் என்கிறார்கள். நாமும் நம்புவோம்!

# அணியக் கூடாத காலணி

இங்கே அரசு தடை செய்யக் கோரிய விடயம் நீதிமன்றால் மறுக்கப்பட்டுள்ளது. இங்கோ மாவட்ட அரசு புதிதாக ஒரு தடையை அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

கனடாவின் ஒரு பெரிய மாவட்டமான பிரிட்டிஷ் கொலம்பியா அறிமுகப்படுத்தியுள்ள புதிய சட்டத்தின்படி எந்தப் பெண் ஊழியரையும் அதிகாரிகள் குதிகாலணி அணிந்து அலுவலகத்துக்கு வரும்படி நிர்ப்பந்திக்க முடியாது. எங்கள் மாவட்டத்தில் பெண்கள் வேலைக்கு சமுகம் அளிக்கும்போது குதிகால் கொண்ட காலணிகளை அணிந்து வரும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்றார்கள். எங்கள் அரசு இதைத் தவறு என்று கருதுகின்றது. பாதுகாப்பு அற்றதும் உடல் நலக் கேடையும் தரும் இதை அணியும்படி எவரையும் நிர்ப்பந்திக்க முடியாது என்ற சட்டத்தை இதற்காகவே அமுல்படுத்தி இருக்கிறோம் என்று ஓர் அதிகாரி கூறியுள்ளார்.



கனடாவின் தொழில் அமைச்சர் ஷேர்லி இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ளார். இப்படி ஒரு மாவட்ட அரசு இதை ஆரம்பித்துள்ளது மிகவும் நல்லது. எந்தப் பெண்ணையும் குதிகாலணி அணிந்து வேலைக்கு வரும்படி வற்புறுத்தவே முடியாது என்று அமைச்சர் அழுத்தமாகவே கூறி இருக்கின்றார்.

பெண்கள் அலுவலகத்துக்கு வரும்போது ஆண்களை விட ஆடை அலங்காரத்திற்கு அதிக பணம் செலவிட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். லிப்ஸ்டிக் அணியவேண்டும், குட்டைப் பாவாடை அணிய வேண்டும் என்று பல நிர்ப்பந்தங்களுக்கு பெண்கள் தங்கள் முதலாளிகளால் ஆளாக்கப்படுகிறார்கள்.


மே மாதம் 2015இல் கேன்ஸ் திரைப்பட விழா இடம்பெற்ற சமயம் குதிகாலணி அணியாது வந்த காரணத்தால் சில பெண்கள் படங்கள் திரையிடப்படுவதிலிருந்து தடை செய்யப்பட்டிருந்தார்கள்.

பலவீனமானவள் பெண் என்பதால் பலவந்தங்கள் அதிகரிக்கின்றனவோ?

# வியாபாரம் தடுக்கும் வீண் வேட்டைகள்

இந்த உலகைப் படைத்த இறைவன் அதை வெறுமனே விட்டுவிடவில்லை. இந்த உலகுக்கு அழகூட்டும் ஆயிரம் ஆயிரம் உயிரினங்களைப் படைத்து உலாவ விட்டார் இறைவன். பிறகுதான் மனிதனைப் படைத்தார். ஆனால், இன்று பேராசை பிடித்தவனாகி விட்ட மனிதன் பல உயிரினங்களைக் கொன்று பணமாக்குவதில் தீவிரம் காட்டத் தொடங்கி விட்டான்.

தென் ஆபிரிக்காவின் உயர் நீதிமன்றம் உள்ளூரில் நடக்கும் காண்டாமிருகங்களின் தந்த விற்பனையை தடை செய்யும்படி அரசு விடுத்த கோரிக்கையை நிராகரித்துள்ளது.



தனிப்பட்ட முறையில் காண்டாமிருகங்களை வளர்ப்போர் சங்கம் இந்த முடிவை சந்தோசத்தோடு வரவேற்றுள்ளது. பகிரங்கமாக பொதுச் சந்தையில் இதை விற்பதுதான் களவில் வேட்டையாடுபவர்கள் தொகையைக் குறைக்க வழி வகுக்கும் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

தென் ஆபிரிக்காவில் 20,000 வரையிலான (உலகளாவிய தொகையின் 80வீதம்) காண்டாமிருகங்கள் காணப்படுவதாகவும், இதில் மூன்றிலொரு வீதமான தொகையை தனிப்பட்டவர்கள் பண்ணைகளில் வளர்த்து வருகின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது. தாம் வளர்க்கும் மிருகங்களின் கொம்புகளை சுகாதாரமான முறையில் அரிந்து சந்தைக்கு விடுவது களவில் வந்து அநியாயமாக மிருகங்களைக் கொல்வதைத் தடுக்கும் என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

எமது கைகளில் வளரும் நகங்களை ஒத்ததுதான் இந்தக் காண்டாமிருகக் கொம்புகள். இதில் அதிகமாக உள்ளது கெரட்டின் என்ற பொருள்தான். இதைப் பொடியாக்கி விற்பனை செய்கிறார்கள். புற்றுநோய், ஆண்மைக் குறைவு போன்றவற்றுக்கு இது அருமருந்து. இதை வியட்நாம் மற்றும் சீன நாட்டவர்கள் அதிகம் நம்புகின்றார்கள். 2016ஆம் ஆண்டில் மாத்திரம் 1054 காண்டாமிருகங்கள் களவில் தென் ஆபிரிக்காவில் கொல்லப்பட்டுள்ளன. சந்தையில் அரசு இதை விற்பதால் மேலும் பல நூறு மிருகங்கள் அநியாயமாகக் கொல்லப்படுவது நிற்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூளுமா 3ஆம் உலகப் போர்?

■ யாதவி

உலக மக்களிடம் மிகநீண்ட காலமாகவே இருக்கின்ற கேள்வி "மூன்றாம் உலகப் போர் எப்போது மூளும்?" என்பதுதான். கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலமாக இந்தக் கேள்வியை சுமந்துகொண்டுதான் உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது.

முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் முடிவுற்ற பின்னர் அதனால் உண்டான வலிகளையும் இழப்புகளையும் அனுபவித்த ஒரு மக்கள் கூட்டம் மீண்டும் அதுபோன்ற துயரின் காலத்தை சந்திக்க தயாராகவில்லை. அதனால் "மூன்றாம் உலகப் போர் எப்போது மூளும்?" என்ற ஏக்கத்தோடு இருக்கிறார்கள். "கட்டப்பா ஏன் பாகுபலியை கொன்றான்" என்று அறிவதற்காக பாகுபலி -2 படத்துக்காக காத்திருப்பது போன்றதல்ல மூன்றாம் உலகப்போருக்கான காத்திருப்பு.

முன்னது ஆவலால் உண்டான காத்திருப்பு - பின்னையது அப்படி ஒரு சம்பவமே நிகழாமல் போகாதோ எனும் ஏக்கத்தின் வெளிப்பாடான காத்திருப்பு. மூன்றாம் உலகப்போர் பற்றிய பல்வேறு எதிர்வு கூறல்கள் அடிக்கடி வெளிப்படுவதுண்டு.

வளைகுடா போர், ஆப்கானிஸ்தான், ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்புகள், சிரியாப் போர் என்பவற்றின் போதெல்லாம் மூன்றாம் உலகப் போர் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால், அவை பின்னர் இருதரப்புக்கு இடையிலான போராக மாறி, (சிரியா தவிர்ந்த ஏனைய இடங்களில்) அமெரிக்காவின் அதிகாரம் நிலைநிறுத்தப்பட்டதோடு முடிவுக்கு வந்திருந்தன.

இப்போது இன்னொரு களமுனை மூன்றாம் உலகப்போருக்காக திறக்கப்பட்டுள்ளது போன்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் களமுனை வடகொரியாவை மையமாகச் சுற்றிசுழல்கிறது. ஏற்கனவே, வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் எட்டாப்பொருத்தம். அமெரிக்கா என்னென்ன கட்டளைகளை உலகத்துக்கு போடுகிறதோ அவற்றையெல்லாம் பிடிவாதமாக மீறுவது வடகொரியாவின் பொழுதுபோக்கு. உலகப் பொலிஸ்காரனாக எல்லோரையும் ஆட்டிப்படைக்கும் அமெரிக்காவுக்கு வடகொரியாவின் சண்டித்தனம் ஓர் இடறலாகவே இருந்து வருகின்றது.

இப்படி முன்னைய காலங்களில் அமெரிக்காவின் கண்ணில் விரல் விட்டு ஆட்டிய பல நாடுகளின் சரித்திரம், இப்போது தரித்திர நிலையில் இருக்கிறது. அதற்குக் காரணம் அமெரிக்காவே. தனக்கு முன்னால் வாலாட்டும் நாடுகளின் மீது ஏதாவது ஒரு சாட்டைச் சொல்லி படைகளை இறக்கிவிடும். பிறகென்ன, ஆமை புகுந்த வீடும் அமெரிக்கா புகுந்த நாடும் உருப்படுமா? ஒரு மாதிரி அந்த நாட்டை உண்டு இல்லை என்றாக்கி, மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்து எப்போதும் அமெரிக்காவின் காலடியிலேயே தஞ்சமாக அவர்கள் இருக்கும் நிலையை உருவாக்கிவிட்டுத்தான் அமெரிக்கா நடையைக் கட்டும்.



சிலவேளைகளில் தன்னுடைய தலையை நீட்ட முடியாத இடங்களில் அங்குள்ள ஆயுதக் குழுக்களை வளர்த்தெடுத்து அதன் மூலம் கைவரிசையைக் காட்டுவது அமெரிக்காவின் இன்னொரு யுத்தி. ஈராக், ஆப்கானிஸ்தான், எகிப்து, லிபியா என்று அமெரிக்காவின் பழிவாங்கும் பட்டியல் மிக நீண்டது. அந்தப் பட்டியலில் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பு தற்போது சிரியாவுக்கும், வடகொரியாவுக்கும் மிக அதிகமாகவே உள்ளன.

இருப்பினும் இவ்விரண்டு நாடுகள் மீதும் தன் இஷ்டப்படி கை வைக்க முடியாத நிலையிலும் அமெரிக்கா உள்ளது. அமெரிக்காவின் மறைமுக எதிரி நாடான ரஷ்யா வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் தன்னுடைய பகிரங்கமான ஆதரவை வெளிப்படுத்தி நிற்கிறது. எப்போதெல்லாம் சிரியா மற்றும் வடகொரியா மீது கை வைக்க நினைக்கிறதோ அப்போதெல்லாம் அதனை தடுத்து நிறுத்துவதில் ரஷ்யா மிகப் பெரிய பங்கை வகித்து வருகின்றது. இதுதவிர பிரிட்டனும் இவ்விரு நாடுகளுக்கும் மறைமுகமாக உதவுவதாக ஒரு குற்றச்சாட்டு அமெரிக்கத் தரப்பில் முன்வைக்கப்படுகிறது.

கடந்த ஆறு வருடங்களில் மொத்தமாக 6 மில்லியன் பவுண்ஸை வடகொரியாவுக்கு பிரித்தானியா வழங்கி உள்ளது. இரு பெரிய வல்லரசுகளின் ஆதரவு வடகொரியாவுக்கும் சிரியாவுக்கும் இருப்பதால், ஏனைய நாடுகளைப்போல எடுத்த எடுப்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ போர் தொடுக்கமுடியாத இக்கட்டு நிலை அமெரிக்காவுக்கு உண்டு. எனவே, ஏதாவது அதிர்ஷ்டவசமாகக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் தனக்கு ஏற்றால்போல மாற்றி அமைத்து ஏதேனும் குழப்பங்களை செய்வது அமெரிக்காவின் வாடிக்கையாக இருந்து வருகிறது. இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த ஒபாமா ஒரு "ஜென்ரில்மேனாக" தன்னை காட்டிக்கொண்டதால் சில விடயங்களில் ஏனைய நாடுகளின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே நடந்துகொண்டிருந்தார்.

ஆனால், இப்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் அப்படிப்பட்டவரல்லர். ட்ரம்பின் தோற்றமே ஒரு கோமாளியை நினைவு படுத்திக்கொண்டிருக்கும். தோற்றத்தைப்போலவே அவரது செயற்பாடுகளும் பெரும்பாலும் கோமாளித்தனமாகவே அமைந்து கொண்டிருக்கின்றது. ஏனைய நாடுகளின் விருப்பு வெறுப்புகளைப் பற்றி எந்த அக்கறையும் இன்றி எடுத்தோம் கவிழ்த்தோம் என்கிற மாதிரி தடாலடியாக காரியங்களில் இறங்குபவர் அவர்.

அப்படி ட்ரம்புக்கு அவல் போல வாய்த்தது, இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி, ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிரியா நடத்திய தாக்குல். உடனேயே சிரியப் படைக்ள் மீது ஏவுகணை மழையைப் பொழிந்தது அமெரிக்கா. "எதற்கு ஏவுகணைத் தாக்குதல்?" என்று ரஷ்யா கேட்டபோது "அவர்கள் அப்பாவி மக்களை இரசாயன ஆயுதங்களால் அழித்தமைக்கு இதுதான் பதிலடி" என்று பல்லிளித்தது அமெரிக்கா. சூட்டோடு சூடாக ஆப்கானிஸ்தானின் அமெரிக்க படை உயர் அதிகாரி ஒருவர் ஆயுதக் குழு ஒன்றால் சுடப்பட்டார். அடுத்த வாய்ப்பு. தவறவிடுமா அமெரிக்கா. ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் தயாரித்து "எங்கு பரிசோதிக்கலாம்" என்று அமெரிக்கா யோசித்துக்கொண்டிருந்த "குண்டுகளின் அன்னை" என்ற மிகப் பெரிய வெடி குண்டு ஆப்கானிஸ்தானில் சிதறி ஏராளம் உயிர்களை பலி வாங்கியது. இதற்கும் "அவர்கள் சுட்டார்கள் நாங்கள் திருப்பி அடித்தோம்" என்ற பல்லவியே அமெரிக்காவால் பாடப்பட்டது. ஆனால், இதன் பின் விளைவுகள் அமெரிக்கா எதிர்பாராதவிதமாக இருந்தன.

"குண்டுகளின் அன்னை" ஆப்கானிஸ்தானில் வெடித்த சில நாள்களிலேயே "குண்டுகளின் தந்தை" என்ற இன்னொரு மிகப்பெரிய குண்டு தன்னிடம் இருப்பது பற்றிய தகவலை ரஷ்யா வெளியிட்டு அமெரிக்காவின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அமெரிக்கா, ரஷ்யாவின் மறைமுக மிரட்டலால் கொஞ்சம் அடங்கிப் போயிருந்த தருணத்தில் அதற்கு பேதி வரச் செய்வதுபோல ஒரு காரியத்தை வடகொரியா நிகழ்த்தியது. அமெரிக்காவிடமும் ரஷ்யாவிடமும் இருப்பதை விடவும் பல மடங்கு பெரிதான குண்டை இராணுவ அணிவகுப்பின்போது பகிரங்கப்படுத்தியது. தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம் பாயும், அணுகுண்டுகளை தாங்கிச் செல்லக்கூடிய ஏவுகணைகளையும் வடகொரியா அடுத்தடுத்து பரிசோதித்தது. இதில் கடைசி சோதனை தோல்வியில் முடிந்ததாக அமெரிக்கா ஆராவாரப்பட்டாலும் ஏனைய சோதனைகள் வெற்றிகரமாகவே நடந்தேறியிருந்தன.

எப்படி இஸ்ரேல் தன்னுடைய ஆயுத பலத்தின் மூலம் பிறநாடுகளை அடக்கி வைத்திருக்கின்றதோ அதேபோன்று வடகொரியாவும் தனது ஆயுத பலத்தை வெளிப்படுத்தி அமெரிக்காவின் படையெடுப்பை உடனடியாக நடைபெறவிடாமல் தள்ளிப்போட வைத்திருக்கிறது.

அமெரிக்காவும் அதிரடியாக விமானம் தாங்கி வசதியுள்ள போர்க் கப்பல்கள் கொண்ட அணியை வடகொரியாவை அண்மித்த கடல் பகுதிக்கு நகர்த்தியுள்ளது. அமெரிக்க துணை ஜனாதிபதி தென்கொரியாவுக்குச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்துள்ளார். "விரைவில் வடகொரியாவின் கொட்டம் ஒடுக்கப்படும்" என்று அவர் அங்கு வைத்து சவாலும் விட்டுள்ளார்.

வடகொரியா அமெரிக்காவின் சவாலைக் கண்டு அசரவில்லை. "அமெரிக்கா தாக்கினால் எங்கள் பதிலடியை அவர்களால் தாங்கமுடியாமல் இருக்கும்" என்று பதிலுக்கு வடகொரியாவும் தொடையைத் தட்டி சவால் விடுத்துள்ளது.

இப்போது உலகம் அமெரிக்காவின் பின்னால் ஒரு பக்கமும் வடகொரியாவின் பின்னால் இன்னொரு பக்கமுமாக கன்னை பிரிய வாய்ப்புகள் அதிகம். உண்மையில் வடகொரியா என்பதை விடவும் ரஷ்யாவின் பின்னால் என்பதே சரியானது. ஏனெனில் வடகொரியாவையும் சிரியாவையும் பின்னால் இருந்து இயங்க வைப்பது ரஷ்யாதான். இப்போதே ஜென்மவிரோதிகளாக இருந்த சீனாவும் அமெரிக்காவும் வடகொரியாவை அடக்குவதற்காக கைகோத்துள்ளன. அப்படியானால் சீனாவுக்கு எதிரான நாடுகள் மறைமுகமாக வடகொரியாவுக்கு ஆதரவு கொடுக்கக்கூடும். சமயம் வரும்போது ரஷ்யா களத்துக்குள் நேரடியாகப் பிரவேசிக்கும். அப்போது ஆட்டம் இன்னும் சூடுபிடிக்கலாம். ஆனால், இதுவும் ஒரு பெரும் சமர்போன்ற மாயை உருவாக்கிவிட்டு கலைந்துசெல்லும் மேகக் கூட்டமாக இருக்குமே தவிர மூன்றாம் உலகப்போர் என்ற பேரழிவு மழையைப் பெய்விப்பதாக இருக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவு மெய்ப்படவேண்டும்

சு.சிவராசா

ராகவி வழக்கம்போல அன்றைக்கும் அம்மாவுக்குப் பக்கத்திலேயே படுத்திருந்தாள். காலைப்பொழுது என்றால் அழகாகவும், சுறசுறுப்பாகவும் ஆரம்பமாகிறது என்கிறார்கள். அந்த சிறிய வீட்டுக்கு வெளியிலே மலர்ந்த பூக்கள், பறக்கும் வண்டுகள் கூடவே பறவைகள் அவற்றின் பாடல்கள் - இத்தியாதி சங்கதிகள் உண்டு.

ராகவியின் வீட்டில் அவளும், அம்மாவும், அம்மம்மாவும் தான் இருக்கிறார்கள். அவளுக்கு இப்போது பன்னிரண்டு வயது ஆகிறது. இந்தப் பன்னிரண்டு வருடங்களில் அவர்கள் மூவரும்தான் இந்த வீட்டில் இருக்கின்றார்கள். வளர்க்கின்ற நாய் ரொமியும், பூனை பிங்கியும் இன்னும் அந்த வீட்டுச் சுவர்களிலும்,மூலை முடக்குகளிலும் வாழுகின்ற கரப்பான் பூச்சி, பல்லி, எலி போன்ற உயிரினங்களும்.

அடுப்படிக்குள் இருந்தபடி அம்மம்மா குரல் கொடுத்தார். “ராகவி! தாயும், மகளும் நல்லாய் கிடவுங்கோ, இப்ப நேரம் என்ன? பள்ளிக் கூடம் போற யோசனையே கிடையாது...”, “வயது போனால் நித்திரை வராது, உவ விடியப்புறம் கோழியோட முழிச்சுடுவா” என்று கைகால்களை நிமிர்த்தியபடி ராவியின் அம்மா சாந்தி சொன்னாள். பக்கத்தில் கிடந்த மகளின் முதுகில் தட்டி “எழும்பு ராகவி. ஏழு மணி ஆகுது. உன்னை வெளிக்கிடுத்துறது என்றால் பெரிய வேலை. ஒடிப்போய் பல்லை விளக்கிக் குளிக்கிற வழியைப் பார்”.

“அதெல்லாம் எனக்குத் தெரியும். இப்ப நான் நெடுகக் கேக்கும் அதே கேள்வி, இன்றைக்கும் கேக்கிறன். அப்பா எப்ப என்னட்டை வருவார்?”

ஒவ்வொரு நாளும் இந்தக் கேள்வி கேட்டகப்படும். சாந்தி மகளைக் கட்டியணைத்து இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகளை உதிர்த்து விடுவாள். பிறகு அதே சாட்டுப்போக்கு. ஆனால் இன்னமும் அந்தக் கேள்வி ராகவிக்கு அலுக்கவேயில்லை. சாந்தியின் கண்களிலும் நீர் வற்றிப்போகவேயில்லை.

சாந்தியும் ராகவனும் காதலித்துக் கொண்டார்கள். அவர்களுடைய காதல் இருவருடைய வீடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எத்தனையோ போராட்டங்கள், கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள், உணவுத் தவிர்ப்பு. இப்படியே அகிம்சை வழியில் இருவரும் போராட்டங்களை நடத்தினார்கள். எண்ணியவர் திண்ணியவராக இருந்தால் காரியம் கைகூடும்தானே? உறுதியான காதல், தடைகளை தகர்த்தெறிந்தது. இரண்டு வீட்டுக்காரர்களும் பச்சைக் கொடிகளைக் காட்டினார்கள். அதனால் சாந்திக்கு மஞ்சள் கயிறும், வெள்ளை மல்லிகையும், செங்குங்குமமும் வரமாகக் கிடைத்தன. இந்தக் காதலுக்கு அவள் எவ்வளவு உறுதியாகப் போராடினாள் என்பதை நினைத்துப் பார்த்தால் அவளுடைய போராட்டக் குணமும் தெளிந்த ஞானச் செருக்கும் வெள்ளிடை மலையாய்த் தெரியும்.

அவர்களின் வாழ்வு ஆனந்த ராகம். எல்லா நாளும் கார்த்திகைதான். அன்பும், அறமும் ஆகிய பண்பினில் நடக்க இல்வாழ்வு அனிக்காமல் போகாது.

யார் கண்பட்டதோ? எவர் மனம் எரிந்ததோ? கிரகங்கள் எதுவும் வீடு மாறியதோ? தெரியவில்லை. ஒரு நாள் இரவு வெள்ளை வான் ஒன்று வந்துநின்றது. மூன்றுமாதக் கருவைச் சுமந்து கொண்டிருந்த சாந்தியை கதறவிட்டுத் தலையிலடித்துக் கொண்டு, கதறிய தாயாரைத் தள்ளி விட்டு ராகவனை ஏற்றிக் கோண்டு வெள்ளை வான் துப்பாக்கி ரவை எனச் சீறிப்பாய்ந்தது. இந்த முன் விளக்கின் ஒளிக்கீற்று இருட்டைக் கிழித்துச் சென்றது. அன்றைக்குப்போனவன் போனதுதான்.

காவல்துறை, இராணுவ முகாம், பிரசைகள் குழு, பிரதேசச் செயலர், மனித உரிமை ஆணையம் இன்னும் எங்கெல்லாம் அலைய முடியுமோ, அங்கெல்லாம் அலைந்தார்கள்.

நிறைமாதக் கர்ப்பிணியான பிறகு சாந்தியினால் முடியவில்லை. அவளுக்குத் தினமும் கண்ணீரும் சோறும்தான் உணவானது. அழுகையும், புலம்பலுமே கதையானது. எப்படியோ எந்தத் தொந்தரவும் இன்றி சாந்தி ராகவியைச் சுகமாகப் பெற்றெடுத்தாள். ராகவி வளர , வளர சாந்தி தன் மனக்கவலையும் குறைவதுபோல உணர்ந்தாள். அவளுடைய அம்மாவும் அப்படித்தான் சொன்னாள். “வீட்டிலை ஒரு பிள்ளை இருந்தால் என்ன கவலையெண்டாலும் மறந்து போகுமடி” என்று அம்மா ஆறுதல் சொல்வாள்.

ஆனால் ராகவி கதைக்க ஆரம்பித்த பிறகு, வேதாளம் முருங்கை மரத்தில் மீண்டும் ஏறிக்கொண்டது. சொற்களைக் கூட்டிச் சொல்லப் பழகிய பின்னர், “அப்பா எப்ப வருவார்?” என்று கேட்க ஆரம்பித்துவிட்டாள் ராகவி. இன்று காலையிலும் அதே கேள்வி கேட்கப்பட்டுவிட்டது. சாந்தியின் மனம் லேசாக இருந்தால் மட்டும் பதில் வரும். “ காலம் மாறும்,தெய்வம் கண் திறக்கும். அப்பாவைக் கொண்டு போனவர்களின் மனதை எங்களுடைய கண்ணீர் மாற்றும்”. நித்தரையில் காண்பது வெறும் கனவு. விழிப்பு நிலையில் காண்பது நடக்கப்போகின்றதைக் காட்டும் கனவு. பன்னிரண்டு ஆண்டுகளாக சாந்தி, ராகவனின் வருகையை விழிப்பு நிலையிலேயே கண்டுகொண்டிருக்கிறாள்.

இன்றைக்கு என்னவோ வழக்கமான மனப்பாரம் குறைவாக இருக்கிறது. ஒருவேளை பாரம் சுமந்து பழகிப்போன மனம் நோவை அறியாமல் போகின்றதோ என்னவோ. அவள் ராகவிக்கு எதையோ சொல்ல நினைத்தாள்.முடியவில்லை. மௌனமாக இருந்தாள். அம்மாவின் மௌனத்தைக் கலைத்தால் அது அழுகையாக வெடித்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும். அவள் எழுந்து வெளியே போய்விட்டாள்.

அரசும் மாறிவிட்டது. வைத்திருக்கிற கைதிகளை விடுவினமாம். மனித உரிமை விசாரணை அறிக்கையும் வந்திருக்காம். இவை எல்லாம் எதிர்காலத்தையே சுட்டி நிற்கின்றன. இன்றைய தினத்தில், இந்த நிமிடத்தில் வாழ்வதே உண்மை என்கிறார்களே. அப்படியானால் இவர்களின் கனவு வெறும் எதிர்பார்ப்புக்களோடு கூடிய எதிர்காலக் கனவுகள் தானா?

மெய்ப்படாத கனவுகளுக்காக இங்கே எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கனவுகள் ஆழ்மனதில் புதைந்து கிடக்கின்ற எண்ணங்களின் வெளிப்பாடுகள் என்கிறார்கள்! அவரவருக்கு அவரவர் எண்ணங்களின் வெளிப்பாடுகளே கனவுக்ள் ஆகின்றன. நேர வேறுபாடின்றி நெடுகலும் கனவுகள் மெய்ப்பட வேண்டும் என்பதற்காக, இந்த மூவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கனவு மெய்ப்பட வேண்டும். வாழ்க்கையில் தீப ஒளி ஏற்றிட வேண்டும். அழுகையும் கவலையும் ஆறிட வேண்டும். எங்களது வாழ்த்துப் பாடலும் வெறும் வார்த்தைகளே.

“இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!” என்று சொல்வதும் கனவாகிப் போகாமல் இருக்க வேண்டும்.

ராகவி குளித்துவிட்டு வந்து வெளிக்கிடுத்திவிடுவதற்காக அம் மாவைக் கூப்பிட்டாள். பதில் இல்லை. சத்தமாகக் கூப்பிட்டாள். “அம்மாக்கு என்ன நடந்தது? சுகமில்லையோ? அம்மம்மா! ஒருக்காப் பாருங்கோ” ராகவி கத்தினாள்.

இருவரும் அறைக்கள் சென்று நீட்டி நிமிர்ந்து கிடந்த சாந்தியைப் பார்த்தார்கள். அவள் காணாமல்போன தன் கணவனைத்தேடிப் புறப் பட்டு பத்து நிமிடங்கள் ஆகிறது. இங்கே மீளாத் துயிலில் கிடப்பது வெறுங் கூடுதான்.

நன்றி : தொடுவானம்
தொலைதூரம் -
சிறுகதைத்தொகுதி

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவராசா "நம்பிக்கை பிறந்தது" என்ற சிறுகதைத் தொகுதி வாயிலாக எழுத்துலகிற்கு அறிமுகமானவர். தொடர்ந்து 1995 இல் இடம்பெயர்வை மையமாகக் கொண்ட " முடிவில்லாத ஆரம்பங்கள்" என்னும் நாவல் மூலம் பலரது பாராட்டுதல்களைப் பெற்றவர். இவர் சிறார்களுக்குரிய பல ஆக்கங்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் தந்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக இளமையில் தனது பார்லையை இழந்தவர். பின்னர் கைதடி நவீல்ட் பாடசாலையில் "பிறைல்" ஐக் கற்றுப் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார். இவர் தொடர்ந்தும் சிறார்க்குரிய படைப்புக்களை வெளிக் கொண்டுவரும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையும் தாதியர் பற்றாக்குறையும்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

• யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தென்பகுதியில் இருந்து தாதிய கடமைக்கு வருபவர்கள் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இப்பகுதியை விட்டு முற்றாக வெளியேறுகின்றமை.

• புதிதாக தாதியர்கள் சேவைக்கு உள்ளீர்க்கப்படும் போது பிரதேச ரீதியில் தெரிவு செய்யப்படாமை

**யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை**

• தாதியர்களுக்கான போதியளவு விடுதி வசதி இல்லாதிருத்தல். தற்போது போதனா வைத்தியசாலையில் 60 இற்கும் மேற்பட்ட தாதியர்கள் தங்கக்கூடிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகிறது.

• தாதியர்கள் ஒப்பீட்டளவில் இரு வேளை கடமை (double duty) செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றமை.

• ஒருவர் கடமைக்கு வராத பட்சத்தில் தொடர்ச்சியாக 24 மணிநேரத்திலும் அதிகமாக கடமை செய்ய நிர்ப்பந்திக்கிப்படுகின்றமை.

• அவசர விடுப்பு (லீவு) எடுக்க முடியாதிருக்கின்றமை.

• பிள்ளைகள் குடும்பத்தினரை பராமரிக்க முடியாதிருத்தல்.

**தாதியர் பற்றாக்குறையால் வைத்தியசாலை எதிர்நோக்கும் சவால்**

• தாதியர் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்தில் 50 சதவீத சத்திரசிகிச்சைக் கூடமே பயன்படுத்தப்படுகின்றது. போதியளவு சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருக்கின்றார்கள், மருத்துவ உபகரணங்கள் இருக்கின்றன, ஆய்வு கூட வசதி இருக்கின்றது இருப்பினும் தாதியர் பற்றாக்குறை நிலவுவதால் சத்திர சிகிச்சைக் கூடத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது.

• அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள 22 படுக்கைகளில் (ICU BEDS) 13 கட்டில்கள் மட்டுமே தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

• பல சத்திரசிகிச்சைகள், மருத்துவப் பரிசோதனைகள் பிற்போடப்படுகின்ற நிலைமை.

• மருத்துவ விடுதிகளில் அதிகரித்து வரும் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்கி பராமரிக்க முடியாமை.

• புதிதாக சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிக்க முடியாதிருத்தல்.

**தாதியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு என்ன செய்யலாம்?**

• வடபகுதி மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு பிரதேச, மாவட்ட கோட்டா அடிப்படையில் தாதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளல்.

• க.பொ.த. (உ/த) இல் கணித, விஞ்ஞானப் பிரிவு தவிர்ந்த வர்த்தக மற்றும் கலைப் பிரிவு மாணவர்களை தாதிய பயிற்சியில் சேர்ப்பதற்கு உரிய அழுத்தங்களை மக்கள் பிரதிநிதிகள் கொடுத்தல் வேண்டும்.

• தாதிய நியமனம் வழங்கப்படுகின்ற போது யாழ்.போதனா வைத்தியசாலை வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்னுரிமை வழங்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

• க.பொ.த. (உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கு அதிகளவான மாணவர்களை உள்வாங்கத்தக்க வகையில் மாணவர்களை க.பொ.த. (சா/த.) கற்கின்ற போதே ஊக்குவித்தல். தாதிய சேவைக்கு 95 சதவீதம் பெண்கள் தெரிவுசெய்யப்படுவதால் அதிகளவு மாணவிகளை கணித, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி கற்க ஊக்குவித்தல்.

இதேவேளை, தாதிய சேவை மட்டுமன்றி ஏனைய துணை மருத்துவ சேவைகளான எக்ஸ் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், ஆய்வு கூட தொழில்நுட்ப உத்தியோகத்தர், முதலான துணை மருத்துவ சேவைகளுக்கும் கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களே தெரிவு செய்யப்படுவதால் க.பொ.த.(உ/த) இல் கணித விஞ்ஞானப் பிரிவுகளில் அதிகளவான மாணவர்களை உள்வாங்கத் தக்க வகையில் திட்டமிட்ட கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

வடமாகாண மாணவர்களின் கடந்த 5 வருட புள்ளி விவரங்களை எடுத்து நோக்குகையில் க.பொ.த.(உ/த) இல் உயிரியல் மற்றும் பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதை அவதானிக்கலாம். அதேவேளை கடந்த 2012 முதல் 2016 வரை க.பொ.த.(சா/த) பெறுபேறுகளின் அடிப்படையில் வடபகுதி கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இது வடபகுதியின் அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்புக்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தும். வடமாகாண மாணவர்களின் கல்வித்தரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்துதரப்பினரும் குறிப்பாக கல்விப்புலத்தைச் சேர்ந்தவர்கள் கூடிய அக்கறை காண்பிக்க வேண்டும். இதுவே தாதிய சேவை மட்டுமன்றி, ஏனைய துறைகளுக்கும் வடபகுதி மாணவர்களை அதிகளவு உள்ளீர்க்க வாய்ப்பாக அமையும்.

| | தாதிய பாடசாலை ஆண்டு / வகுப்பு ரீதியான மாணவர் | அனுமதிக்கப்பட்டோர் | கல்வியைப் பூர்த்தி செய்தோர் | விலகியோர் |
|---|---|---|---|---|
| 1 | 2006 A | 40 | 35 | 05 |
| 2 | 2006 (II) | 39 | 36 | 03 |
| 3 | 2007 A | 196 | 165 | 31 |
| 4 | 2009 A | 18 | 17 | 01 |
| 5 | 2011 A | 117 | 94 | 45 |
| 6 | 2011 B | 149 | 118 | 18 |
| 7 | 2012 A | 30 | 24 | 03 |
| 8 | 2014 | 26 | - | 04 |
| 9 | 2015 A | 84<br>தமிழ் மாணவர்கள் – 35 (Females 35)<br>சிங்கள மாணவர்கள் – 48 (Males-15, Females – 33) | - | 01 |
| 10 | 2015 B | 10 | - | - |

யாழ் தாதிய பாடசாலையில் கற்று வெளியேறிய மாணவர் விவரமும்

தற்போது கற்கும் மாணவர் விவரமும்

## வடக்கு அபிவிருத்திக்கு....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மக்களின் அமோக ஆதரவு பெற்று முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரனால் மக்களுக்காக அறிக்கை மட்டும்தான் வெளியிட முடியுமா? அரசியலுக்கும் நடைமுறைச் செயற்பாட்டிற்கும் இடையில் முதலமைச்சர் தத்தளிக்கிறாரா? என்ற சந்தேகம் எல்லோரிடத்திலையும் எழ ஆரம்பித்து விட்டது. இதற்கு முதலமைச்சர்தான் பதில் தரவேண்டும். முதலமைச்சர் புகழ் பாடுவோர் அரசியல் மாய வலைக்குள் சிக்குண்டு செயற்படாமல் முதலமைச்சரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சமீபத்தில் சுவிஸ் நாட்டுப் பிரதிநிதியொருவர் வடக்கு அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் பொருட்டு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், அவைத்தலைவர் சீ.வி,கே.விவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா ஆகியோரைச் சந்தித்திருந்தார். அதன்போது வடக்கு அபிவிருத்தி தொடர்பில் சுவிஸ் பிரதிநிதி கேட்ட கேள்விக்கு முதலமைச்சரினால் வழமையாக மத்திய அரசாங்கத்தை குறை கூறும் புராணத்தையே பாடமுடிந்திருக்கிறது. அதற்கு சுவிஸ் பிரதிநிதி "வடக்கு அபிவிருத்தி தொடர்பில் எங்கள் நாட்டுத் தனியார் நிறுவனங்கள் செய்ய முன்வந்த உதவிகளையும் ஏன் நீங்கள் சரியாகப் பயன்படுத்த வில்லை?" என்று அவர் கேட்டிருந்தார். அதற்கு முதலமைச்சரும் மற்றும் அங்கிருந்தோரும் சரியான பதிலைக் கூறமுடியாது வாயடைத்துப் போயிருந்தனர்.

இதிலிருந்து, வடக்குமாகாண அபிவிருத்திக்கான கதவுகள் திறந்து இருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் இருக்கிறது வடமாகாணசபை நிர்வாகம் என்றதை வெளிப்படையாகப் புரிந்து கொள்ள முடிகிறது. காலத்தை இழுத்தடித்தே மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. மீதி இருக்கும் ஒன்றரை வருடத்தில் மாகாணசபையால் என்னத்தை கிழித்து விட முடியும்? மக்களால் பெரும் போராட்டத்தின் மத்தியில் 26 வருடங்களின் பின்னர் பெறப்பட்ட வடக்கு மாகாணசபையை இப்படி செயலிழக்கச் செய்து வைத்திருப்பது வடக்கு மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது. சபையினுள் இருக்கும் உள்ளக அரசியலும் வடக்கு அபிவிருத்தியை குழப்புகிறது என்று சில தமிழ் அரசியல் கட்சிகள் முழங்குகின்றன. இந்த மோசமான நிலைமையை கருத்திற் கொண்டு இருக்கின்ற ஒன்றரை வருடத்தையாவது மாகாணசபை மக்களுக்கு பி[illegible] பயன்படுத்துமா?

## குப்பைமேட்டு....

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரே அவை மீதொட்டமுல்லக்கு திசை திருப்பப்பட்டன. மீதொட்டமுல்லயில் வாழ்ந்த மக்கள் பொருளாதார ரீதியாகவும் கல்வி அறிவு ரீதியாகவும் மிகவும் அடிநிலையில் இருந்ததாலும், எந்தவொரு அரசியல் பலமும் அற்றவர்களாக இருந்ததாலும் அவர்கள் குரல் செல்லாக் காசாக இருந்தது. அதனால் குப்பை மேட்டின் துர்நாற்றத்தையே நாளும் பொழுதும் தங்கள் சுவாசத்தோடு கலக்கவேண்டியிருந்தது. சுவாசநோய்களும் கழிவுகளில் தங்கியுள்ள கிருமிகளின் தாக்கமும் மீதொட்டமுல்ல மக்களை விடாது துரத்தின.

இந்தத் துரத்தல்கள் தாங்கமுடியாத நேரங்களில்தான் குப்பை மேட்டை அகற்றச்சொல்லி அவர்கள் போராடுவார்கள். அந்தப் போராட்டங்களை அரசு ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக சித்தித்து கண்ணீர்ப் புகைக் குண்டு, நீர்த் தரைப் பிரயோகம், தடியடி என்னும் தன்னுடைய வழக்கமான ஆயுதங்களை அவிழ்த்துவிடும். வலிகளும் காயங்களும் உடம்பில் பரவ குப்பை மேட்டை அகற்றும் கோரிக்கைகளை கைவிட்டு, உயிரையும் குடும்பத்தையும் காப்பாற்றுவதற்காக அந்த மக்கள் ஓடத் தொடங்குவார்கள்.

மீண்டும் ஒரு காலத்தில் குப்பை [illegible] அவர்களின் வாழ்வுத் தளம் அசைக்கப்படும்போது போராடக் கிளம்புவார்கள். பழையபடி அதே இரும்புக்கரத்தோடு அரச காவல் நாய்கள் களத்தில் இறங்கும். மீண்டும் வேட்டை, ஓட்டம், வாழ்தலுக்கான பணிதல், குப்பை மேட்டு நோய்கள் என்றபட்டமே மீதொட்டமுல்ல மக்களின் தலையெழுத்தாக இருந்தது. இப்போது 30 இற்கும் மேற்பட்ட உயிர்களை தங்களின் இருப்பிடங்களையும் உடைமைகளையும் குப்பைச் சுனாமிக்கு காவு கொடுத்துவிட்டு ஏதிலிகளாக நிற்கிறார்கள் அந்த மக்கள்.

வெள்ளம் வரமுன்னரே அணை கட்டப்போராடிய மக்களின் போராட்டங்களை நசுக்கிய அதே அரசுதான் இப்போது கொல்லப்பட்டவர்களுக்கு உடைமைகளை இழந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதாக நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கின்றது. மக்கள் நிரந்தரமாக குப்பை மேட்டை அகற்றுமாறும் தங்கள் வாழ்விடங்களை மீண்டும் அமைத்துத் தருமாறும் கொல்லப்பட்ட உயிர்களுக்கு நீதி வழங்குமாறும் மீதொட்டமுல்லயில் உச்சத் தொனியில் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தபோது, நாட்டின் ஜனாதிபதி எதுவுமே நடக்காததுபோல நயினாதீவுக்குச் சென்று செல்பி எடுத்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றார். இனியும் மீதொட்டமுல்ல போன்ற அனர்த்தங்கள் நிகழ்ந்த பின்னர்தான் அணைகட்டுவது பற்றி அரசு யோசிக்கும். நல்லாட்சி அரசின் கடந்த கால பயணங்கள் இதைத்தான் சொல்லி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதக் கடவுள்

பார்வைநயம்-19

■ கணபதி சர்வானந்தா

இராமையா சிவன் கோயிலடிக்கருகே தனது வீடு இருப்பதாகச் சொல்லி யிருக்கிறார். இந்தியாவிலிருந்து பல தலைமுறைக்கு முன்னர் வந்தவர். பலரும் பல தொழில் செய்ய, இராமையா தேர்ந்தெடுத்த தொழில் மிட்டாய் விற்பனை செய்வது.

கோயிலில் சுவாமி காவுவதற்கு உதவும் கொம்பைப் போன்று மிருதுவாகச் செதுக்கப்பட்ட உருளைவடிவான மரத்தின் நுனியில், பட்டுத்துணியைப்போல கலர் கலராகச் சுற்றியபடி மிட்டாய் இருக்கும். அதன் உச்சியில் ஒரு சிறு பாவைப்பிள்ளை ஒன்றைச் சொருகி வைத்திருப்பார். மிட்டாய் ஈரத்துணி ஒன்றால் சுற்றப்பட்டிருக்கும். இடுப்பிலே உள்ள சாரத்தின் மடிப்புத்தான் அவரது "கல்லாப் பெட்டி". காலை சிவன் கோயிலடியிலிருந்து புறப்பட்டால் வழி வழியே இருக்கின்ற பாடசாலைகளை எல்லாம் தாண்டி வெயில் உச்சியைத் கடக்கின்ற பொழுது, அவர் வதனி வீட்டடிக்கு வந்துவிடுவார். வதனி வீட்டுத் திண்ணை அவருக்குச் சொந்தமாகிப் பல வருடங்களாகின்றன. அவள் தாயார் யோகத்திடம் ஒரு செம்பு நிறையத் தண்ணீரை வாங்கி, ஆற அமர உட்கார்ந்திருந்து தாகம் தீரும்வரை குடித்துவிட்டுப் புறப்படுவது வழக்கம். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் தான் இந்த வழி. மற்றைய நாள்களிலெல்லாம் வேறு பாதைகளில் சென்றுவிடுவார்.

வதனி அவள் கிராமத்துப் பள்ளிக் கூடத்தில் ஆறாம் வகுப்புப் படிக்கிறாள். அவள் தந்தை ஒரு சீவல் தொழிலாளியாக இருந்தவர். வதனி அவர் முகத்தைப் பார்த்ததில்லை. அவள் கைக் குழந்தையாக இருந்தபோது அவர் மரத்திலிருந்து விழுந்து இறந்துபோனதாக அவளது அம்மா யோகம் சொல்லியிருக்கிறாள். யோகத்தின் உறவுகளும் பெரிதாகப் பொருள் பண்டமற்றவர்கள். யாருக்கு யார் உதவுவதென்ற நிலை. வதனியைப் பொறுத்தவரை அப்பா, அம்மா எல்லாமே அவள் அம்மா தான். பனை ஒலைப் பெட்டி, கடகம் என்று இழைப்பதுபோக, ஆடுகளையும் வளர்க்கிறாள் யோகம். "வீட்டோடை ஒரு மரியாதையான தொழில் இது" என்று அடிக்கடி சொல்லுவதை கேட்டிருக்கிறேன்.

> "இராமையாண் ணையும் குடும்பத்தோடை வரவேணும், என்ன!" யோகத்தின் அன்புக் கட்டளையாக வெளிப்பட்ட வார்த்தைகள் அவை.

அன்று மதியம் கடந்து விட்டது. இராமையாவும் வந்து திண்ணையில் இருக்கிறார். வதனி இன்னும் வரவில்லை. யோகம்தான் படலை வரை போவதும் வருவதுமாக இருந்தாள். கடைசியாக வதனி தனது வகுப்பாசிரியையுடன் திருக்கைவண்டி ஒன்றில் வந்திறங்கினாள். ஆசிரியை யோகத்தின் காதில் ஏதோ கிசு கிசுத்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு விட்டாள். வீட்டுக்குள் போன யோகம் நீண்ட நேரமாக வெளியே வரவில்லை. "அப்ப நான் போட்டு வாறன்" மிட்டாசுத் தடியைக் கையிலெடுத்தவாறு இராமையா கிளம்பி விட்டார். "வதனி பெரிசாவிட்டாளாம்" வெளியே வந்த யோகம் இராமையாவைப் பார்த்துச் சொன்னாள். மிட்டாசுத் தடியைத் தூணோடு சாத்திவிட்டு மீண்டும் அமர்ந்துவிட்டார் இராமையா. கலவரப்பட்டுக் கிடந்த யோகம்மாவின் முகத்தைப் பார்த்ததும் எல்லாவற்றையும் புரிந்து கொண்டார் அவர். தனது சாரத்தின் மடிப்பிலிருந்த சில்லறையை மட மட வென்று எண்ணினார். எண்பத்தைந்து ரூபா சில்லறையும் இருந்தது. "அவளுக்கு விருப்பமான பாவாடை சட்டை எல்லாத்தையும் வாங்கி அலுவலைப் பார் யோகம்" என்றவாறு புறப்பட்டார் இராமையா.

மறு நாள் அதிகாலை. படலை திறக்கும் சத்தம் கேட்டது. யோகம் எட்டிப் பார்த்தாள். இராமையா வந்து கொண்டிருந்தார். அவர் கையிலே ஒரு பொட்டலம் இருந்தது. அதை யோகத்திடம் நீட்டினார். ஒரு சங்கிலி, இரண்டு காப்பு, காசு இருநூறு ரூபா என்று அந்தப் பொட்டலத்தில் சுற்றப்பட்டிருந்தது. "அப்ப எப்ப தண்ணி வாக்கிறது" இராமையா கேட்டார். "சனியாப் பார்த்து வைச்சால் நல்லது. அவளோடை படிக்கிறதுகளும் வருமெல்லே?" யோகத்தின் முடிவு அடுத்த சனிக்கிழமையாக இருந்தது. "இராமையாண்ணையும் குடும்பத்தோடை வரவேணும், என்ன!" யோகத்தின் அன்புக் கட்டளையாக வெளிப்பட்ட வார்த்தைகள் அவை.

சனிக்கிழமையன்று சடங்குக்கான ஏற்பாடுகள் நடந்தன. யோகத்தின் உறவுகள் எல்லாம் வந்து வீடு கலகலப்பாக இருந்தது. சடங்கைச் செய்வதற்கு நீண்டநேரம் காத்திருந்தும் இராமையா வரவில்லை. "நேரம் போகுது. நாங்கள் செய்வம் வந்தாப் பிறகு அவரை வைச்சுப் படத்தை எடுப்பம்" யோகத்தின் சொந்தம் ஒன்று நின்று அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. சடங்கு முடிந்து ஒவ்வொருதராகக் கிளம்பிக் கொண்டிருந்தனர். வதனியின் சிநேகிதங்கள் தான் செக்கல் வரை நின்றனர். "இராமையா அப்பு ஏன் வரேல்லை? அம்மா! " வதனிதான் அடிக்கடி வந்து யோகத்தின் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தாள். கடைசிவரை இராமையா வரவில்லை.

அடுத்த நாள் அதிகாலை யாழ்ப்பாணத்துக்கான முதல் பஸ்ஸில் யோகமும், வதனியும் புறப்பட்டனர். சிவன் கோயில் மோர்க் கடையில் விசாரித்தால் தனது வீட்டைக் காட்டுவார்கள் என்று இராமையா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. இராமையாவின் வீட்டு வாசலில் நின்று குரல் கொடுத்தனர். கதவு திறந்தது. இராமையா விபத்துக்குள்ளாகிக் காயக் கட்டோடு படுத்திருந்தார். யோகம் அடக்கி வைத்திருந்த அத்தனையையும் அழுகையாய்க் கொட்ட வதனியும் கண்கலங்கியபடி இராமையாவின் கைகளைப் பற்றியிருந்தாள். புறப்பட நேரம் வந்தபோது காப்புச் சங்கிலி வைத்திருந்த கடதாசிப் பையையும் அவர் கொடுத்த பணத்தையும் அவரிடம் திருப்பிக் கொடுத்தாள் யோகம்.

"எடி விசரி. நான் அதைக் கடனாத் தந்ததா ஆர் சொன்னது? நான் என்ரை பேர்த்திக்குக் குடுத்தது" பொக்கை வாயை மென்றபடி சிரித்தார் இராமையா. யோகத்தின் பார்வையில் அடிமுடி தெரியாத ஒரு சிவனாய் வியாபித்திருந்தார் இராமையா.

**கடவுள் மனித வடிவில் வருவத[illegible]றது**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீமைக் கருவேல...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றங்கள் உத்தரவிட்டு மக்களும் ஓரளவுக்குப் புரிந்து கொண்டு, இந்த மரங்களை அழிக்கத் தொடங்கும் போது திடீரென 'இந்த மரங்கள் ஏழைகளுக்கு விறகாகப் பயன்படுகிற மரங்கள்' என்று எதற்காகக் கிளப்பிவிடுகிறார்கள் என்றுதான் மண்டை காயவேண்டி யிருக்கிறது. ஐம்பதாண்டுகளுக்கு முன்பாக வறட்சி தாண்டவமாடிய போது வேலி மரங்களைத் தவிர விறகுக்கு வேறு வாய்ப்புகள் இல்லை. ஆனால் இப்பொழுது அந்தச் சூழல் இல்லை. விறகு வைத்து சோறு பொங்கும் மக்களின் சதவீதத்தைக் கணித்து, அதில் எத்தனை பேர் சீமைக்கருவேல மரங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்று கணக்கெடுத்தால் தெரியும்.

இப்பொழுது காகித ஆலைகள் இந்த மரங்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள். பல தொழிற்சாலைகள் எரியூட்டுவதற்காக இம்மரங்களை காசுக்கு வாங்குகிறார்கள். ஒருவேளை இம்மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டால் காகித ஆலைகளும் தொழிற்சாலைகளும் திணறக் கூடும். சல்லிசாகக் கிடைக்கும் மரம் அவர்களுக்குக் கிடைக்காம்ல் போய்விடக் கூடும். அதனாலேயே கிளப்பிவிடுகிறார்களா என்று தெரியவில்லை. பொறுப்பு மிக்க ஊடகங்கள் இத்தகைய கட்டுரைகளை பிரசுரிக்கும்போது சற்றே தரவுகளைச் சரிபார்த்து பின்னணியையும் புரிந்து கொண்டு வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளலாம்.

(யாழ்ப்பாணத்திலும் இந்திய இராணுவத்தின் வருகையின் பின்னர் நிலத்தடி நீரை உறிஞ்சும் இந்த சீமைக் கருவேல மரங்கள் சில இடங்களில் புதராக மண்டிக் கிடக்கின்றன. வல்லைவெளி, கைதடி–கோப்பாய் வெளி என்பன இதற்கு நல்ல உதாரணங்கள். இவற்றை இப்படியே விட்டால், இந்தியாவில் சீமைக் கருவேலமரங்கள் பூதாகரமான சூழலியல் பிரச்சினைகளை ஏற்படுத்தியது போல இங்கும் ஏற்படுத்தலாம். இன்னொரு பாதீனியமாக சீமைக் கருவேல மரங்கள் மாறுமுன்னர் நாம் விழித்துக் கொள்ளவேண்டும்).

## போர் தின்ற...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்காலத்தின் வலி, எதிர்காலம் பற்றிய அச்சம் எல்லாம் அவர்களுடைய முகங்களில் இருளாகப் படர்ந்திருக்கின்றன. இந்த இயந்திரமய மாகிய உலகில், கருணையும், அன்பும் குறைவடைந்து வரும் உலகில், மற்றவர் களுக்காக இரக்கப்படுதல், பாடுபடுதல் எல்லாம் மறைந்து வருகின்ற உலகத்தில் கால்கள் இல்லாதவர்களின் நிலை?

போர் முடிந்து விட்டது. வெற்றி - தோல்விக் கணக்கெடுப்புகளும் கொண்டாட்டங்களும் ஏறக்குறைய அடங்கி வருகின்றன. ஆனால், கொதித்துக் கொண்டிருக்கும் உலை முகம் ஆறவில்லை. கால்களை இழந்தோரின் வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது. கிளிநொச்சியில் உள்ள பௌத்த விகாரையில் ஒரே நேரத்தில் இரண்டு பேர் புத்தரின் காலடியில் மண்டியிட்டு வணங்குவதை ஒருநாள் கண்டேன். அவர்களில் இரண்டு பேருக்கும் கால்களில்லை. ஒருவர் தமிழர். இன்னொருவர் சிங்களவர். இந்தப் பூமி உண்மையில் விசித்திரங்களால் ஆனதா அல்லது நம்பமுடியாத - நம்பக்கூடிய - நம்ப வேண்டிய எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டுதான் சுற்றுகிறதா?

திரும்பிப் பார்த்தால், பலர் தெருவழியே போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருக்கிறார்கள். அவர்களில் பலருக்கும் கால்கள் இல்லை. 'துயரம் விளைந்த நிலத்தில், துக்கத்தோடு அலையும் மனிதர்கள் இவர்கள்' என்று நண்பர் ஒருவர் தான் எடுத்திருந்த புகைப் படங்களுக்கு அடியில் எழுதியிருந்த வரிகள் நினைவில் வருகின்றன.

# யாழ்.போதனா வைத்தியசாலையும் தாதியர் பற்றாக்குறையும்

வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.



**யாழ்.** போதனா வைத்தியசாலையானது வடமாகாணத்தில் உள்ள ஒரு தனித்துவமான போதனா வைத்தியசாலையாகும். 1240 படுக்கைகளைக் கொண்ட இந்த வைத்தியசாலையில் 79 வைத்திய நிபுணர்கள் அடங்கலாக 1500 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றார்கள். இலங்கையில் காணப்படுகின்ற ஏனைய போதனா வைத்தியசாலைகளோடு ஒப்பிடுகையில் தாதியர் பற்றாக்குறையானது இங்கு மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

### தாதிய பாடசாலைக்கு ஆள்சேர்ப்பு

ஒவ்வொரு வருடமும் தை மற்றும் ஆனி மாதங்களில் இலங்கையில் உள்ள 18 தாதியர் பயிற்சிப் பாடசாலைகளிலும் தாதிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாகும். இதற்காக அதற்கு முன்னைய வருடத்தில் ஆள்சேர்ப்புக்காக அரசாங்க வர்த்தமானி மூலம் விண்ணப்பம் கோரப்படும். அவ்வாறு விண்ணப்பம் கோரப்படும் ஆண்டில் அதற்கு முன்னைய 3 ஆண்டுகளில் (உயிரியல், பௌதிக விஞ்ஞான) கணித, விஞ்ஞானப் பிரிவில் உயர்தரக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படும். உதாரணமாக இந்த வருடம் நேர்முகத்தேர்வுக்கு 2015, 2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. (உ/த)பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் தகுதியானவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.

- க.பொ.த (உ/த)பரீட்சையில் உயிரியல், பௌதிக விஞ்ஞான பாடத்தில் 03 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 18 வயதிலிருந்து 28 வயது வரை,
- உயரம்: - 4'10' ஆகும்
- அத்துடன் திருமணமாகாத ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சிக்காக 95 சதவீதம் பெண்களும் 5 சதவீதம் ஆண்களும் தெரிவு செய்யப்படுவர். இத்தாதிய மாணவர்களுக்கு 03 வருட பயிற்சிக் காலத்தில் மாதாந்த பயிற்சிப்படியாக ரூபா 30,000 வழங்கப்படும்.

மேலே உள்ள நிபந்தனைகள் தேசியரீதியில் தாதிய பாடசாலைகளுக்கு, தாதியர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது பின்பற்றப்படும் நடைமுறையாகும்.

| ஆண்டு | படுக்கைகளின் எண்ணிக்கை (BED Strength) | விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர் எண்ணிக்கை | கிளினிக்கில் சிகிச்சை பெற்ற நோயாளர் எண்ணிக்கை | தாதியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1996 | 490 | 17,153 | NA | 405 |
| 1997 | 720 | 40,015 | NA | 405 |
| 1998 | 756 | 51,348 | NA | 405 |
| 1999 | 839 | 59,718 | NA | 405 |
| 2000 | 842 | 56,068 | 375,084 | 405 |
| 2001 | 930 | 56,052 | 409,636 | 405 |
| 2002 | 920 | 75,002 | 433,810 | 405 |
| 2003 | 920 | 87,132 | 458,309 | 405 |
| 2004 | 920 | 97,204 | 491,875 | 405 |
| 2005 | 995 | 96,415 | 478,346 | 405 |
| 2006 | 1200 | 80,840 | 451,370 | 405 |
| 2007 | 1200 | 77,449 | 434,462 | 405 |
| 2008 | 1200 | 82,195 | 448,175 | 405 |
| 2009 | 1228 | 93,546 | 456,934 | 405 |
| 2010 | 1228 | 111,079 | 476,616 | 405 |
| 2011 | 1303 | 115,842 | 531,330 | 405 |
| 2012 | 1303 | 123,604 | 637,361 | 407 |
| 2013 | 1280 | 124,894 | 659,516 | 407 |
| 2014 | 1268 | 131,785 | 570,563 | 407 |
| 2015 | 1220 | 135,914 | 645,219 | 407 |
| 2016 | 1240 | 129,830 | 651,607 | 432 |

### யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய ஆளணி

யாழ்.போதனா வைத்தியசாலையில் 1983 முதல் 405 ஆக இருந்த தாதிய ஆளணியின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையானது பல வருடங்களாக அதிகரிப்புச் செய்யப்படவில்லை. கடந்த சில ஆண்டுகளில் வைத்தியசாலையில் புதிய பல சிகிச்சைப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டு பிற்பகுதியில் தாதிய ஆளணியினரின் எண்ணிக்கை தற்காலிகமாக 607 ஆக அதிகரிக்கப்பட்டது. ஆயினும், போதனா வைத்தியசாலையில் தற்போது 432 தாதியர்களே கடமையாற்றுகின்றனர். இருப்பினும் இவ்வருடம் வைத்தியசாலையில் முழுமையான தாதிய ஆளணி அதிகரிப்பு செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையானது 2000 ஆம் ஆண்டில் 840 படுக்கைகளைக் கொண்டிருந்தது. இந்த எண்ணிக்கை 2016 இல் 1240 ஆக அதிகரிக்கப்பட்டது. அதேவேளை 2000 ஆம் ஆண்டில் 56,068 பொதுமக்கள் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றனர். இந்த எண்ணிக்கையானது 2016 இல் 129,830 ஆக இருமடங்கை விடவும் அதிகரித்துக் காணப்பட்டது. இருப்பினும், 2000 ஆம் ஆண்டில் 405 ஆக காணப்பட்ட தாதிய ஆளணி 2016 இல் படுக்கை வசதிகள் மற்றும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டபோதும் ஏற்ற வீதத்தில் அதிகரிக்கப்படவில்லை. 2000 இல் 56,068 நோயாளிகளுக்கு 405 தாதியர்கள் கடமையில் இருந்த அதேவேளை 2016 இல் 129,830 நோயாளிகளுக்கு 432 தாதியர்களே கடமையாற்ற வேண்டிய நிலையில் இருந்தனர்.

இலங்கையின் ஏனைய போதனா வைத்தியசாலைகளோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் தாதிய ஆளணியானது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. 1844 படுக்கைகளைக் கொண்ட குருநாகல் போதனா வைத்தியசாலையில் 1200 தாதியர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர். அதேவேளை 1364 படுக்கைகளைக் கொண்ட அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 875 தாதியர்கள் சேவையில் உள்ளனர். ஆனால் 1240 படுக்கைகளைக் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலையில் 432 தாதியர்களே கடமையாற்றுகின்றனர். நாட்டிலுள்ள ஏனைய போதனா வைத்தியசாலைகளோடு ஒப்பிடுகையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் 850 இற்கும் அதிமான தாதிய ஆளணி இருக்க வேண்டும். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட 607 ஆளணியினரில் தற்போது 432 தாதியர்களே கடமையாற்றுகின்றனர். இது வைத்திய சேவையை வழங்குவதில் பெரும் சவாலை ஏற்படுத்துகின்றது.

| | நாட்டில் உள்ள சில போதனா வைத்தியசாலைகள் | படுக்கைகளின் எண்ணிக்கை BED Strength | கடமையாற்றும் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை | தாதிய ஆளணியின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | கடமையாற்றும் தாதியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | Teaching Hospital, Kandy | 2366 | 83 | 2100 | 1900 |
| 2 | Teaching Hospital, Kurunagala | 1844 | 38 | 1250 | 1200 |
| 3 | Teaching Hospital, Anuradhapura | 1364 | 35 | 1290 | 875 |
| 4 | Teaching Hospital, Jaffna | 1240 | 79 | 607 | 432 |
| 5 | Colombo South Teaching Hospital | 1098 | | 1100 | 805 |
| 6 | Teaching Hospital, Peradeniya | 1000 | | 668 | 635 |
| 7 | Teaching Hospital Batticaloa | 998 | 52 | 625 | 454 |

நாட்டில் உள்ள பிரதான போதனா வைத்தியசாலைகளில் உள்ள படுக்கை மற்றும் வைத்திய நிபுணர்களோடு ஒப்பிடுகையில் தாதிய ஆளணி யாழ். போதனா வைத்தியசாலையில் குறைவாக உள்ளமையை அட்டவணையில் காணலாம்

### வடபகுதியில் தாதியர் பற்றாக்குறைக்கான காரணம்

- வடபகுதியில் க.பொ.த. (உ/த) இல் உயிரியல், பௌதிக விஞ்ஞானத்துக்குத் தோற்றும் மாணவர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுகின்றமை.
- வட மாகாணத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் க.பொ.த. (உ/த) இல் கணித விஞ்ஞானப் பிரிவுகள் இல்லாதிருத்தல்.
- தாதியர்களது கடமை தொடர்பான அச்ச உணர்வு. ஏனைய தொழில்களைப் போலல்லாது அர்ப்பண உணர்வும் சேவை மனப்பான்மையும் மிகவும் வேண்டப்படுகின்றமை.
- பல்வேறு துறைகளுக்காக மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும்போது கடைப் பிடிக்கப்படும் மாவட்ட கோட்டா தாதிய பாடசாலைகளுக்கு தாதியர்கள் தெரிவுசெய்யப்படும்போது கருத்தில் கொள்ளப்படுவதில்லை.
- வட பகுதி மாணவர்களின் கல்வித் தரத்தில் வீழ்ச்சி காணப்படுவதால் உச்சப்புள்ளி (மெரிட்) அடிப்படையில் தாதியப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் போது அதிகளவான தென்பகுதி மாணவர்கள் தாதிய பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ப**ன்றித்தலைச்சி அம்மன் கோயில் யாழ். குடாநாட்டில் உள்ள வரலாற்றுப்புகழ் பெற்ற கண்ணகி ஆலயங்களுள் ஒன்று. இது யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பகுதியில், சாவகச்சேரி-புத்தூர் வீதியில் உள்ள மட்டுவில் கிராமத்தில் அமைந்துள்ளது.

அம்பாளின் ஆலயம் 1750ஆம் ஆண்டுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாக ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்புறமாக பித்தளையில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் சான்று பகர்கின்றன. ஆலயத்துக்கு வருகைதரும் அடியவர்கள் நீராடுவதற்கு வசதியாக ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் 100 அடி நீளம் அகலம் உடைய தீர்த்தக் கேணி அமைந்துள்ளது.

அங்கு பொங்கல் பொங்கி அம்பாளுக்கு நிவேதித்து வரும் அடியவர்களுக்கும் வழங்கி இஷ்ட சித்திகளைப் பெறுவர். முற்காலத்தில் அம்பாள் மட்டுவில் பகுதியில் இயற்கை வனப்பு நிறைந்த கிராமத்தில் உறைந்து பல அற்புதங்களையும் அருளாட்சியையும் வழங்கி வந்ததாக வரலாறுகள் கூறிவருகின்றன.

இந்த ஆலயத்தில் பக்தன் ஒருவன், தனது குலத்தொழிலான புலைத்தொழிலையும் செய்து வந்தான். அன்றொருநாள் அவனெறிந்த கூரிய ஆயுதம் இலக்குத் தவறியோ அல்லது திரு வருட் செயலாகவோ பசு ஒன்றின் மீது பட்டது. உடனே அப்பசு துடிதுடித்து இறந்தது. அம்மன் மீது அளவற்ற பக்தி கொண்ட அந்த பக்தன் வருந்தி, பின்னர் தெய்வத்தின் துணை இருக்கிறதே என்ற துணிவோடு அந்தப் பசுவை ஆலயத்திற்கு தென்கிழக்கு பகுதியில் புதைத்து விட்டான்.

இந்தச் சம்பவத்தை எப்படியோ தெரிந்து கொண்ட மாட்டுச் சொந்தக்காரன் பக்தன் மீது நடவடிக்கை எடுத்தான். பசுக்கொலை புரிந்த பாதகத்துக்காக தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பயந்த பக்தன் தனக்கு அபயம் அளிக்கும்படி அன்னையிடம் வேண்டினான். அன்றிரவு அடியவனின் கனவில் முதிய விதவைக்கோலத்தில் காட்சி கொடுத்த அம்மை, நாளைய தினம் பன்றி எச்சங்களையே புதைத்ததாகச் சொல்லச் சொன்னதாகவும், மாட்டுத்தலை புதைக்கப்பட்ட இடத்தில் பன்றித்தலையே கிடைத்ததாலும், தேவிக்கு பன்றித்தலைச்சி என்ற பெயர் ஏற்பட்டதாக மரபுரைகள் சொல்கின்றன. தனது பக்தனுக்கு கிழக்கோலத்தில் கனவில் காட்சி கொடுத்த காரணத்தால் போலும் அன்னையைப் பற்றிப் பேசும் போது “கிழவி” எனக் குறிப்பிட்டுப் பேசுவோர் மட்டுவிலில் இன்றும் வாழ்கிறார்கள்.

இந்த ஆலயம் கி. பி. 1750 ஆம் ஆண்டில் திருநாகர் கதிர்காமர் என்பவரால் வைரக் கற்களை (வெள்ளைக் கற்கள்) கொண்டு கட்டப் பெற்றதை நாம் அறிய முடிகிறது. 1946 ஆம் ஆண்டில் முதன் முதலாக கும்பாபிஷேகம் செய்யப்பட்டதுடன் அதே ஆண்டு மார்கழித் திருவெம்பாவையில் கொடியேற்றத் திருவிழாவும் முதன் முதலாக இடம்பெற்றது. 1952இல் இருந்து ஆறுகால நித்திய பூசை நடைமுறைக்கு வந்தது. திருவெம்பாவைக் கொடியேற்றத் துடன் 10 நாள்கள் பூசை நடைபெறும்.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சைவ மக்கள் பங்குனித் திங்களில் அம்பாள் கேணித் தீர்த்தத்தில் தலை முழுகி பொங்கலிட்டு கோயில் வாசலில் தாங்களே படைத்து வணங்குவார்கள். இங்கு நடை பெறும் பங்குனி மாதத்து திங்கள் திருவிழா ஒரு முக்கிய மரபார்ந்த திருவிழாவாகவுள்ளது.

பொங்கல் தலமாகவும், தீர்த்தச்சிறப்பும், மூர்த்திப்பெருமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற தலமாகவும் இந்தக் கோயில் விளங்குகிறது.

**யா**ழ்ப்பாணத்தில் காணப்படும் தொன்மை மிக்கதும் கலைப்பொக்கிசமாக விளங்குவதுமான தேவாலயங்களில் ஒன்று குருநகர் புனித யாகப்பர் ஆலயமாகும். காலம் கட்டடக்கலை, வரலாற்றுச் சம்பவங்கள், மக்களின் நம்பிக்கை போன்ற அடிப்படை யில் யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச்சின்னங்களுள் ஒன்றாக இதனைக்கருதலாம். 1861 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த தேவாலயம் போரினால் பாதிக்கப்பட்டாலும் மீண்டும் அதே அழகுடன் புனரமைக்கப்பட்டு பேணப்படுகின்றது.

வடக்கே யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியினாலும், கிழக்கே 6ஆம் குறுக்குத் தெருவினாலும் தெற்கே பாங்ஷால் வீதியாலும், மேற்கே செண்.ஜேம்ஸ் மேற்கு வீதியாலும் சூழப்பட்டுள்ள ஆலயம், பிரதான வீதியை நோக்கிய வண்ணம் (வடக்கு நோக்கி) அமைந்துள்ளது.

ஆலயத்தின் நீளம் 232 அடி (முன் மண்டபம் நீங்கலாக), அகலம் 82 அடி, தூபிமாடத்தின் (டோம்) உயரம் 81 அடி, முகப்பின் உயரம் 58 அடியாகும். ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட ஆறு படிகளில் இரண்டு மண்ணில் அமிழ்ந்துள்ளன.




ஆலயத்தின் முகப்பில் அழகான முன் மண்டபமும் இருமருங்கிலும் சிறிய தூபிமாடங்களைக் கொண்ட மணிக்கோபுரங்களும் அமைக்கப்பட்டுப் பேரழகுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது.

ஆலயத்தின் உயர்ந்த தூபமாடம் ரோமாபுரியிலுள்ள புனித பேதுருவானவர் தேவாலயத்தைப் போன்ற தோற்றத்தை உடையதாக இருக்கின்றது. ஆலயத்தின் உள்ளும் புறமும் பல சிற்ப வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றன. தூபிமாடத்தின் தெற்கு, கிழக்கு, மேற்குப் பக்கமுள்ள முக்கோணங்களில் அனைவரையும் கவரக்கூடிய வகையில் மூன்று சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கண்ணுக்கு விருந்தான உயர்ந்த தூபிமாடங்களைக் கொண்ட மணிக்கோபுரங்கள் இரண்டும் தமக்கு இடையிலுள்ள முன் மண்டபத்தைத் தாங்கியிருக்க, முன்னால் இரண்டு தூண்கள் முண்டு கொடுப்பது போலவும் காட்சியளிக்கிறது. ஆலயத்தின் உள்ளே பெருந்தொகையான மக்கள் குழுமியிருந்து தேவாராதனைகளில் பங்கு பற்றக் கூடிய வண்ணம் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

கட்டடக்கலை தவிர இதன் வரலாற்று முக்கியத்தின் , மக்களின் கூட்டு நம்பிக்கையின் ஒரு சின்னமாக இருப்பதனால் , இதுவொரு நிலத்தின் முக்கிய மரபுரிமைச் சின்னமாகக் கருதப்படுகின்றது. மேலும் இங்கு நடை பெறும் பூசைமுறைகள் , திருவிழாக்கள் ஐரோப்பிய கிறிஸ்தவ நடைமுறையில் இருந்து விலகி இங்குள்ள மக்களின் வாழ்வியலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட நடை முறைகளாலும் நம்பிக்கைகளாலும் கட்டமைக்கப்படுவது சிறப்பானதாகும், ஈஸ்டர், நத்தார் முதலிய திருவிழாக்களும் பண்டிகைகளும் இங்கு ஒரு பெரும் பண்பாட்டு அசைவாகவும் மத பேதமின்றி மக்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளாகவும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இ**லங்கையிலுள்ள வயது கூடிய பெருக்குமரம் மன்னார் பள்ளிமுனையில் உள்ள பெருக்குமரமே என்று பலரும் கருதுவர். அது 19.51 மீற்றர் சுற்றளவும் 7.5 மீற்றர் உயரத்துடனும் நிற்கிறது.

இதன் விஞ்ஞான பெயர் பெயோபோப் (baobab)ஆகும்.

இந்த மரத்தின் விட்டம் பெரிதாக காணப்படுவதாலேயே இதனை பெருக்க மரம் என்கின்றோம். இதற்கு விசேடமாக இன்னுமோர் பெயரும் உண்டு. அதாவது இயற்கை தந்த நீர்க்கலசம் என்பதே அதுவாகும்.

ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்னர் அராபிய வர்த்தகர் களால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என நம்பப்படு கின்றது. இலங்கையில் தற்போது 40 இற்கும் மேற்பட்ட பெருக்கு மரங்கள் காணப்படுகின்றது. அதிலும் 34 மரங்கள் மன்னாரில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




பெருக்க மரத்தில் எட்டு இனங்கள் உள்ளன. அதில் ஆறு இனங்கள் மடகாஸ்கருக்குச் சொந்தமானது. மற்றொன்று ஆபிரிக்காவுக்கும் அரேபிய தீபகற்பத்துக்கும் இன்னொன்று அவுஸ்திரேலியாவுக்கு சொந்தமானதாகும்.

இது ஐந்து முதல் முப்பது மீற்றர் உயரத்திற்கு வளரக்கூடியது. ஏழு முதல் பதினொரு மீற்றர் விட்டம் கொண்டது. பெருக்க மரங்கள் தமது உடற்பகுதியில் சுமார் 120000 லீற்றர் நீரை சேமித்து வைக்கக்கூடியவை. இந்த இசைவாக்கம் கடுமையான வறட்சியை தாங்குவதற்காகும்.

இது மட்டுமன்றி இதில் சேமிக்கப்படும் மழை நீரானது விற்றமின்களைக் கொண்டது, போசணை மிக்கது. பெருக்க மரத்தின் இலை தளிர்களை பண்டைய மக்கள் உணவுக்காக பயன்படுத்தி உள்ளனர். இந்த இலைகள் கீரைகளின் சத்துக்களை உடையன.

மன்னாருக்கு பெருமளவில் வருகை தருகின்ற உல்லாச பயணிகள் இதனை பார்வை இடுவது மட்டுமன்றி ஞாபகங்களை பகிர புகைப்படங்களையும் எடுத்துச் செல்கின்றனர்.


இது போன்ற பெருக்க மரங்கள் நெடுந்தீவு போன்ற இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் அரிதாக அவதானிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு (கிழக்கு), புங்குடுதீவு (புளியடித்துறை), பூநகரி (வாடியடி), மன்னார், மாந்தை (திருக்கேதீஸ்வரம்), குதிரைமலை, முனீஸ்வரம், பொன்பரப்பி, திருகோணமலை, கச்சதீவு, உடுப்பிட்டி முதலான இடங்களில் பெருக்குமரத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குப்பைமேட்டு கொலைகள்



■ ஆதங்கன்



புத்தாண்டு பட்டாசுகளுக்குப் போட்டியாக குதூகலக் குரல்கள் வானை அதிரச் செய்து கொண்டிருந்தன. எல்லா வீடுகளிலும் மகிழ்வின் ரேகைகள் பலமாகப் பதிந்திருந்தன. புத்தாடைகளோடு சின்னஞ்சிறுசுகள் கையில் “கிரிபத்தோடு” ஓடித் திரிந்துகொண்டிருந்தார்கள்.

இந்த முறை தொடர்ச்சியாக நாலைந்து நாள்கள் விடுமுறை என்பதால் தூர இடங்களில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றாய் கூடியிருந்தார்கள். கூடிக் குதுகலித்தலை விடவும் வேறேதும் ஆனந்தம் உண்டோ அவர்கள் வாழ்வில்?

அந்தக் குடிமனைகளில் இருந்தவர்கள் அத்தனை பேரும் அன்றாடம் காய்ச்சிகள். ஒவ்வொருவரும் வேலைக்குப் போய்விட்டு வந்தால்தான் வீட்டில் அடுப்பு எரியும். தங்கள் வீட்டில் அடுப்பெரிய வேண்டும் என்பதற்காக குடும்பத்தைப் பிரிந்து வெவ்வேறு இடங்களில் கூலிவேலைக்குச் சென்று விடுவார்கள் குடும்பத் தலைவர்கள். இப்படியான பண்டிகைகளில் கிடைக்கும் விடுமுறைகள்தான் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரையும் அவர்களின் குடிசைக்குள் ஒன்று சேர்க்கின்றது. இந்த முறையும் அந்த ஒன்று சேர்தலில் மகிழ்ச்சிக்கடலில் அவர்கள் திளைத்திருந்த தருணத்தில் கேட்டது அந்த வெடிப்பொலி.

“படீர்”

காதைச் செவிடாக்கும் அந்தச் சத்தம் ஏதோ புதிய வகை பட்டாசின் ஒலி என்று நினைத்து எவரும் அதைக் கணக்கெடுக்கவில்லை. அப்படி கணக்கெடுக்காததன் விளைவுக்கு அவர்கள் மிகப்பெரும் விலையை கொடுக்க வேண்டியிருந்தது.

வெடியோசை கேட்ட அடுத்த நிமிடமே மூக்கை அரிக்கும் தன்மையோடு துர்நாற்றம் அந்தப் பகுதி எங்கும் வியாபித்துக்கொண்டது. கடல் அலை அடிப்பது போன்று தொடர்ச்சியாக பேரிரைச்சல். அதற்குக் கூட்டணி அமைத்துக் கொண்டுகூக்குரல்கள். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடும் காலடி ஓசைகள். மூச்சுத் திணறும் உயிரின் கடைசி ஒலிகள்

பெற்றோரை தொலைத்த குழந்தைகளின் கேவல்கள். அவலங்களின் கூட்டொலியும் நாற்றமுமாக அந்த இடம் மாறிப்போக, குடிமனை இருந்த இடங்கள் எங்கும் குப்பைமேடு வந்து குந்திக்கொண்டது.

இலங்கையின் இந்த வருடப் புத்தாண்டு பரிசாக மீதொட்டமுல்ல குப்பை மேட்டு மரணங்கள் அமைந்துவிட்டன. சுனாமிபோல பெரும் வெடிப்பொலியோடு “ஆ” வென்று வாய் பிளந்தபடி வந்த குப்பை கள் முப்பதுக்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொண்டன.

உண்மையில் இந்த உயிர்கள் பறிபோனமைக்கு அரசே முழுமுதற்காரணம். இதை அனர்த்தம் என்று சொல்வதை விடவும் கொலைகள் என்பதே பொருத்தமானது. இந்தக் குப்பை மலை இயற்கையாக உருவானதல்ல. அடித்தட்டு மக்கள் வாழும் குடியிருப்பு பகுதி ஒன்றை வலிந்து குப்பைக் காடாக்கியது கடந்த மஹிந்த அரசு. அதேவழியில் நல்லாட்சி அரசும் பயணப்பட்டது. தங்கள் வாழிடத்தில் வளர்ந்துகொண்டே செல்லும் குப்பைமேட்டை அகற்றக்கோரி அந்தப் பகுதி மக்கள் செய்யாத போராட்டங்கள் இல்லை. எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்கொலிகளே. குப்பைமேடு குன்றானது. குன்று மலையாக மாறியது. இப்படியே விட்டிருந்தால் சில வருடங்களில் “இலங்கையிலேயே உயரமான மலை எது?” என்ற கேள்விக்கு பதிலாக “மீதொட்டமுல்ல குப்பை மலை” என்ற பதிலை மாணவர்கள் எழுத வேண்டியிருந்திருக்கும்.

நல்ல வேளையாக இப்போது சிதறிக்கொட்டுண்டு போயுள்ளதால் அதற்குச் சந்தர்ப்பம் இல்லாமற் போய்விட்டது. மக்கள் வாழும் பகுதிகளில் இப்படியான கழிவுகளை வீசும் இடமாக மாற்றுவது எந்தவகையில் நியாயம் என்று எவருக்கும் தெரியாது. எத்தனையோ புறம்போக்கான நிலங்கள் வெறுமையாக இருக்கையில் அவற்றை விடுத்து சனங்களைத் தாங்கி நிற்கும் நிலங்களையே அரசும் அதற்குத் துணையாக நிற்கும் நிறுவனங்களும் குறிவைக்கின்றன. மீதொட்டமுல்லயில் குப்பை மலை உருவாக முன்னர் கொழும்பு புளுமெண்டல் பகுதியிலேயே தலைநகரக் கழிவுகள் எல்லாம் கொட்டப்பட்டு வந்தன.

(18 ஆம் பக்கம் பார்க்க)



## மீதொட்டமுல்ல - குப்பை மேட்டு வரலாறு

இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் இன்று திரும்பி பார்க்க செய்திருக்கும் ஒரு பெயர்.

கொழும்பு - கொலன்னாவை பகுதியிலேயே இந்த மீதொட்டமுல்ல அமைந்துள்ளது.

மீதொட்டமுல்ல என்ற பெயர் உச்சரிக்கப்படும் போதே, அனைவரது நினைவுக்கும் வருவது குப்பை மேடு.

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பகுதிகளிலுள்ள குப்பைகள் மீதொட்டமுல்ல பகுதியிலேயே கொட்டப்பட்டு வருகின்றது.

கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட குப்பைகள் புளுமெண்டல் பகுதியில் முன்னர் கொட்டப்பட்டு வந்திருந்தன.

புளுமெண்டல், குப்பை மேடு எனினும், அங்கு ஏற்பட்ட சில சர்ச்சைகளை தொடர்ந்து குப்பைகளை கொட்டும் செயற்பாடு மீதொட்டமுல்லை பகுதிக்கு கடந்த ஆட்சிகாலத்தில் மாற்றப்பட்டிருந்தது.

அதாவது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலப் பகுதியான 2008ஆம் ஆண்டு இந்த குப்பைகள் மீதொட்டமுல்ல பகுதிக்கு திருப்பி விடப்பட்டிருந்தன.

எனினும், 2008ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதியிலும் இந்தப் பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டு வந்துள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

மீதொட்டமுல்ல குப்பை பிரச்சினை காரணமாக பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நீண்டகாலமாக செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டு வந்த ஊடகவியலாளர் கசுன் புஸ்சேவெல பி.பி.சி சந்தேசயவுக்கு சில தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கிராமவாசிகளது கருத்துக்களின் பிரகாரம், 1989ஆம் ஆண்டு குறித்த பகுதியில் பொத்துவில் என்றழைக்கப்படும் வயலொன்று இருந்துள்ளது.

எனினும், குறித்த காலப் பகுதியில் கொழும்பு நகரப் பகுதிக்கு ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கு காரணமாக அந்த வயல் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு அழிவடைந்த வயல் காணப்பட்ட பகுதி பின்னர் நிரப்பப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகளை மேற்கோள்காட்டி பி.பி.சி. சந்தேசய செய்தி வெளியிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து முல்லேரியா, கொட்டிகாவத்தைமற்றும் கொலன்னாவை ஆகிய நகர மற்றும் பிரதேச சபைகள் மூன்றினதும் குப்பைகள், பொத்துவில் வயல் காணப்பட்ட பகுதிக்கு கொண்டு வரப்பட்டு கொட்டப்பட்டுள்ளன.

மூன்று நகர மற்றும் பிரதேச சபைகளின் அதிகாரங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்பட்ட குப்பைகள் மாத்திரமே அந்தப் பகுதியில் கொட்டப்பட்டுள்ளன.

1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட மீதொட்டமுல்ல குப்பை மேடு, இன்று 20 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுவதாக பி.பி.சி. சந்தேசயவுக்கு ஊடகவியலாளர் கசுன் புஸ்சேவெல தெரிவித்துள்ளார்.

8 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட குப்பைகள் இந்தப் பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றமையால், சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சரிவு ஏற்படுவதற்கு முன்னரான மீதொட்டமுல்ல குப்பை மேடு பகுதியில் குப்பைகளை கொட்டவேண்டாம் என கடந்த ஆட்சி காலத்தில் உயர்நீதிமன்றம் உத்தரவொன்றை பிறப்பித்திருந்ததாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், நீதிமன்ற தீர்ப்பை பொருட்படுத்தாது தொடர்ந்தும் மீதொட்டமுல்ல பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பின்னணியிலேயே மீதொட்டமுல்ல குப்பை மேடு புத்தாண்டு தினத்தில் சரிந்து வீழ்ந்துள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டின் தற்போதைய நிலை இந்தச் சம்பவத்தினால் 180 குடும்பங்களைச் சேர்ந்த 625 பேர் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குப்பை மேட்டை அண்மித்துள்ள மக்களுக்கும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த பின்னணியில் மீதொட்டமுல்ல பகுதியில் குப்பைகளை கொட்டும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்களின் பிரகாரம், மூன்று தசாப்த காலமாக காணப்பட்ட ஒரு பெரும் பிரச்சினை பேரழிவொன்றின் பெறுபேற்றை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நீயே அறிவாய்

15



ஒரு தொழிலுக்கு ஊழியர்கள்தான் மிக முக்கியமான பலம். தொழில் முனைவோருக்கு ஊழியர்களைக் கையாளத் தெரிந்திருப்பது மிகவும் அவசியம். ஊழியர்களைக் கையாளும் திறமை மட்டும் உங்களுக்கு வாய்த்துவிட்டால், உங்களால் எந்தச் செயலையும் வெற்றிகரமாக நடத்தி முடிக்க முடியும். ஊழியர்களைக் கையாளுவதில் சூட்சுமங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஊழியர்கள் மேலாண்மையில் கையாள வேண்டிய முக்கியமான படிநிலைகளை விரிவாகப் பார்க்கலாம்.

**ஊழியர்களை தெரிவு செய்தல்**

ஊழியர்களுக்கான தெரிவு முறையைத் திட்டமிடுவதற்கு முன், நம்முடைய தொழிலைப் பற்றி முழுமையாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எந்தெந்த வேலைகளுக்கு நாம் ஊழியர்களைத் தெரிவுசெய்ய இருக்கிறோம், அவர்களுக்கு என்னென்ன கல்வித் தகுதி, தொழில்நுட்ப தகுதி, குணநலன்கள் இருக்க வேண்டும் என்பது பற்றி எல்லாம் நமக்குத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

பொதுவாக, உடலுழைப்பு தொடர்பான வேலைகளுக்கு எந்தத் தகுதியும் பார்க்காமல் ஆள்களைத் தேர்வு செய்கிறார்கள். மூளையைப் பயன்படுத்தி செய்யும் வேலைகளுக்கு, முக்கியமாக கல்வித் தகுதி, சில எழுத்துத் தேர்வுகள் மற்றும் தகவல் தொடர்பு திறமை போன்றவை பார்க்கப்படுகின்றன. முன் அனுபவமும் ஒரு முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகிறது. எல்லா தொழிலுக்கும், எல்லாப் பணியாளர்களுக்கும் இந்த ஒரே தேர்வு முறையைப் பயன்படுத்த முடியாது. நம்முடைய தொழிலுக்கு என்ன, எந்த வேலைக்கு ஆள் எடுக்கிறோம் என்பதைப் பொறுத்து, தெரிவு செய்யும் முறை மாறும். தெரிவு செய்யும் முறையில் தெளிவு இருந்தால், திறமையான நபர்களை எளிதில் தேர்ந்தெடுக்கலாம்.

**சரியான நபரைத் தெரியுங்கள்**

எந்த வேலைக்கு நாம் ஆள்களை எடுக்கிறோமோ, அந்த வேலைக்கான சரியான நபரைத் தெரிந்தெடுத்துவிட்டாலே தொழிலுக்கு 75 சதவீத வெற்றியைப் பெற்றது மாதிரிதான். எனவே, தெரிவு முறையைத் திட்டமிட்ட பிறகு தெரிவில் கலந்து கொண்டவர்களின், வேலைக்கு அவசியமான கல்வி மற்றும் பிற தகுதிகளை வைத்து அவர்களை படிப்படியாக வடிகட்ட வேண்டும்.

ஆரம்பத்திலேயே நிறைய ஆள்களை வேலைக்கு நியமிப்பதைத் தவிர்க்க வேண்டும். தொழிலின் அளவுக்கேற்ப தேவையான மற்றும் சரியான ஆள்களை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். பிற தெரிவுகளைக் காட்டிலும் நேர்முகத் தேர்வுக்கு சற்றுக் கூடுதல் முக்கியத்துவம் தர வேண்டும். ஏனெனில் பிற தேர்வுகளைக் காட்டிலும், நேர்முகத் தேர்வில்தான் அவர்களுடைய உண்மையான மனநிலையை நம்மால் அறிய முடியும். அவர்களின் அடிப்படை விவரங்களைக் கேட்டறிந்த பிறகு, வேலைக்குத் தேவையான மனப்பாங்கு அவர்களுக்கு இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களுடைய குடும்பச் சூழ்நிலையைப் பற்றியும், அவர்கள் வளர்ந்த சூழல் பற்றியும், சந்தித்த சவால்கள் பற்றியும் பேசுவது மிகவும் நல்லது.

ஆனால், எதுவும் கட்டாயத்தின்பேரில் இருக்கக்கூடாது. இப்போது பெரும்பாலும் ஏதோ ஒரு படிப்பைப் படித்துவிட்டு, ஏதோ ஒரு வேலைக்குதான் எல்லோரும் போகிறார்கள். அதில் தவறில்லை. ஆனால், விருப்பம் ஒன்றாகவும் வேலை ஒன்றாகவும் இருந்தால், அவர்களால் முழுமையாகத் தன்னைப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள முடியாமல் போகலாம். அப்போது நாம் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாத நிலைதான் உருவாகும்.

எனவே, நேர்முகத் தேர்வின்போதே வேலைக்கு விண்ணப்பித்தவரின் விருப்பம் எதில் இருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள். மொழிக்கு முக்கியத்துவம் அவசியம்தான். ஆனால், சிலருக்குத் தங்கள் மொழியறிவை வளர்த்துக் கொள்வதற்கான சூழல் கிடைக்காமல் இருக்க வாய்ப்புள்ளது. உண்மையாகவே இந்த வேலைக்கு மொழியறிவு மிகவும் அவசியம் என்றால் மட்டுமே அதைக் கறாராகப் பார்க்கலாம். வெளியில் இருந்து தேர்வாளர்களை வைத்து ஊழியர்களைத் தெரிவு செய்தாலும்கூட, நேர்முகத் தேர்வில் தொழில் முனைவோரும் இருப்பது அவசியம்.

**பயிற்சியும் வேலையும்**

ஊழியர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு நேரடியாக அவர்களை வேலையில் இருந்து இறக்கிவிட்டுவிடக்கூடாது. சிறிதுநேரம் ஒதுக்கி, உங்களுடைய தொழில் என்ன, இலட்சியம் (Mission) என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அவர்களுக்கான வேலை என்ன என்பதையும் விளக்க வேண்டும். அதைவிட முக்கியமாக, அவர்கள் உங்களுடைய தொழிலுக்கு எந்தளவுக்கு முக்கியம் என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களிடையே முதல் நாளிலிருந்தே ஓர் உற்சாகத்தை ஏற்படுத்த இந்தச் சந்திப்பு மிகவும் உதவும்.

அடுத்து, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையில் அவர்களுக்குத் தெரியாதவை குறித்து பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சி அளிக்காமல் அவர்கள் நீங்கள் கொடுத்த வேலையை முடிக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. அது முற்றிலும் தொழிலைக் கெடுத்துவிடும். மேலும், பயிற்சியின்போது அவர்களைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டும். அவர்களுடைய கற்கும் ஆர்வம், வேகம் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வது அதற்கேற்ப அவர்களை இயக்க உதவியாக இருக்கும்.

**திறமையை வளர்த்தெடுங்கள்**

பயிற்சிக்குப் பிறகு ஊழியர்களுக்கு வேலை தரப்பட வேண்டும். வேலையின்போது அவர்களின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு அதற்கேற்ப அவர்களை இயக்க வேண்டும். அவர்களுடைய திறமைகள் என்னென்ன என்பதைக் கவனித்து அவற்றை வளர்த்தெடுக்க வேண்டும். அவர்களுடைய திறமைகளை உங்களுடைய தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள். அவர் வேறு ஒரு வேலைக்காக எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவர் திறமைமிக்கவரா? என்பதைக் கண்டறிந்து, அதில் அவருடைய வேலையை மாற்றுவதில் தவறே இல்லை. அப்படி மாற்றுவது தான் அவருடைய திறமைக்கும் தீனி போடுகிற மாதிரி இருக்கும். நம் தொழிலை வளர்க்கவும் சரியாக இருக்கும்.

**ஊழியர்களைக் கையாளும் சூட்சுமங்கள்**

ஒருவருக்குக் கீழே வேலை பார்க்கும் ஊழியர்களை, அவர்களுடைய பணி செயற்பாடு மற்றும் குணநலன்களை வைத்து ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. 50% ஊழியர்கள், 2. 75% ஊழியர்கள், 3. கணக்கான ஊழியர்கள், 4. கடின உழைப்பாளிகள், 5. ஆக்கபூர்வ ஊழியர்கள். இதன்படிதான் அவர்களுடைய உயர்வும் - தாழ்வும் கணக்கிடப்படும். சம்பள உயர்வு, பதவி உயர்வு அல்லது வேலை நீக்கம், பதவி பறிப்பு ஆகியவை இதன் அடிப்படையில்தான் முடிவெடுக்கப்படும்.

இவர்களில் 50 சதவீத ஊழியர்கள், கொடுத்த நேரத்தில் கொடுத்த வேலையில் பாதியை முடித்துத் தந்துவிடுவார்கள். வேலை நேரத்தில் தேவையற்ற வேலைகளைப் பார்ப்பதே இதற்குக் காரணம். இவர்களை அவ்வப்போது கண்காணிக்கப்பட வேண்டும். தொடர்ந்து இவர்களோடு சந்திபுகளை ஏற்படுத்த வேண்டும். இவர்களுடைய பிரச்சினை என்ன என்பதை அவர்களோடு பேசித் தெரிந்து கொண்டு மாற்ற முயற்சிக்க வேண்டும். அப்போதும் இவர்கள் மாறவில்லை என்றால், இவர்களை இலாகவமாக வெளியேற்றிவிட வேண்டும்.

'அருகில் ஆள் இருந்தால்தான் வேலை செய்வேன்' என்கிறவர்கள் 75% வேலை பார்க்கிற ரகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், நம்மால் அவர்களுடனே நின்றுகொண்டு சாவி கொடுத்துக் கொண்டு இருக்க முடியாது. இவர்களை நாம் அடுத்து பார்க்கப் போகிற ஊழியருடன் சேர்ந்து வேலை செய்யுமாறு மாற்றிவிட வேண்டும். அப்படி செய்யும்போது அவர்களுடைய உற்பத்தித் திறன் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அப்படியும் அதிகரிக்க முடியாவிட்டால், அவருக்கான சம்பள உயர்வு அவரை விடக் கூடுதலாக வேலை செய்பவரைக் காட்டிலும் குறைவாகவே இருக்க வேண்டும்.

கணக்காக வேலை பார்ப்பவர்கள், வேலையையும் நேரத்தையும் கணக்காக வைத்திருப்பார்கள். அவர்களால் உங்களுக்கு எந்தக் குறைவும் இருக்காது. முடிந்த வரை இவர்களை வெளியே விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இவர்கள் அவர்களுடைய வேலைக்கு மேல் எதையும் யோசிக்க மாட்டார்கள். வேறு வேலைக்குத் தாவுவதையும் யோசிக்க மாட்டார்கள். அதற்கான சூழலை நீங்களே உருவாக்கி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது, அவர்களை அதிகம் சீண்டாமல் அவர்களுக்கான வேலைகளைக் கொடுப்பதில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும்.

கடின உழைப்பாளியாக இருப்பவர்கள் நேரம், காலம் பார்க்காமல் வேலை செய்வார்கள். அவர்களை நாம் அவ்வப்போது அடையாளப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் சன்மானத்தைக் காட்டிலும் அங்கீகாரங்களை விரும்புவார்கள். ஆனால், அவர்களுக்கான சன்மானங்களை அதாவது, சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆகியவற்றையும் சரியான நேரத்தில் தருவது நல்லது. ஏனெனில் இவர்களைப் போன்றவர்கள் மிக அரிதாகவே நமக்குக் கிடைப்பார்கள்.

ஆக்கபூர்வ ஊழியர்கள் ஒரு தொழிலுக்கு அதிர்ஷ்ட தேவதைகள் போன்றவர்களாவர். ஏனெனில் இவர்கள் கொடுக்கும் யோசனைகள் சில நேரங்களில் உங்கள் தொழிலையே உச்சாணியில் ஏற்றிவிடக் கூடியவையாக இருக்கும். இவர்கள் வேலை செய்யும் அதே நேரத்தில், உங்களுக்கும் சேர்த்து யோசிப்பவர்கள். அது திட்டமிட்டும் நடக்கலாம், எதேச்சையாகவும் நடக்கலாம்.

உதாரணமாக, கோல்கேட் பேஸ்ட் நிறுவனத்தில் நடந்த சம்பவத்தைச் சொல்லலாம். கோல்கேட் பேஸ்ட்டில் முன்பு துளை சற்று சிறியதாகவே இருக்கும். இதைப் பார்த்த அந்த நிறுவனத்தின் துப்புரவுத் தொழிலாளி ஒருவர், 'பேஸ்ட்டில் துளை சிறியதாக இல்லாமல் பெரிதாக இருந்தால், அதிகமாக பேஸ்ட் செலவாகும். விற்பனையும் அதிகமாகுமே' என்றாராம். இப்படிக் கிடைக்கும் யோசனைகள் மிக முக்கியமானவை. இவர்களில் சிலர் யோசனைகளைப் பகிர்ந்து கொள்வார்கள், சிலர் பயத்தில் சொல்லாமலும் இருப்பார்கள்.


**ஆரோக்கியமான உறவு**

நம்மிடம் பணியாற்றும் ஊழியர்களை நம் குடும்பத்தில் ஒருவராகப் பாவித்து நடத்தவேண்டும். அவர்களுடைய குடும்பத்தைப் பற்றி அவ்வப்போது விசாரிக்க வேண்டும். குடும்ப நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டும். நீங்கள் காட்டும் அன்பும் அக்கறையும்தான் உங்களுக்கு விசுவாசமான ஊழியர்களைப் பெற்றுத்தரும். ஏனெனில் தொழில் வெற்றி என்பது ஒரு கூட்டு முயற்சி. நீங்கள் நினைப்பதையும், அதை ஊழியர்கள் சரியாகச் செயற்படுத்துவதையும் அவர்களுக்கும் உங்களுக்கும் இடையேயான உறவுதான் தீர்மானிக்கும். இதனால் உங்களுடைய இலக்கையும் வேகமாக அடைய முடியும். அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைக் கேட்டு, அதற்கான தீர்வுகளையும் திட்டமிட வேண்டும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தவாரம் நடைபெற்ற WWE போட்டியில் ஊடகவியலாளர் ஒருவருக்கு றோமன் றெயின்ஸ் நேர்காணல் வழங்கிக் கொண்டிருந்தபொழுது எதிர்பாராத விதமாக அவர் மீது பிரவுண் ஸ்ரோமன் தாக்குதல் நடத்தினார். இதன் போது படுகாயமடைந்த றோமன் றெயின்ஸை சிகிச்சைக்காக அம்புலன்ஸில் ஏற்றிய பொழுது கோபம் அடங்காத பிரவுண் ஸ்ரோமன், றோமன் றெயின்ஸை அம்புலன்ஸுடன் சேர்த்து கவிழ்த்த தருணம்.






# கேள்விக்குள்ளான தெரிவு

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கி உள்ளன. இந்நிலையில் தற்போதைய தொடரின் சிறந்த பதினொருவர் அணியைத் தெரிவு செய்துள்ளார் மன்செஸ்ரர் யுனைற்றட் அணியினதும், வேல்ஸ் அணியினதும் முன்னாள் வீரரான றியான் கிக்ஸ். 44 வயதான றியான் கிக்ஸ் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை மன்செஸ்ரர் யுனைற்றட் அணிக்காக விளையாடியவர். மன்செஸ்ரர் யுனைற்றட் சார்பில் அதிக போட்டிகளில் (672) பங்குபற்றி 114 கோல்கள் அடித்தவர். அத்தோடு ஆயிரம் போட்டிகளில் விளையாடிய றியான் கிக்ஸ் 2009 ஆம் ஆண்டு பி.பி.ஸி. வழங்கிய சிறந்த விளையாட்டு ஆளுமைக்கான விருதையும் பெற்ற பெருமைக்குரியவர்.

தற்போது றியான் கிக்ஸ் வெளியிட்டுள்ள பதினொருவர் அணியில் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி சார்பில் கோல் காப்பாளரான டேவிட் டீ கே மற்றும் அன்ரனியோ வலன்சியா ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவரது அணியில் அதிக பட்சமாக ரொற்றின்காம் அணியைச் சேர்ந்த ஹரி கெயின், மௌஸா டெம்பிளே, அல்டர் வெறில்ட், டானி றோஸ், டமிடெல் அலி ஆகிய 5 வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள். அத்தோடு செல்சி அணிசார்பில் ஈடன் ஹசாட், என்கோலா கன்ரே மற்றும் டேவிட் லூயிஸ் ஆகிய 3 வீரர்கள் தெரிவானதோடு பதினொராவது வீரராக லிவர்பூல் அணியின் அடம் லலானாவும் இடம்பெற்றுள்ளார்.




இவ்வாறான அணி ஒன்று தெரிவு செய்யப்படும் பொழுது, முக்கிய வீரர்கள் விடுபடுவதும் அது குறித்துச் சர்ச்சை எழுவதும் வழக்கமான ஒன்றே. அதற்கு றியான் கிக்ஸின் பதினொருவர் அணியும் விதிவிலக்கல்ல. அந்தவகையில் மன்செஸ்ரர் யுனைற்றட் அணி சார்பில் இந்தப் பருவகாலத்தில் அதிக கோல்கள் (28) அடித்தவர் சுவீடனின் இப்ராகிமோவிக். ஆனாலும் அவரை விடுத்து அந்த அணி சார்பில் ஏனைய இரண்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அதிலும் ரொற்றின்காம் அணிசார்பில் அதிக கோல்கள் அடித்த ஹரி கெயின் அணியில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், இப்ராகிமோவிக் தெரிவு செய்யப்படாதது றியான் கிக்ஸின் பதினொருவர் பட்டியலைக் கேள்விக்குள்ளாக்கி உள்ளது.

தொகுப்பு:
சி.விமலன்

# அசத்தலான ஆரம்பம்



இம்முறை ஐ.பி.எல். போட்டிகளில் குஜராத் லயன்ஸ் அணியின் மித வேகப்பந்துவீச்சாளர் அன்ட்ரூ ரையும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சாமுவேல் பத்ரியும் ஒரே நாளில் ஹற்றிக் சாதனை படைத்தமை நாம் அறிந்ததுதான். இதில் அன்ட்ரூ ரையை 2015ஆம் ஆண்டு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்கி இருந்தாலும், ஒரு போட்டியில் கூட அவர் விளையாடவில்லை. அதுபோல சென்ற முறை அவரை குஜராத் லயன்ஸ் அணி வாங்கி இருந்தாலும் அங்கும் ஒரு போட்டியில் கூட அவர் விளையாடவில்லை. இந்த முறை தான் குஜராத் லயன்ஸ் பங்குபற்றிய மூன்றாவது போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கி முதல் போட்டியிலேயே ஹற்றிக் சாதனை புரிந்துள்ளார். ஆக மொத்தம் ஐ.பி. எல். தொடரில் இரண்டு அணிகளில் இடம்பெற்றாலும் 34 போட்டிகளில் விளையாடுவதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வாய்க்கவில்லை.

30 வயதான அன்ட்ரூ ரை 2014 / 15 பருவ காலத்துக்கான பிக்பாஸ் தொடரில் பேர்த் ஸ்கொர்ச்சர்ஸ் அணிசார்பில் விளையாடிய போது தான் இவரது திறமையை பலரும் இனங்கண்டனர். ஆனாலும் அவுஸ்ரேலியா சார்பில் 2016 ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிரான சர்வதேச 'இருபதுக்கு 20' போட்டியிலேயே இவருக்கு அறிமுகமாகும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்த முறை நடைபெற்ற பிக்பாஸ் தொடரிலும் பிறிஸ்பன் ஹீற் அணிக்கெதிராக இவர் ஹற்றிக் எடுத்திருந்தார். இதன் மூலம் ஒரு வருடத்தில் இரண்டு ஹற்றிக் எடுத்த வீரர் என்ற சாதனையை யுவராஜ் சிங்குடன் பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து அன்ட்ரூ ரை, "எனக்கான வாய்ப்பு ஒருநாள் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தேன். ஆதலால் 34 போட்டிகளில் விளையாடாமல் திடீரென கிடைத்த வாய்ப்பால் நான் எந்தவிதமான அழுத்தத்துக்கும் ஆளாகவில்லை. உண்மையில் இதைவிட சிறந்த அறிமுகப்போட்டி எனக்கு கிடைக்காது. புனே அணிக்கெதிரான முதற்போட்டியில் நான் 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தியதற்கு, மறுமுனையில் சிறப்பாகப் பந்துவீசி துடுப்பாட்டவீரர்களுக்கு நெருக்கடி கொடுத்த ஜடேஜாவும் ஒரு காரணம்" என்கிறார்.

அத்தோடு தனது பந்துவீச்சின் பலமே வேகம் குறைந்த பந்துகள் தான் என்கிறார். 2011ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் சகீர்கான் வீசிய இத்தகைய பந்துகளே தனக்கு உந்துசக்தியை அளித்தன.

அன்ட்ரூ ரை வீசும் பந்துகளில் 60 வீதமானவை 120 கிலோ மீற்றர் வேகத்திலும் குறைவானவையே. முதல் போட்டியில் கைப்பற்றிய 5 விக்கெட்டுக்களில் 4 விக்கெட்டுக்கள் வேகம் குறைந்த பந்துகள் மூலம் பெறப்பட்டவையே. பல பெரிய பயிற்சியாளர்களிடம் எமது ஆட்டத்திறனை வளர்த்துக்கொள்ள ஐ.பி.எல். போட்டிகள் சிறந்த களமாக விளங்குகிறது என்றும் - கூறியுள்ளார்.

# வலிகளைத் தாங்கி

எந்தவொரு விளையாட்டை விளையாடும் பொழுதும் வீரர்கள் புறக்காரணிகளின் தாக்கத்துக்கு ஆளாகாமல் தமது மனதை ஒருமுகப்படுத்தியே விளையாடுவதுண்டு. இதற்காகவே யோகா பயிற்சிகளும் வீரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் விதிவிலக்காக வீரர்கள் சில குடும்ப உறவுகளை இழக்கும் பொழுது மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அவற்றையும் தாண்டி தமது மனதைக் கட்டுப்படுத்தி போட்டியில் கலந்து கொண்ட சில சம்பவங்களும் கிரிக்கெட் உலகில் நடைபெற்றிருக்கின்றன. 1999ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின்போது சச்சின் டெண்டுல்கரின் தந்தையான ரமேஸ் டெண்டுல்கர் இறந்தார். இதனால் லீக் போட்டிகளில் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் விளையாடாத அவர், தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து விட்டு கென்யாவுக்கெதிரான அடுத்த போட்டியில் ஆட்டமிழக்காமல் 140 ஓட்டங்களைப் பெற்று இந்தியா வெல்வதற்கு காரணமாக இருந்தார்.

அதேபோல சில வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் நடைபெறும் ரஞ்சி கிண்ணப் போட்டியின் முக்கியமான ஆட்டத்தில் பங்குபற்றுவதற்காக விராட் கோலி தயாரானபோது அவரது தந்தை காலமானார். ஆனாலும் அந்தப் போட்டியின் முக்கியத்துவம் கருதி விராட் கோலி போட்டியில் விளையாடி விட்டே பின்னர் தனது தந்தையின் இறுதிக்கிரியைகளை நிறைவேற்றி இருந்தார். அந்தப் போட்டியில் அவர் 90ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான - அசாதாரண சந்தர்ப்பங்களில் போட்டி முக்கியமா? என்ற கேள்வி எழுந்தாலும், கிரிக்கெட் ஒரு மதமாகக் கொண்டாடப்படும் ஒருநாட்டில் சடங்குகள் கூட விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே அமைந்து விடுகின்றன.

தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி.எல்.போட்டிகளில் டெல்லி டேர்டெவில்ஸ் - பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி 15 ஓட்டங்களால் தோல்வி அடைந்திருந்தது. ஆனாலும் அதில் அரைச்சதம் அடித்தவர் டேர்டெவில்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான 20 வயது றிஷா பந்த். மேற்படி போட்டி நடைபெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே அவருடைய தந்தையார் காலமாகி இருந்தார். அதில் கலந்து இறுதிச்சடங்கை நிறைவேற்றிய பின்னர் அவர் விளையாடிய முதற் போட்டியிலேயே 36 பந்துகளில் 57 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

எனவே போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி தோற்றாலும் தந்தையை இழந்த சோகத்துக்கு மத்தியிலும் அணி வெற்றி பெறுவதற்காக இறுதிவரை போராடிய அவரின் குணத்தை ரசிகர்கள் சமூகவலைத்தளங்கள் வாயிலாகப் பாராட்டியுள்ளனர்.



தந்தையின் இறுதிக் கிரியையின் போது....




50 ஓட்டங்களை எடுத்து தனது அணியின் வெற்றிக்காக போராடிய போது...

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 22.04.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org